T. 768.

புகழேந்திப்புலவர்

இயற்றிய

# பவளக்கொடிமாலை.

சித்திரப்படப் பதிப்பு.

MADRAS:
PRINTED AT THE ALBINION PRESS,
VEPERY HIGH ROAD.

1912.

*All rights reserved.*] [ரிஜிஸ்தர் செய்தது.

# முகவுரை.

சீரார் மதியணிந்த சிவனார் திருவருளால்
ஏராருஞ் செம்பவள இளங்கொடியி லேபிறந்து
சேராம்பு ராஜருக்குப் பிள்ளைகலி தீர்த்தவளாம்
பவளக் கொடிமாலை பாடினா ரேனவழங்கும்,

புகழேந்திப் புலவர் என்பவர், 'மேற்கே சேலம் ஜில்லாவி லுள்ள பவளமலையும், வடக்கே திருவேங்கடமென்னுந் திருப்பதியும், கிழக்கே கடலும், தெற்கே பிணாகி யென்னும் பெண்ணையாறும் எல்லையாகப் பெற்று இருபதுகாத நீளமுள்ளது தொண்டைநாடு' என்னுங் கருத்தமைந்த அடியிற் குறித்த வெண்பாவின்படி யமைந்துள்ள நமது தொண்டைநாட்டிலே, செங்கற்பட்டிற்குச் சமீபத்தில் உள்ள களத்தூரென்று வழங்கும் பொன் விளைந்த களத்தூரிலே, துளுவ வேளாளர் குலவிளக்காய்ப் பிறந்தவர். இவர் இளமையிலேயே செந்தமிழ் இலக்கிய இலக்கணக் கடலைக் கரைகண்ட புலவர் திலகராய் விளங்கினார். ஆகையினால் பாண்டியனிடத்திற் சென்று, தமது தமிழ்க் கல்வித்திறத்தைக் காட்டி, அவனால் நன்குமதிக்கப்பெற்று, அவனுடைய சமஸ்தான வித்வான்களில் ஒருவராய் விளங்கி யிருந்தார். இவரை ஆதரித்த பாண்டியன் பெயர், வரகுண பாண்டியன் இரண்டாவன். இவனுக் கொருமகள் மங்கைப் பருவமடைந்திருந்தனள்; இவளைத் தனக்கு மணம்பேசி முடிக்கும்படி, சோழ நாட்டில் அரசாண்ட குலோத்துங்கச் சோழன், தனது சமஸ்தான வித்வானாகிய ஒட்டக்கூத்தரைப் பாண்டியனிடத்திற்கு அனுப்பி யிருந்தான். அவர் சமயமறிந்து, பாண்

"மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி அணிகிழக்குப்—பார்க்குளொளிர்
தெற்குப் பிணாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு."

டியனை நெருங்கிப் பெண் விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், பாண்டியன் அவரை நோக்கி, "உமது சோழன் எதனால் எங்களைக்காட்டிலும் உயர்ந்தவன் என்று, எங்கள் பெண்ணை விரும்பி உம்மை அனுப்பினான்?" என்றான். அதற்குக் கூத்தர்,

"காவேரிக்கு வைகை ஒப்பாகுமா?"
"சூரியகுலத்துக்குச் சந்திரகுலம் ஒப்பாகுமா?"
"புலிக்கொடிக்கு மீன்கொடி ஒப்பாகுமா?"

என்று சோழனைப் புகழ்ந்து, பாண்டியனை இகழ்ந்து பேசினார். அதுகேட்ட புகழேந்தி மனம் பொறாமல்,

"சம்பந்தரிட்ட ஏடு எதிர் ஏறிப்போனது காவேரியிலா?"
"சிவன்முடியி லேறுவது சூரியனா?"
"திருமால் அவதாரம் புலியா?"

என்று பாண்டியனைப் பெருமைப்படுத்திப் பேசினார். அப்பொழுதே ஒட்டக்கூத்தர்க்குப் புகழேந்திமேற் பொறாமை உண்டாயிற்று.

பெண் பேசி நிச்சயமாய், ஒட்டக்கூத்தர், சோழனிடத்திற்குச் சென்று, செய்தி தெரிவித்தார். சோழன் அவரைத் தனக்குப் பிரதியாக அரச காரியத்தை நிர்வகிக்கவிட்டு, தான் அக்காலத்திய வழக்கப்படி பெண்ணிருக்கும் இடமாகிய பாண்டி நாட்டுக்குத் திருமணஞ் செய்துகொள்ளச் சென்றனன். மண முடிந்து, சிலநாள் அங்குத் தங்கின சோழன், தனது மாதுலனாகிய பாண்டியன் தந்த சீதனப்பொருள்களையெல்லாம், தனக்கு முந்தியே தனது அரண்மனைக்கு அனுப்பினான். அவைகளில் ஒரு பொருளாகப் புகழேந்தியையுங் கண்ட ஒட்டக்கூத்தர், பழம்பகையை மேற்கொண்டு, அவரைச் சிறையி லடைத்து, ஆழாக்கரிசியும் உழக்கு உப்பும் கொடுத்துவந்தார். புகழேந்திப்புலவர் தம்மைத்தாமே நொந்துகொண்டு, அச்சிறைச்சாலையில் இருப்பாராயினார். அக்காலத்தில் அவர் அச்சிறைச்சாலை யருகே, தண்ணீர்க்குச் செல்லும் பெண்கள் காதுகட்கு இனிமையாகவும், மனங்கட்குக் களிப்பாகவும் எளிய தமிழ் நடையில் இந்தப் பவளக்கொடிமாலை, அல்லியரசாணிமாலை, புலந்திரன் களவு

கோவலன் கதை, பஞ்சபாண்டவர் வனவாசம் முதலிய சிறு நூல்களை * நங்கைப்பாட்டாகப் பாடினாராம்.

பாண்டியன் மகளாகிய தனது மனைவியோடு சோழன், தனது நாடடைந்த சில காலத்துக்குப் பிறகு, இவர் சிறையிலிருந்து விடுபட்டார். இவருடைய அருமை பெருமை தெரிந்து, சோழனாவது, ஒட்டக்கூத்தராவது இவரைச்சிறையிலிருந்து விடுவிக்கவில்லை; பாண்டியன் மகளாகிய சோழன் மனைவி, இவருடைய அருமை பெருமை தெரிந்தவளாதலின், இவரை விடுவிக்க ஏற்பாடு செய்தனள். ஆயினும் இவர் "ஔவியம் பேசேல்" என்ற நீதியை யுணராத ஒட்டக்கூத்தரோடு பழகியிருக்க முடியாமல், சோழநாட்டிற் சிற்றரசனாகிய சந்திரன் சுவர்க்கி யென்பவனிடத்திற் சென்று, சமஸ்தான வித்வானாயிருந்து, அவனுடைய வேண்டுகோளால் நளவெண்பாப் பாடி, "வெண்பாவிற் புகழேந்தி" எனப் பெயர்பெற்றார்.

பவளக்கொடிமாலை யென்பது பவளக்கொடிகளினிடத்தில் அவதரித்த பெண்ணொருத்தியின் கதையின் வரிசை என்று பொருள்படும்.

சேராம்பு மன்னர்கள் செய்தவத்தின் பயனாகச் சிவானுக்கிரகத்தாற் பவளக்கொடிகளிற் பிறந்து, பதினாறு பிராயமட்டும் கலியாணமின்றி, ஆண்பிள்ளையைப்போல் அரசாண்டிருந்தவள் பவளக்கொடி யென்னும் பெண்ணரசி. கிருஷ்ண சகாயம் பெற்றுக் கிருஷ்ணனோடு மைத்துன முறையாக விளங்கி இருந்த அர்ச்சுனன், பாண்டி நாட்டிலே மதுரைமாநகரத்திலே அரசாண்ட அல்லி யென்பவளை மணந்து, அவளுக்கொரு மகன், புலந்தரன் என்பவன்பிறந்திருந்தனன். இவனே பாரதத்திற பப்புருவாகனன் எனப் பெயர் பெற்றனன். அல்லி யென்பவள் பெண்ணரசியே ஆயினும், மீனாக்ஷி அம்மையின் அமிசமாக அவதரித்திருந்தவள் ஆகையால், வீரதீரங்களில் ஆண்மகனைப்போலச் சிறந்திருந்தனள். தனது மகன் புலந்தரனுக்கு ஐந்து வயதாகியும், அர்ச்சு

* இந்நங்கைப்பாட்டு வெண் செந்துறை எனப்படும்; இதன் இலக்கணத்தை அரும்பொருள் விளக்க அகராதியின் இறுதியிற் காண்க.

னன் அவ்வனைக் கவனியாமல், மனைவியையும் மதியாமல், தான் கிருஷ்ணனோடு கூடிக்கொண்டு, பலதாரத் தனிநாயகனாய்த் திரிந்திருந்தமை, அல்லிக்குத் தீராக்கோபம் விளைத்தது. அதனாலே அவள் அவனை அன்புபாராட்டாமல் அலக்ஷியஞ் செய்திருந்தனள்.

இங்ஙனம் இருக்க, குழந்தை புலந்தரன் தனது தாயைப் பவளத்தேர் கேட்டான். பவளம் சேகரித்துத் தேர் செய்வதென்றால், சாதாரண காரியமல்ல. ஆகையால், அல்லி, அது குறித்துத் தனது மந்திரிமாரோடு யோசனை செய்தாள்; அவர்கள் அர்ச்சுனனே அதற்கு வல்லவன் என்றார்கள். அவர்கள் சொன்னபடி, தனக்குப் பிரியமில்லாதிருந்தும், குழந்தையின் விருப்பத்தை முன்னிட்டு, அர்ச்சுனனே பவளத்தேர் கொண்டுவர வல்லவனென்றெண்ணின அல்லி, ஒரு பொய்க்கடிதம் எழுதித் தருமர்க்கனுப்பினாள். அதனில், 'குழந்தை, புலந்தரன் சாகுந்தறுவாயில் இருக்கின்றான்' என்று கண்டிருந்தது. அதைக்கேட்ட அர்ச்சுனன் மதுரைக்கு விரைந்து வந்து, உண்மை தெரிந்துகொண்டு, பவளத்தேர்க்காகப் பவளக்கொடி வாழும் பவளக் காட்டுக்குச் சென்றான்; அங்கே, தான் சென்ற காரியத்தை மறந்து, பவளக்கொடியை மாலையிட்டு, அவளோடு மருவியிருந்துவிட்டான். பிள்ளையின்மேலாணையிட்டுக் கொடுத்துவிட்டு வந்தும், அதனை மறந்திருந்த அர்ச்சுனன்மேல் அல்லி கோபங்கொண்டு, அவனைக் கொல்லும்படி படையெடுத்து வந்தாள். அதனை அறிந்த கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனைப் பொய்யாக இறக்கச் செய்து, அல்லிக்கு அவன்மேற் காதலதிகரிக்கச் செய்தனர். தருமர் முதலிய அனைவரும் அவன் உண்மையாகவே யிறந்தானென்று நம்பி, பவளக்கொடி நாட்டுக்கு வந்தார்கள். அல்லி முதலிய யாவரும் அர்ச்சுனற்காக வருந்தி, அழுது புலம்பினார்கள். கிருஷ்ணமூர்த்தி வைத்தியராக வந்து, அவனை யெழுப்பி, அல்லியையும் அர்ச்சுனனையும் மற்றவர்களையும் ஒருமையாக்கிவிட்டார். புலந்தரன் பவளக்கொடியினிடத்தில் பவளத்தேர் பெற்றுக்கொண்டு, எல்லாரும் அவரவர் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

# அரும்பொருள் விளக்க அகராதி.

---:o:---

**விநாயகர் காப்பின் உரை.**

வேகம் மால் நெறி சேரும் வினைகளும்=கொடிய மூடவழியிற் சேரும் பாவங்களும், தாகம் போகம் விடாத தளர்ச்சியும்=செல்வத்தின் ஆசையினால் விடாத வருகிற அலைச்சலும், சோக வாரியினால் வரும் துன்பமும்=சிற்றின்பக் கடலில் விழுவதனால் வரும் துன்பமும், போக ஆனை முகத்தனை போற்றுவாம்=போகும்படி யானைமுகக்கடவுளை வணங்குவாம்.

---

அங்காடி வீதி=(தெலுங்கு) அங்கடி =கடை
அரக்குமணி=சிவப்புமணி
ஆகுது=ஆகிறது
ஆச்சி=ஆய்ச்சி
ஆச்சியரை=ஆய்ச்சியரை
இடக்கை=பெரும்பறை=டக்கை
இந்ததோர்=இந்த
இலங்கிறது=இலங்குகிறது
இலை அடைக்காய்=வெற்றிலை பாக்கு
ஈழம்=இலங்கை
உயிர்ந்த கொம்பு=உயர்ந்த கொம்பு
எக்காளம்=ஊது கொம்பு
எங்கிலும்=எங்கேயும்
எழிலான=அழகான
ஓலைப்பூ=சாதாரணமாய்த் தாழம் பூவுக்கு வழங்குகிறது
ஔவியம் பேசேல்=(ப-ரை) ஔவியம்=(பிறர் செல்வத்தைக்கண்டு) பொறாமைச் சொற்களை, பேசேல்=நீ சொல்லாதே.
(க-ரை) பொறாமைச்சொற்களைச்சொன்னால் அதாவது செல்வரிடத்துள்ள போலிக்குற்றங்களை யெடுத்துப் பலரறியத் தூற்றினால் அறமும் புகழும் உன்னைவிட்டு நீங்குமென்பதாம்.
கச்சாயம்=பணியாரம்
கதண்டுகள்=கருங்குளவிகள்
கபாய்=கணுக்கால்வரையில் தொங்கும் நிலையங்கி
கப்பணம்=கப்பம்
கருவிளமே=கருவூலமே
கல்வெடுப்பரிசி=கருமாந்தரத்தில், திவசத்தில் கொடுத்த அரிசி
காந்தாளம்=கடுங்கோபம்
காலகண்டநாதர்=காளகண்டநாதர்=சிவபிரான்=கண்டத்தில் விஷக்கருமை யுடையவர்
காலகண்டநாதர்=எமனுக்கெமனயிருந்த நாதர் என்றுங் கூறலாம்
கும்பாசம்=குப்பாயம்=கவசம்
கேளிக்கை=கூத்து
கொல்லுங் குருவி=இராஜாளி
கோவிலிலே=சபையிலே
சந்தன வடிவழகன்=சந்தனந் தீட்டிய மேனி யழகன்
சமுதாடு=கத்தி, குத்துவாள்
சரப்பளி=சரப்பணி=கழுத்திலணியும் பொற்சங்கிலி
சிங்காணி=உண்டைவில்
சித்தசன்=மன்மதன்
சுரேந்திரன்=சுர+இந்திரன்=தேவேந்திரன்
செந்திரிக்கை=ஓலைக்கடிதத்துக்கு மேல் ஓலை மூடி
செடில் கட்டுதல்=கம்பத்திற் கயிறு கட்டி, அந்தக் கயிற்றின் ஒரு முனையிலுள்ள இருப்புக்கொக்கியில் ஒருவன் தன் நடு முதுகின்தோலை மாட்டிக்கொண்டுதொங்கிஆடுதல்
டோல்=பெரும்பறை
தட்டி=கச்சு
தமான்=அங்கி
தாரை=அதிக நீண்ட ஊதுகொம்பு
தாவடம்=கழுத்திலணி மாலை
துழாய் மவுலி=துழாய் மௌலி=துளசிமாலை யணிந்த முடியையுடைய கிருஷ்ணன்
தோராவடிவழகி (தோலாவடிவழகி) =தோற்காத=நிகரில்லாத அழகுடையவள்; தோராவழக்கு அல்லதுதோலாவழக்குஎன்பதுபோல

நிஜான் = கொடி
நீலுவர்னன் = நீலவண்ணன் = நீலவர்ணன் = நீலவுன்னன் = நீல நிறத்தோன் = திருமால்
நீன்முகனை = நீல்முகனை = நீல நிறத்தோடுகூடிய முகனை
நேரிசம் = எறிகின்ற ஆயுதம்
படித்தளம் = படித்தளவுரிசை
பள்ளிக்கை = பல்லிக்கை = இளைப்பு
பாணி பாணி = பானி பானி = ஜலம் ஜலம்

| | | |
|---|---|---|
| புலந்திரன் புனந்திரன் | = | "புலந்தரன்" என்னும் பெயர் "புலந்திரன்" என்றும், "புனந்திரன்" என்றும் மருவி வந்தது |

பூசல் = கலகம்
பொங்கைக்கோல் = ஒருவித மூங்கிற்கைத்தடி
பொற்கொடியும் வாராளே = வருகிறுளே = வாருளே = வந்துகொண்டிருக்கிருளே
போய்வாரேன் = போய்வருகிறேன்; இப்படி வருந்தோறுங் கொள்க
மகரதரும் = மாரதரும்
முத்துச்சபாலம் = முத்துச்சலாபம் = முத்துக்காக நீரில் முழுகுதல்
முந்தாணி = முன்தானை
முந்திவந்த மருமகள் = முதல் மருமகள்
முருகுழலாள் = அழகிய கூந்தலுடையாள்
விஜயன் மடலூர்ந்த மாதேவி = அருச்சுனன் இச்சித்துக் காதல் பெருக்கிய சிறப்புடையாள்
மடலூர்தல் = பனமட்டைத் தேரேறி, ஒரு நாயகன், தான் விரும்பிய நாயகியின்மேற் காதலை வெளியிடுதல்
"எமலோகம் போனாலும் இட்டுவந்து சங்கரிப்பேன்; பாதாளம் போனாலும் பார்த்துவந்து சங்கரிப்பேன்" மீனுக்ஷி யம்மையார் அமிசமாய் அவதரித்திருந்த அல்லியராணி, தனது கணவனுகிய அர்ச்சுனனை இங்ஙனங் கூறினுள் என்று, மற்றவர்களும் இதனைப் பின்பற்றக்கூடாது.

(குறிப்பு) இந்நூலின் செய்யுள் வெண் செந்துறை என்னப்படும்;
இதற்கு இலக்கணம்:—"ஒழுகிய ஓசையின் ஒத்தடி யிரண்டாய்
விழுமிய பொருளது வெண் செந்துறையே"
(யாப்பருங்கலம்)

"எச்சீரானும் எத்தளையானும் எவ்வடியானும் தம்முள் ஒத்த இரண்டடியாக வருவது வெண் செந்துறை" (வீரமாமுனிவர்)

இரண்டிரண்டடிகளாய்த் தம்முள் ஒத்து, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடியாகிய இவைகள் தனித்தும், தம்முள் விரவியும், காய்ச்சீர், கனிச்சீர், விளச்சீர், மாச்சீர் முதலிய எல்லாச் சீர்களும் தம்முள் ஒத்துத் தனித்தும், விரவியும், வெண்டளை முதலிய எல்லாத் தளையானும் சிறந்த பொருள் தருவதாய், ஓசை உடையதாய், ஆழ்ந்த கருத்துடையதாய்ப் பல அடிகளான் வருவதூஉம் வெண் செந்துறை யாகும். ஆயினும் இதனை **வெண் கலிப்பா** என்பது இசை வுடையதாம். இதன் இலக்கணத்தை

"வான்றளை தட்டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின் பான்
மொழியாய், விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண் கலியே"

என்ற யாப்பருங்கலக்காரிகையின் செய்யுளியல் பதினொன்றும் பாடலால் உணர்க.



பவளக்கொடி அரசிருக்கை

கணபதி துணை.

# பவளக்கொடிமாலை.

## காப்பு கலிவிருத்தம்.

வேக மானெறி சேரும் வினைகளுந்
தாக போகம் விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியி னுல்வருந் துன்பமும்
போக வானை முகவனைப் போற்றுவாம்.

## விநாயகர் துதி.

அத்தி முகத்தோனே அரனார் திருமகனே
சத்திக் கணபதியே சரிந்த வயிற்றோனே
காரானை மாமுகனே கணபதியே முன்னடவாய்
ஸ்ரீராமர் தன்மருகா செல்வக் கணபதியே
பேழை வயிற்றோனே பெருச்சாளி வாகனனே
வேழ முகத்தோனே விநாயகரே நான்சரணம்
கந்தருக்கு முன்பிறந்த கற்பகமே மெய்ப்பொருளே
வந்தெனக்கு முன்னடவாய் மாயன் மருமகனே

## கலைமகள் துதி.

வாணி சரஸ்வதியே மறையவனார் தேவியரே
சொற்கள் வழுவாமல் சொற்குற்றம் வாராமல்
நாவு தவருமல் நடத்துமம்மா யிக்கதையை
ஐந்தெழுத்தை யோரெழுத்தா யழுத்துமம்மா வென்னுவில்
எட்டெழுத்தை யோரெழுத்தா யெழுதுமம்மா நாவுதனில்

## துரோபதை துதி.

தோரா வடிவழகி துரோபதையே பாஞ்சாலி
அக்கினியில் வந்துதித்த ஆதிபரா சத்தியரே
நெருப்பிற் பிறந்தவளே நீலவர்னன் தங்கையரே
மந்தாரக் குந்தியற்கு முந்திவந்த மருமகளே

சந்தன வடிவழகன் தருமராசன் தேவியரே
பாடத் தொடங்கினேன் பாஞ்சாலன் சீர்மகளே
பவளக் கொடிமாலை பாடத் துணிந்தேன்யான்
கற்றோர்க்குக் குற்றங்கள் காதுவழி நேர்ந்தாலும்
உற்ற பிழைகளெல்லாம் உயர்ந்தோர் மனம்பொறுத்து
இப்புவியோ ரெல்லோரும் ஒப்பி மனமகிழ
அப்பால் நடந்தகதை அடியே னுரைத்திடுவேன்

## அல்லி அரசிருக்கை.

அல்லிப் பெருமாள் அரசாளும் நாயகியாள்
ஆறுயிரம் பாண்டியர்க்கும் அரிய துரைமகளாம்
மதுரை நகராளும் வாழ்பாண்டி நாடுடையாள்
நாலு மலையாளம் நடுவான தென்மதுரை
தென்மதுரை யாளுகிற தேன்மொழியா ளல்லியம்மாள்
ஆணர சாண்டாலே அழிந்துபோம் சீமையென்று
பெண்ணர சாளவென்று பிறந்தாளே அல்லியிலே
ஒருவர்-வயிற்றிற் பிறந்ததில்லை வன்கொடுமை செய்ததில்லை
குடலிற் பிறந்ததில்லை குலக்கொடுமை செய்ததில்லை
ஓடுகிற தண்ணீரில் உள்மணற் சேறுமுண்டு
அடிக்கிற காற்றதனில் அலைகாற்றிற் றுரும்புமுண்டு
காலகண்ட நாதருக்கு கண்டங் கறுப்புமுண்டு
சந்திரற்கு மச்சமுண்டு சற்றே கறுப்புமுண்டு
குன்றிமணிக் காணுலுங் கொஞ்சங் கறுப்புமுண்டு
அவள்-மயிரே கறுப்பொழிய மற்றக் கறுப்புமில்லை
புருவங் கறுப்பொழிய புறத்துக் கறுப்புமில்லை
மன்னன் விஜயன் மடலூர்ந்த மாதேவி
காளை விஜயன் கட்டழகன் மாதேவி
ஏழு பிராயத்திலே எதிர்த்துவந்த நீன்முகனை
வெட்டிக் கெலித்து வீரபட்டங் கட்டினவள்
பொம்மை விருதுகட்டி பூமியெல்லாம் மாளுகிறாள்
அல்லியென்று பேர்சொன்னால் அழுதபிள்ளை வாய்மூடும்
கொம்பனையாள் பேர்சொன்னால் குருவிதண்ணீர் குடியாது
கட்டழகி பேர்சொன்னால் கனதெய்வங் கூத்தாடும்

அல்லியென்று பேர்சொன்னால் அறுந்ததலை கொக்கரிக்கும்
கட்டழகி அல்லியருங் காலையில் தானெழுந்து
முத்துச் சிவிகையது முருகுழலாள் ஏறிக்கொண்டு
தாதியருந் தோழியருந் தையல்மார் சூழ்ந்துவர
பூங்கா வனஞ்சோலை போயிறங்கி யல்லியரும்
பாளைகொண்டு பல்விளக்கி ஓலைகொண்டு நாவழித்து
பொய்கையின் தீர்த்தத்திலே துய்யமுகஞ் சுத்திபண்ணி
முத்து நிகர்த்தபல்லும் முருக்கம்பூச் செவ்வாயும்
காலோடு கைகளுங் கனிவாயுஞ் சுத்திபண்ணி
சிவசிவா வென்றுசொல்லி திருநீற்றுக் காப்பணிந்து
மதுரைமீ னாட்சியரை மனதிலே தானினைந்து
சொக்க ரடிபணிந்து தோகையரும் பூச்சொருகி
சந்தனமும் பன்னீருஞ் சவ்வாதுந் தானணிந்து
பார்ப்பார் பரதேசி பண்டாரஞ் சோகியர்க்கும்
இல்லாத ஏழைகளாம் எல்லார்க்கும் நல்லபடி
தானம் வழங்கிவரத் தாமரைசூழ் வாழ்மாரி
தருமத்தை செய்தவளுந் தண்டிகையின் மீதேறி
பூங்கா வனத்தைவிட்டுப் பொற்கொடியும் வாராளே
ஆனையின்மேல் பேரிகை அடிபடக் குமுகுமென்று
ஒட்டையின்மேல் பேரிகை ஓசைச் செவிடுபட
எக்காள மூதிவர இடக்கையும் டோலடிக்க
சங்கீத மேளம்வீணை சபையில் முழங்கிவர
ஐங்காத வழிதூரம் அநேகதாரை யூதிவர
நாற்காத வழிதூரம் நாகசுர மூதிவர
முக்காத வழிதூரம் முரசு முழங்கிவர
தித்திமி திமிதிமென்று சிறுபெண்க ளாடிவர
தத்திமி தோமென்று தாளங்கள் போட்டுவர
கவிஞர் கவிபாடக் கட்டியங்க ளார்ப்பரிக்க
புலவர் புகழ்ந்துவர புஷ்பங்கள் தூவிவர
நட்டுவர்கள் பாடிவர நங்கையர்க ளாடிவர
செடில்கட்டி மல்லக ஜெட்டிகள் யுத்தஞ்செய்ய
ஆடாத கூத்துகளும் அரிச்சந்ர நாடகமும்

கேளிக்கை பார்த்துமல்லோ கிளிமொழியாள் வாராளே
தெற்கு கிழக்குத் தெருவீதி தான்கடந்து
கடையுங் கடைதெருவுங் கருமார வீதிவிட்டு
அங்காடி வீதிகளும் அரண்மனையுந் தான்கடந்து
மாடத் தெருக்கடந்து மண்டப மருகில்வந்து
பல்லக்கை விட்டிறங்கிப் பார்மனையி னுட்புகுந்து
முத்து மிதியடியைத் தொட்டு மிகநடந்து
மாணிக்கக் கிரீடங்கள் மகுட முடிதுலங்க
தாதியர்கள் சூழ்ந்துவர தனிக்கவரி வீசிவர
மாதர்கள் புடைசூழ மண்டபஞ்சென் றேறினாள்
ஓராம் படித்தளமாம் ஓலைப்பூ மண்டபமாம்
இரண்டாம் படித்தளமாம் இரத்னகிரி மேடைகளாம்
மூன்றும் படித்தளமாம் முத்துசெம்பொன் படிவாசல்
நான்காம் படித்தளமாம் நாகரத்ன மண்டபமாம்
ஐந்தாம் படித்தளமாம் அரக்குமணி மேடைகளாம்
ஆறும் படித்தளமாம் அழகான மேடைகளாம்
ஏழாம் படித்தளமாம் எழிலான மண்டபமாம்
எட்டாம் படித்தளமாம் எண்ணெய்க்கால் மண்டபமாம்
ஒன்பதாம் படித்தளமாம் ஓலைப்பூச் சாவடியாம்
பத்தாம் படித்தளமாம் பளிங்குமா மண்டபமாம்
ஆயிரங்கால் மண்டபத்தில் அல்லியரும் வந்தமர்ந்தாள்
செம்பொன் முடிதுலங்க செங்கோலில் வந்தமர்ந்தாள்
ஆறுயிரம் பாண்டியர்க ளனைவோரும் வந்தமர்ந்தார்
பன்னிரண்டு மந்திரியும் படைத்தலைவர் வந்தமர்ந்தார்
மந்திரி பிரதானிகளும் மற்றுமுள்ள ராசர்களும்
முன்னூறு கோடிசொல்லும் முடிமன்னர் வந்தமர்ந்தார்
நானூறு கோடிசொல்லும் நகரத்தார் வந்தமர்ந்தார்
ஐந்நூறுகோடி சொல்லும் அரசுமனனர் வந்தமர்ந்தார்
முடியோடு முடிநெருங்கும் முருகுழலா ளம்பலத்தில்
சட்டையொடு சட்டை சபைதனி லேநெருங்கும்
அதிரதருஞ் சமரதரும் அதிரத ரானவரும்
கலிங்கர் தெலுங்கர்களும் கன்னடிய ரானவரும்

ஈழத்து வங்கணரும் இளநாட்டுச் சோனகரும்
நிறைந்தகொலு வாயிருக்கும் நேரிழையா ளம்பலத்தில்
அப்பெரிய சபைதனிலே அல்லியவள் கொலுவிருக்க
காண வருவாருங் கைகட்டி நிற்பாரும்
பார்க்க வருவாரும் பாண்டிப் பெருமாளை
தூரத்து ராசாக்கள் சுருளோலை கொடுவருவார்
காதத்து ராசாக்கள் கையோலை கொடுவருவார்
செம்பொன்னுங் கப்பணமுந் தீவுகிளிப் பிள்ளைவரும்
இந்த விதமாக யிருக்கின்ற வேளையிலே

## புலந்திரன் விளையாடல்.

அந்தச் சமயத்தில் அழகுள்ள புலந்திரனும்
செண்டு மறவானுஞ் சிநேகிதரைத் தான்பிரியான்
கோட்டி மறவானுங் கூட்டாளி பிரியானும்
தாயாரை சுற்றிவந்து தயிருக் கழுவானும்
பாதத்தைச் சுற்றிவந்து பாலுக் கழுவானும்
விளையாடி வீட்டில்வந்து வெண்ணைக் கழுவானும்
முகந்தாக்கால் வாயதனை முலைப்பால் கவுச்சடிக்கும்
வீதி விலாசமது விளையாடும் வேந்தனவன்
தங்கத்தே ரோட்டித் தார்வேந்தர் வீதியெல்லாம்
செம்பொன் தேரோட்டித் திகழ்வேந்தர் வீதியெல்லாம்
மாணிக்கத் தேரோட்டி மன்னர்தெரு வீதியெல்லாம்
முத்துத்தே ரோட்டி முடிமன்னர் வீதியெல்லாம்
வசந்தமணி மண்டபத்தின் வழியே வரும்போது
பஞ்சவர்னக் கிள்ளைகளைக் கண்டந்தப் பாண்டியனும்
இப்படிக் கொத்ததே ரியற்றப் புலந்திரனும்
மாதாவின் கொலுச்சபைக்கு வந்தான் புலந்திரனும்
தண்டை யசைந்தாட சதங்கை கலகலென
அரவடமுங் கிண்கிணியும் அரையில் நிழல்காட்ட
கண்டத்தில் கண்டசரம் கனவயிரத் தாழ்வடமும்
மார்பில் பதக்கமின்ன வச்ரகவ சங்கள்மின்ன
வட்டமிட்ட நெற்றியிலே வயிர முடிதுலங்க
பட்டுதட்டி வொட்டியாணம் பசும்பொன்னற் சமுதாடும்

கச்சு புரண்டாடக் கட்டழகன் வாரானும்
சிறுகால் மிதியடியாம் சிங்காணி வில்லழகாம்
பக்க மிருபுறமும் பரிசம் பிடித்துவர
கட்டழகன் பின்னகக் கத்தி சுழற்றிவர
ஈட்டி பிடித்தவர்கள் இருபுறமுஞ் சூழ்ந்துவர
தாயார் கொலுச்சபையில் தார்வேந்தன் வந்துநின்ருன்
வந்துநின்ற தன்மகனைக் கண்டந்த அல்லியரும்
அப்பா மகனேவா அழகான கண்மணியே
பிள்ளைகலி தீர்த்தவனே பெருமாளே வாருமென்ருள்
அண்டத்துச் சந்திரனே அருகிருக்கும் பாற்குடமோ
சொக்கர்திரு மாளிகைக்குத் தூண்டா மணிவிளக்கோ
வைகைக் கரைதனக்கு மண்சுமந்த சொக்கருள்
கப்பலுஞ் சோங்குங் கரைதுறையு முள்ளவனே
சங்கீன்ற முத்தோ சகதல மாண்டவனே
ஆருயிரம் பாண்டியர்க்கும் அழகான பேரனேயோ
வாராய் மகனேயென்று வாரி மடியில்வைத்து
ஏந்தி மடியில்வைத்தாள் இருகொங்கை பாலொழுக
சட்டையை நீக்கியே சரீரமெல்லா முத்தமிட்டாள்
உச்சி முகந்தாளே உள்ளங்கால் முத்தமிட்டாள்
மைந்தரைப் புல்கியே மடிமேலே வைத்திருந்தாள்
என்னவேணு மென்மகனே எனக்கறியக் கூறுமென்ருள்

## புலந்திரன் தாயாரைப் பவளத்தேர்கேட்டது.

எண்ணிப் புலந்திரனும் ஏங்கி யுரைக்கலுற்ருன்
தாயார் முகம்பார்த்துத் தார்வேந்த னேதுரைப்பான்
உலகமதை யாளுகின்ற உன்மைந்த னனதினல்
மதுராபுரி யாளுமுந்தன் மைந்தன்யா னனதினல்
நான்-ஏறி விளையாட இயலான தங்கரதம்
தங்கத்தேர் தந்தாரே தார்வேந்த ரென்பாட்டன்
செம்பொன்தேர் தந்தாரே திகழ்வேந்த ரென்பாட்டன்
மாணிக்கத்தேர் தந்தாரே மகாமன்ன ரென்பாட்டன்
சித்திர வீதிகளும் சிறப்பான தோப்புகளும்
மட்டில்லா வீதியது மதுரைப் பெருந்தெருவும்

வாழ்பாண்டி நாடாளும் மதுரையுஞ் சுற்றிவர
பாண்டிப் பெருமாளே பவளத்தேர் வேண்டுமம்மா
தந்தாலே யல்லாது சாதமு முண்ணேனம்மா
போசனம் வேண்டேனென்று புலந்திரனும் பிணங்கலானன்
மைந்தனூர் வார்த்தைகேட்டு அந்தல்லித் தாயாரும்
கேளாக் கருமத்தைக் கேட்டாயே கண்மணியே
தங்கத்தில் தேர்வேண்டி தார்வேந்தே கேளாமல்
முத்தாலே தேர்வேண்டி முடிமன்னு கேளாமல்
மாணிக்கத் தேர்வேண்டி மன்னவனே கேளாமல்
இல்லாத வுடமைதனை யென்மகனே கேட்டாயே
என்னுடைய ராச்சியத்தில் இல்லையே பவளமது
என்னநான் செய்வதென்றே யேங்கி மனந்தளர்ந்து
உற்றுற்று நினைந்தாளே ஒருகோடி யுத்திகளை
மைந்தன் மொழிகேட்டு மனது துயரமதாய்
அப்பெரிய சபைதனி லனேகமன்னர் தங்கள்முன்னே
ஆருயிரம் பாண்டியர்கள் ஐயன்மார் சபைதனிலே
வேந்தர் சபைதனிலே மெல்லியரு மேதுரைப்பாள்
என்னுடைய கொலுமுகத்தில் இருக்கவந்த ராஜர்களே
மந்திரிபிர தானிகளே வாய்மொழியைக் கேளுமென்றுள்
பாலன் புலந்திரற்குப் பவளத்தேர் வேண்டுமாம்
அறிந்தா லுரையுங்கள் அழகான ராஜர்களே
இவ்வார்த்தை யைக்கேட்டு ஏதுரைப்பார் மந்திரிமார்
இங்கெங்கும் கிடையாது இயலான நற்பவளம்
வடக்கே வெகுதூரம் வனந்திரதீ வாந்தரத்தில்
தீவாந் தரக்காட்டில் செம்பவளம் விளைகிறது
பன்னிரு காதவழி பவளம் விளைகிறது
அங்கே யிருக்குதம்மா அழகான நற்பவளம்
கொண்டுவரு வார்களிங்கே உண்டானல் நீரனுப்பும்
என்றது கேட்டுடனே ஏதுரைப்பா ளல்லியரும்
என்னுடைய சபைதனிலே இருக்கின்ற ராசர்களே
தீவாந் தரம்போகும் தீரருண்டோ இச்சபையில்
போகின்ற துரைகளுண்டோ புறப்படுங்க ளிச்சபையில்

தாம்பூலம் வாங்குங்கள் சமர்த்துள்ள ராசர்களே
மீசையுள்ள ராசாக்கள் வெளிப்பட்டு வருவாரேல்
நாடு நகர்தருவேன் நால்வகைப் படைதருவேன்
பூமி சமந்தருவேன் புதுப்பட்டங் கட்டிவைப்பேன்
என்னைப்போல் ராசாவா யினியமுடி சூட்டிவைப்பேன்
வல்லமை யுண்டானால் வாங்குங்கள் தாம்பூலம்
என்றது கேட்டவுடன் இயன்மந்திரி மாருடனே
பட்டத்து ராசாக்கள் பார்வேந்த ரேதுரைப்பார்
மதுரைப் படைத்தலைவர் மந்திரிக ளேதுரைப்பார்
அல்லிப் பெருமாளே ஆச்சியரே நீர்கேளும்
பிறந்தோ மதுரையிலே வளர்ந்தோ மதுரையிலே
மதுரைக்கும் அப்பாலே வனமொன்றும் நாமறியோம்
அறிந்துபோய் சொன்னாலே ஆக்கினைகள் செய்திடுவாய்
உன்-ஆக்கினைக்குத் தான்பயந்து ஆச்சியரே போனாலும்
பவளம் விளைகின்ற பாங்கான அக்காட்டில்
ஆனைத் தலைபோலே அனேகவண்டு தானிருக்கும்
சிங்கத் தலைபோலே வாசம்பண்ணும் செங்குளவி
கரடித் தலைபோலே வாசம்பண்ணும் கருங்குளவி
காதாலே கேட்டதுண்டு கண்ணாலே பார்த்ததில்லை
தீவுக்குப் போனவர்கள் திரும்பிவந்து சேர்ந்ததில்லை
என்றதும் கேட்டிருப்போம் இனியொன்றும் நாமறியோம்
எங்களால் முடியாது என்றார்கள் மந்திரிகள்
இன்னமு மொருவார்த்தை இயம்புவோ மாச்சியரே
ஆணு லழகுமன்னன் அருச்சுன ராசதுரை
அவரைப்போற் சூரரிங்கே ஆரு மொருவரில்லை
சீமைசீமை தேசமெல்லாந் திரிந்துவந்த தேர்விசயன்
எங்கெங்கு ராசாக்கள் எதிர்ப்பா ரொருவரில்லை
அவருக்கு மிஞ்சினவ ராண்மையுள்ளா ராருமில்லை
ராசாக்க ளானாலும் ராட்சதர்க ளானாலும்
எதிர்த்துவந்த பேர்களை இருதுண்டாய் போட்டிடுவார்
அவரை யழைத்துநீ அனுகூலம் பண்ணாலே
மைந்தனுக்குப் பவளத்தேர் வந்துவிடு மப்போது

மற்றொருவர் தன்னாலே மாதாவே யாகாது
என்றது கேட்டாளாம் எரிபரந்து கண்சிவந்து
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் கோபமானாள்
ஆறாத கோபமது ஆனது அல்லியற்கு
கொல்லும் குருவியைப்போல் கோபித்துக் கண்சிவந்து
மந்திரிகளாகையினால் மனம்பொருத்தே னிப்போது
மற்றொருவ ராலாக்கால் வயிரமுடி கொய்திடுவேன்
தனிப்பட்டங் கட்டியே தனியர சாண்டேனே
பெண்பட்டங் கட்டியே பெரும்பூமி யாண்டேனே
மடலூர்ந்து என்னையன்று மாலையிட்டார் வாள்விசயன்
பிள்ளை புலந்திரனார் பிறந்த பிறகாக
அப்போது வாள்விசய அர்ச்சுனனா ரிங்கேவந்தார்
எங்குவந்தீ ரென்றுநான் ஏளனமாய் கேட்டுவிட்டேன்
அதுவொரு குற்றமதாய் ஆயாசப் பட்டவரும்
என்னைக்-கும்பிட்டுப் போனாரே குலவிசய ருச்சுனரும்
கும்பிட வுந்தகுமோ கொழுநன் மனைவியைப்பின்
மைந்தன் பிறந்திதோ வயதுமே ஐந்தாச்சு
இத்தனை நாள்வரைக்கும் இங்குவந்தா ராருமில்லை
வாராத அருச்சுனரை வணங்குவேனோ மந்திரியே
நாடாளும் ராசாத்தி நானோ வணங்குவது
என்றது தான்கேட்டு ஏதுரைப்பார் மந்திரிகள்
புருஷனுக்குந் தேவியர்க்கும்பொல்லாப்பு முண்டாமோ
அரிசி குறைவுமில்லை ஆளன் பகையுமில்லை
வரிசை யுடன்வணங்கி வரவழைத்தீ ராமானால்
ஒன்றுங் குறைவில்லை யொருகுறையும் வாராது
கணவனுக்கு வணங்கினால் கனமோச மொன்றுமில்லை
இதனாற் பழுதுமில்லை என்றார்கள் மந்திரிகள்
அவ்வார்த்தை தான்கேட்டு அல்லியரு மேதுரைப்பாள்
ஐந்து வருஷமாய் அவரை மறந்திருந்தேன்
மறந்திருந்த அர்ச்சுனரை வரவழைத்தே னாலே
காமத்தி னாலிங்கே கண்டழைத்தே னென்பார்கள்
ஊரிலே யுள்ளவர்கள் உலகாண்ட ராசாக்கள்

நாட்டிலே யுள்ளவர்கள் நகைப்பார்க ளெப்போது
கண்டார் சிரிப்பார்கள் கலியுகத்தா ரேசுவார்கள்
பார்த்தார் நகைப்பார்கள் பழிசொல்லித் திரிவார்கள்
எப்படி யானழைப்பேன் இயலான அர்ச்சுனரை
என்றது கேட்டவுடன் ஏதுசொல்வார் மந்திரிகள்
தந்தையார் பெருமையிங்கு தார்குழலே வுண்டானல்
பெற்றூர் பெருமையது பிள்ளைக்கு முண்டாகும்
வளர்த்தார் பெருமையது மன்னர்க்கு முண்டாகும்
கொண்டார் பெருமைகள் கொம்பனையே வேண்டாமோ
கணவன் பெருமைகள் காரிழையே வேண்டாமோ
ஆளன் பெருமைகள் ஆரணங்கே வேண்டாமோ
ஆனைகள் குதிரைகளை அரண்மனையில் கட்டிவைத்து
குதிரைகளைக் கட்டியே கோடித்து வாழ்ந்தாலும்
ஆள னிருந்தாளா அரசுமுண்டோ வையகத்தில்
புருஷனு மில்லாமல் போற்றிதுதி செய்வாரோ
காவலர்கள் கோவிலிலே கைம்பெண் டீ ரென்பார்கள்
மன்னவர்கள் கோவிலிலே வாழாப்பெண் டென்பார்கள்
கொண்டார் பெருமைகள் கொடியிடையே வேண்டாமோ
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் தான்கேட்டு
வீம்பரவா ரர்ச்சுனர்க்கு விண்ணப்பஞ் செய்வதில்லை
ஆரடா தூதுவரே அழையுங் கணக்கர்களை
நாட்டுக் கணக்கெழுதும் நலமான கணக்கர்களை
சீமைக் கணக்குகளை தெரிந்தெழுதும் கணக்கர்களை
கோட்டை கணக்குகளை குறித்தெழுதும் கணக்கர்களை
ஊர்கணக்கப் பிள்ளைகளை ஓடி யழையுமென்ருள்
அவ்வார்த்தை கேட்டுமந்த ஆங்கார தூதுவர்கள்
ஓட்டம் நடையுமாய் ஓடிவந்தார் தூதுவர்கள்
அவ்வார்த்தை கேட்டவுட னன்பாகக் கணக்கரெல்லாம்
கடுகப் பயந்தார்கள் கணக்குச் சுமையெடுத்தார்
எக்கி லெழுத்தாணி இடதுகையில் சுருளோலை
வண்ணக் குருத்தோலை வரிசையுடன் கைபிடித்து
உச்சிகொண்டை போட்டார்கள் உதமி நடந்தார்கள்

சிங்கா தனத்துக்கு முன்னுக வந்துநின்று
அல்லிப் பெருமாட்கு அடிபணிந்து தெண்டனிட்டார்
வந்த கணக்கருக்கு வட்டமணை போட்டார்கள்
மண்தடுக்கும் போட்டார்கள் வந்திருங்க ளப்பாவென்ருள்
கிருஷ்ணசகா யம்போட்டுக் கீழே யெழுதுவது
தர்மா புரமாளும் தர்மலிங்க ராயருக்கும்
ஐவராம் பாண்டவர்கள் அத்தையார் குந்தியற்கும்
வண்ணமிட்ட ஓலையிலே வக்கணையா யெழுதவேணும்
என்னவென்று ஓலையிலே எழுதுகிறீ ராலே
சோலை மலருடைய சொக்கர் திருவருளால்
ஸ்ரீ ரங்க நாயகராம் திருமால் கிருபையினுல்
மதுரை மீனுட்சியம்மை மாதா கிருபையினுல்
அல்லியின் மேலே ஆரணங்கு பெண்பிறந்தேன்
பெண்ணுய் பிறந்து பெருமாள் முடிசூட்டி
அன்னம்போல் மண்ணுண்டேன் ஐம்பத்தறு காதவழி
திருமால் திருவுளத்தால் தேசமெலா மாண்டிருந்தேன்
இன்னுள் வரைக்கும்மே ஏதுகுறை யில்லாமல்
வையகத்தை யாண்டிருந்தேன் மனக்குறைக ளில்லாமல்
உங்கள்-செல்வக் குழந்தையது தேவேந் திரன்பேரன்
ஐந்து பிராயமையா அழகாய் வளர்த்தபிள்ளை
செண்டடித்துப் பந்தடித்து தெருவில் விளையாடி
பொன்னின் தேரோட்டியே போத விளையாடி
வெம்பலாய்க் காய்ந்து விழுந்து படுக்கையிட்டான்
பல்லைக் கடிக்கிறதும் பதறிவாய் பினத்துவதும்
தலையைப் புறட்டுவதும் தனிக்கண்கள் சொக்குவதும்
பார்த்து பரிகாரி பண்டிதர் பணிக்கர்களும்
தோஷித்துப் போச்சுதென்று சொன்னுர்க ளெந்தனுக்கு
கைதப்பி காணுதென்று கற்பித்தா ரென்னேடே
என்னமோ ஏதோவொன் றிருக்கிறது என்மனதில்
பொய்சொன்னே னென்றுசொல்லி புண்ணியரே எண்ணுதீர்
ஓலைகண்ட நாழிகைக்கு உத்தமரே வரவேணும்
கண்ணுலே பார்க்குகைக்கு கடுகெனவே வந்திடுங்கள்

என்றது சொல்லியே எழுதுங்க ளோலையென்ருள்
சீர்கணக்கப் பிள்ளைகளும் சேதிமுழு துங்கேட்டு
சேமக் குருத்தோலை சிக்கெனவே தான்வாரி
அல்லியம்மாள் சொற்படிக்கு அவ்வோலை தானெழுதி
சீராச் சுருள்மடித்து செந்திரிக்கை தான்போட்டார்
சீல்நல்ல முத்திரைகள் திருவகுப்பின் கீழ்போட்டார்
அவ்வோலை தானெடுத்து ஆனந்த வாழ்மாரி
காற்றி லதிகமுள்ள கடுந்தூத ரையழைத்து
நாழிகைக்குக் காதவழி நடந்தோடுந் தூதுவரே
தருமருக்குக் கொண்டுபோய் தையலரும் கொடுமென்ருள்
மலையோடே தலைகொடுக்கும் மன்ன ரெழுந்திருந்து
ஓலைச் சுருள்வாங்கி ஓங்கி நடக்கலுற்ருர்
மதுரை தெருக்கடந்து வைகைக் கரைகடந்து
சில்லென்று பூத்தலர்ந்த செடிவன முங்கடந்து
புல்லென்று பூத்துமுளை புலியின்வன முங்கடந்து
ஓங்கி வளர்ந்ததொரு மூங்கில் வனங்கடந்து
பாதிரி முல்லைவளர் பருத்த வனங்கடந்து
தருமர்தம் கோவிலுக்குத் தான்வந்து நின்ருர்கள்
ஓலைச் சுருளைவைத்து வுத்தமனைத் தெண்டனிட்டார்
ஆர்பணி தூதாநீ அறிய வுரையுமென்ருர்
மதுரா புரித்துரையாள் வாழ்வரசி யல்லியம்மாள்
அனுப்பிய தூதரென்று அடிவணங்கித் தெண்டனிட்டார்
அல்லியின் பணியென்ன அதிகமாய் மனமகிழ்ந்து
ஓலைச் சுருளவிழ்த்தார் உத்தமனர் தருமலிங்கம்
அதிலிருக்கும் மர்மமெல்லாம் அறிந்தாரே தர்மலிங்கம்
நம்மை மதித்தாளோ நாடாளும் ராசாத்தி
ஐயோ மகனேயென்று அழுது புலம்புகிருர்
சம்போ சிவனேயென்று தரையிற் புறண்டழுதார்
தம்பி தனஞ்சயற்குத் தநயனென வந்தவனே
மதுரைநக ராளுகைக்கு மைந்தனென்று நானிருந்தேன்
தீர்ந்ததே உன்னுசை சிவலோகம் போகிறயோ
சிவனரின் பாதமலர் சேருகைக்கு நாளாச்சோ

ஐக்கியமாய்ப் போகவே ஆச்சுதோ வுன்சீவன்
பொன்மணியே கண்மணியே புலந்திர நன்மணியே
அல்லிக்கு ஆண்மகனே அங்கு புலந்திரனே
கட்டிக் கரும்பே கயிலாச மாகண்டாய்
பொன்னுங் குடமேநீ புஷ்பமே போனையோ
ஐயகோ வென்றுமனம் அலறிப் புலம்பலுற்ருர்
வெற்றி மதயானை வீம னவன்கேட்டு
தானு மழுதானே தரும ருடனுக
நகுல சகாதேவர் நாடிப் புலம்பலுற்ருர்
தோரா வடிவழகி துரோபதை புலம்பலுற்ருள்
மந்தாரக் குந்தியரும் மாது புலம்பலுற்ருள்
சங்கோதி யாள்கூடத் தானும் புலம்பலுற்ருள்
நாடும் நகரமும் நடுவரசும் மிகத்தயங்க
தக்க புகழுடைய தருமரவ ரேதுசொல்வார்
வில்லாளி பார்த்தனவன் விசயனெங்கே சென்ருனே
அருச்சுனனைக் கண்டுநான் ஐந்தாறு நாளாச்சே
எங்கே யிருப்பிடமோ என்று மறியோமே
ஆரடா தூதுவரே அழையுங்கள் தோட்டிதன்னை
தமுக்கடிக்குந் தோட்டியை தானழைத்து வாருமென்ருர்
என்றசொற் ருன்கேட்டு எழுந்தோடி தூதுவர்கள்
பறையறையுஞ் சாம்புவனை பார்த்தழைத்து வந்தார்கள்
தருமரண்டை வந்தவனும் சாஷ்டாங்கத் தெண்டனிட்டான்
என்னை அழைத்தது ஏது கருமமென்ருன்
அப்போது தருமலிங்கம் ஆணழக ரேதுசொல்வார்
பாராளுந் தருமருக்கு பாக்கது சொக்கிற்றென்று
மெத்தவே பள்ளிக்கை மேற்பட்ட வேந்தருக்கு
விசயர் முகத்திலே விழிக்கவென்ரு ரிப்போது
களைதாங்கிப் போகிறது கட்டழகர் தருமருக்கு
இச்சமயந் தப்பிவிட்டால் இனிகாணல் இல்லையென்றே
தருமா புரமெல்லாந் தமுக்கடித்து வாருமென்ருர்
வீதிபதி ணயிரமும் வீரமுர சடியுமென்ருர்
இவ்வார்த்தை கேட்டவனும் எழுந்தானே சாம்புவனும்

ஆனையேறி மாலைசூட்டி அடித்தான் பறையோசை
தருமாபுர வீதியெல்லாந் தமுக்கடித்து வாரானும்
என்னசொல்லித் தமுக்கடித்தான் இயலான சாம்புவனும்
பாராளுந் தருமருக்குப் பாக்கது சொக்கியதால்
களைதாங்கிப் போகிறது கட்டழகர் தருமருக்கு
பேச்சுமூச் சில்லாமற் பிணம்போல் விழுந்துவிட்டார்
அனைவோரு மங்கேதான் அழுது புலம்புகிறார்
அருச்சுன ராசாவை ஆர்வைத் திருந்தாலும்
கண்டவர்கள் விட்டிடுங்கள் கடுகி யெழுப்பிடுங்கள்
விசயர் பெருமாளை வைத்திருந்தால் விட்டிடுங்கள்
என்று அடித்தானே இயலான தமுக்கோசை
செப்பி யடித்தானே தேர்விசயன் தான்கேட்க
தேவதாசி தெருவுகளும் தெருவுபதி னாயிரமும்
அத்தெருவு பெண்களெல்லாம் அனைவரு மேதுசொல்வார்
காளை யருச்சுனரைக் கண்ணாலே கண்டதில்லை
எங்கள்தெரு வீதியிலே எழில்விசயர் வாரதில்லை
மாயா சுபத்திரையாள் மச்சினியாள் வீதியிலே
அங்கே யிருப்பார்காண் அருச்சன வீரியனார்
அவர்-தனஞ்சய ரென்றுசொல்லி சாமத்திற் கண்டதுண்டு
உத்தம ரென்றுசொல்லி ஓமத்திற் கண்டதுண்டு
ஓமப் புகையிலேதான் உடனிருந்த பாவமுண்டு
கலியாணப் பந்தலுக்குள் கைகோர்த்து நின்றதுண்டு
அம்மி மிதித்ததுண்டு அருந்ததி பார்த்ததுண்டு
ஆள ரிவரென்று அனைவோருஞ் சொல்வார்கள்
இவ்விடம் வாராரே எழில்விசய னர்ச்சுனரும்
இடச்சியுட மாளிகையில் இருப்பா ரெனக்கேட்டு
அவன்-அந்தத் தெருக்கடந்து அப்பாலே போகலுற்றான்
சுபத்திரையாள் வீதியிலே சொல்லித் தமுக்கடித்தான்
தருமருக்கு வந்ததொரு தாழ்வெல்லாஞ் சொல்லலுற்றான்
அடித்த தமுக்கோசை அருச்சுனருங் கேட்டுவிட்டார்
தேர்விசயன் கோமானுந் திடுக்கிட்டுத் தானெழுந்தார்
பஞ்சணையை விட்டுமவர் பதறி யெழுந்திருந்தார்

சுபத்திரையாள் கண்விழித்துச் சுருக்காக வேதுசொல்வாள்
ஆசார வாசல்செல்ல ஆணழகா எழுந்தீரோ
எவளுடைய வாசல்செல்ல எழுந்தீர்கா ணெழில்விசயா
தீயில் பிரந்தவளை சிந்தையில் நினைத்தீரோ
மின்னொளியாள் வாசலுக்கு மேவ நினைத்தீரோ
போகவதி சிந்தையிலே போர்விசயா நினைத்தீரோ
நாககன்னி வாசலுக்குள் நாட நினைத்தீரோ
மதுரைதுரை யல்லியரை மனதில் நினைத்தீரோ
மற்றொருவர் காதல் மன்னவரே நினைத்தீரோ
ஆர்மேலே யாசைகொண்டு ஆணழகா நீயெழுந்தாய்
ஏசுவது கேட்டவுடன் எழில்விசய னேதுசொல்வான்
அல்லகாண் பெண்ணரசே ஆரணங்கே நீகேளாய்
பாராளுந் தருமருக்குப்பாக்கது சொக்கினதாம்
மெத்தவும் பள்ளிக்கை வேந்தருக்கு காணுதாம்
அதிக யிளைப்பாக அண்ணனுக்கு இருக்கிறதாம்
முகத்தில் விழிக்கவென்னை மொய்க்குழலே தேடுகிறார்
அதுவென்ன கருமமென்று அறிந்தோடி நான்வாரேன்
துழாய்மவுலி தங்கையவள் சுபத்திரையா ளேதுசொல்வாள்
தருமர்தம் வாசலல்லால் தையல்மார் வீடுசென்றால்
மற்றொருத்தி வீடுநீ வாள்விசயா சென்றாலே
ஒருகவள மன்னமது உண்ணேனே பாலமிர்தம்
திரும்பி வருமளவுந் தின்னே னிலையடக்காய்
என்றது தான்கேட்டு எழில்விசய னேதுசொல்வான்
உன்னைத் தவிரவிட்டு உலகளந்தான் தங்கையரே
பின்னொருத்தி வாசற்போய்ப் பிரிவனென் றெண்ணாதே
அண்ணணைத் தான்பார்த்து அரைக்ஷணத்தில் வாரேனடி
பாலடிசி லுண்டுநீ பாங்கா யமுதுசெய்து
வாசங்க ளுண்டுநீ மகிழ்ந்திருங்காண் மங்கையரே
வாடாதே நீயிருங்காண் மாத ரிளங்கொடியே
போகச் சிலவருளும் போய்வாரேன் பெண்ணேயென்றார்
மாயா சுபத்திரையாள் வாய்திறந் தேதுரைப்பாள்
ஆகிலும் உம்மைநான் அடையாளஞ் செய்திடுவேன்

அடையாளங் குறையாமல் அருச்சுனரே வாருமென்ருள்
வைத்த அடையாளம் மாருமல் வாருமென்ருள்
சந்தன குங்குமமும் சவ்வாதுந் தான்குழைத்து
அருச்சுனன் மார்பிலே அள்ளி யறைந்தாளே
சந்தனத் தாலே சதுராய்ப் படமெழுதி
குங்குமத் தாலே குறிப்பாய்ப் படமெழுதி
முத்திரை மோதிரத்தால் முன்மார்பிற் குறியும்வைத்தாள்
குறியுங் குறையாமல் கொப்பனவே வாருமென்ருள்
ஆணுலழகு மன்னன் அருச்சுன னேதுசொல்வான்
மாதர்கள் வாசலுக்கு மயிலணையே போனுக்கால்
மற்ருெருத்தி வாசலுக்கு மங்கையரே நான்போனுல்
உன்-குறிவந்து கூப்பிடுமே கொம்பே ரிடையாளே
உன்-ஆணைவந்து கூப்பிடுமே ஆனந்த வாழ்மாரி
இருமிரு மென்றுசொல்லி எழில்விசயன் போய்நடந்தான்
நீண் டிடுங் கால்களுக்கு நெருஞ்சிப்பூச் சல்லடமாம்
மண் டியிடுங் கால்களுக்கு மாதளம்பூச் சல்லடமாம்
குந்தியிடுங் கால்களுக்கு குறிஞ்சிப்பூச் சல்லடமாம்
தூக்கிவைக்குங் கால்களுக்கு துத்திப்பூச் சல்லடமாம்
சந்திரகாந்தி தட்டிகட்டி தாமரைப்பூச் சுங்குவிட்டு
சிங்காணி வில்பிடித்து தேர்விசயன் போய்நடந்தான்
பொன்னிழைத்த துப்பட்டா புவியிற் புரண்டுவர
பூங்கா வனம்புகுந்து புஷ்ப மலரெடுத்து
தருமரை பூசைபண்ணச் சம்பங்கிப் பூபறித்து
வாய்வேக மாகவே வந்துவிட்டா னருச்சுனனும்
அங்காடி வீதிகளும் அரசர்தெரு வுந்தாண்டி
தரும ரிருக்கின்ற ஜாதிலிங்க மேடையிலே
சாந்தணிந்த மேடையிலே தருமரைத் தான்பார்த்து
தருமர்தம் பாதத்தில் சாஷ்டாங்க தெண்டனிட்டார்
கொண்டுவந்த பூமலரை குபுகுபென்று தான்சொரிந்தான்
அண்ணு சரணமென்று அடிபணிந்து தெண்டனிட்டான்
கைகட்டி நின்ருனே கட்டழகன் அர்ச்சுனனும்
வந்து பணிந்தவனை வாழ்த்தி யெடுத்தணைத்து

வாழ்வாய் வளர்ந்திடுவாய் வையகத்தி லென்ஞளும்
நிற்பாய் நிலைதரிப்பாய் நிலையர சாண்டிடுவாய்
கற்பதித்த தூண்போலே கலங்கா தரசாள்வாய்
பதினறு கலையுடைய பார்த்தீபா நீகேளாய்
மதுரா புரித்துரையாள் வாழ்வரசி யல்லிமகன்
பார்த்தீபா உன்மகன்தான் பாலன் புலந்திரனர்
செண்டடித்துப் பந்தடித்துத் தெருவில் விளையாடி
கோட்டி விளையாடி வீட்டுக்கு வந்தவுடன்
களைத்தாற்போல் விழுந்தானும் காளை புலந்திரனும்
காய்ச்சலாய்க் காய்கிறதுங் கண்ணைச் சொருகுவதும்
வெம்பலாய்க் காய்கிறதும் மெத்தவாய்ப் பினத்துவதும்
நயனங்கள் பஞ்சடைந்து நாக்கை வறட்டுவதும்
தோஷித்துப் போனதாய்த் தோணுதாம் மைந்தனுக்கு
பண்டிதர் பணிக்கர்களும் பார்த்த வயித்தியரும்
கைவிட்டுப் போனராங் கட்டழகா வுன்மகனை
முகத்தில் விழிக்கவென்று முடிபுனைந்த ராசாத்தி
ஓலை யெழுதியே உத்தமனே வரவிட்டாள்
தூரத்துச் செய்தி சுருளோலை வந்திருக்க
போகா திருந்தாக்கால் பிழைவந்து நேர்ந்துவிடும்
ஆகையினல் தம்பியரே அருச்சுனரே போய்வாரும்
அச்சுதா னந்தகிருஷ்ண ஐயரைநீர் கூட்டிப்போம்
அவள்-ஆங்காரக் கன்னியென அறிவோ மவள்குணத்தை
மண்ணுளும் ராசாத்தி வலக்கார முள்ளவள்காண்
அவள்-வார்த்தைக்கு வார்த்தை மறுவார்த்தை பேசாதே
பாலன் புலந்திரற்குப் பள்ளிக்கை தீரளவும்
உடம்பு தெளியளவும் உலாவித் திரியளவும்
வாழ்மதுரை ராச்சியத்தில் மன்ன கலந்திருந்து
மைந்தன் புலந்திரனை மன்ன வரவழைத்து
குமாரனைக் கூட்டிவந்து குருநாடு சேருமென்ருர்
என்வார்த்தை தள்ளாமல் இப்போதே நடவுமென்ருர்
போய்வாரு மென்றுசொல்லிப் புத்தி மிகவுரைத்தார்
அப்போ தருச்சுனனும் அப்படியே நல்லதென்ருன்

குந்தியம்மாள் தன்பாதம் கொப்பனவே தெண்டனிட்டான்
தாயா ருடையபாதஞ் சாஷ்டாங்க தெண்டனிட்டான்
மதுரைக்குப் போய்வாரேன் மாதா செலவருளும்
அப்படியே போய்வா அருச்சுனு வென்றனுப்ப
வெற்றி மதயானை வீமா செலவருளும்
நகுல சகாதேவ! நங்கைத் துரோபதையே
போய்-வருகிறேன் பத்திரமாய் வாழ்ந்திரு மென்றுசொல்ல
அப்படியே நல்லதென்று அனைவோருஞ் செலவருள
முகத்திலே சீலையிட்டு முடிமன்னன் தானெழுந்தான்
ஏதுக் கழுகிறீர் ஈஸ்வரன் துணையிருப்பான்
மைந்தன் புலந்திரற்கு வாட்டமொருக் காலுமில்லை
மாயன் துணையிருப்பார் மன்னவரே போய்வாரும்
சொக்கர் துணையிருப்பார் சுந்தரரே போய்வாரும்
என்ற திடங்கேட்டு எழுந்தா னருச்சுனனும்
அச்சுதா னந்த ரையருந் தானுமதாய்
தோழனுந் தானுமாய்த் துரிதமாய்த் தானடந்தார்
கோட்டை கடந்து கொத்தளமுந் தான்கடந்து
தருமா புரங்கடந்து தானடந்தா னருச்சுனனும்
காடு கடந்து கரியமலை தான்கடந்து
ஆறு கடந்து அரிய சுனைகடந்து
சில்லென்ற காடுஞ் செடியும் வனங்கடந்து
வைகைக் கரையேறி மதுரா புரித்தேடி
மதுரையி லுள்ளவரை வாள்விசயன் கண்டானே
அச்சுதா னந்த ரையர் முகம்நோக்கி
மைந்தன் புலந்திரற்கு வாட்டங்க ளுண்டானல்
கம்மாதோ நாடு கலங்காதோ ராச்சியங்கள்
என்னைக் கண்டபோதே யெல்லாம் புலம்பாதோ
மைந்தன் புலந்திரற்கு வாட்டங்க ளொன்றுமில்லை
எத்தை நினைத்தாளோ இராசாத்தி யல்லியரும்
முன்னது பூசல் முதலை நினைத்தாளோ
ஆங்காரக் கன்னியென்று அறிவோ மவள்குணத்தை
அச்சுதா னந்த ரையருங் கூறிடுவார்

அவள்-வார்த்தைக்கு வார்த்தை மறுவார்த்தை பேசாதே
சொல்லுக்குச் சொல்லு வில்லலங்கம் பேசாதே
நீர்-முன்னே நடவுமென்று முகப்பணியி லுட்கார்ந்தார்
வாள்விசய னர்ச்சுனனும் வந்தா னரண்மனைக்கு
அங்கிருக்குந் தூதுவர்கள் அருச்சுனரைக் கைதொழுதார்
உங்கள்துரை யெங்கேயென்றார் உலகாளும் ராசாத்தி
ஆயிரங்கால் மண்டபத்தில் அங்கே யிருக்கின்றார்கள்
என்றது கேட்டவுடன் எழில்விசயன் போய்நடந்தான்
மாணிக்க மண்டபத்தி வாள்விசயன் போய்நடந்தான்
கொம்பனைக்கு முன்னேவந்து கும்பிட்டான் வாள்விசயன்
கையெடுத்துக் கும்பிட்டான் காளையந்த அர்ச்சுனனும்
வணங்கின அருச்சுனனை வாவென்று தானழையாள்
என்னென்று கேளாளாம் ஏரமுகம் பாராளாம்
நின்றாரே யருச்சுனரும் நெடுங்கால் கடுத்துவிழ
இருகால் கடுத்துவிழ ஈரிரண்டு நாழிநின்றார்
ஆணழகுமன்னன் அருச்சுனனு மேதுசொல்வான்
ஒரு-ஆளடிமை யென்றாலும் அரசுதுரை நாயகமே
வந்தவ ராரென்று வாய்திறந்து பேசாரோ
எங்குவந்தீ ரென்றாரோ ஏதென்று கேளாரோ
என்றது தான்கேட்டு இளங்கொடியா ளல்லியரும்
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் தான்கேட்டு
மன்னவ ரர்ச்சுனர்மேல் மர்மந் தொடுத்தோமென்றால்
மைந்தனுக்குப் பவளத்தேர் வாராது யென்றுசொல்லி
அண்ணாந்து பார்த்தாளே அர்ச்சுன ராசாவை
கண்டா ளர்ச்சுனரைக் கனதியுள்ள மன்னவரை
விழிக்க முகத்திலென்று விதித்ததோ யெந்தனுக்கு
உன்னைக்-கண்ணாலே காண ஒப்புதோ யெந்தனுக்கு
தம்பி புலந்திரனுந் தங்கத்தேர் கேளாமல்
மாணிக்கத் தேர்வேண்டி மன்னவரே கேளாமல்
பாண்டிவள நாட்டானும் பவளத்தேர் கேட்டதினால்
உன்னை யழைத்தேனே உனக்கோலை யெழுதுவித்தேன்
என்றது கேட்டானே எழில்விசய னர்ச்சுனனும்

வில்லாளி பார்த்தனவன் விசயனவ னேதுசொல்வான்
பாண்டிவள நாட்டார்க்குப் பவளத்தேர் வேணுமென்றால்
ஒரு-ஆளோடே சொல்லி அனுப்பிவைத்தீ ரானாலே
பவளத்தேர் செப்பனிட்டு பத்தினியே அனுப்புவனே
மைந்தன் புலந்திரற்கு வாட்டங்கள் வந்ததென்றும்
தோஷித்துப் போச்சுதென்றும் சொல்லி யனுப்பலாமோ
தருமருந் தான்கேட்டுத் தயங்கி யழுதாரே
வீம ரதைக்கேட்டு விம்மி வழுதாரே
ஈரல் புகுந்ததொரு இரட்டையர்கள் தானழுதார்
மந்தாரக் குந்தியரும் மாது புலம்பிவிட்டாள்
தீயிற் பிறந்தவளும் திகைத்துப் புலம்பிவிட்டாள்
நாடு நகரமெல்லாங் கூடிப் புலம்பலாச்சு
தருமா புரத்திலுள்ளார் தவித்துப் புலம்பலாச்சு
இப்படிக்கு ஓர்ஓலை யெழுதுவது ஞாயமாமோ
பூமியர சாண்டவர்கள் பொய்யோலை யெழுதலாமோ
அவ்வார்த்தை கேட்டுமவள் அல்லியரு மேதுரைப்பாள்
பாராளும் வேந்தனவன் பவளத்தேர் வேணுமென்று
உண்ணேன் குளியேன் உரங்கேனே பஞ்சணையில்
சாவேன் மடிவேனென்றான் சமர்த்துள்ள புத்திரனும்
பாலமுத முண்ணேனென்றான் பள்ளிக்குப் போகேனென்றான்
உண்மை தனைச்சொல்லி ஓலை யெழுதினுக்கால்
மாலை முடியானே வருவதொருக் காலுமில்லை
சித்தாயன் றங்கையவள் சிறுக்கிச் சுபத்திரையாள்
சோர வளநங்கை சுபத்திரை நாயகியாள்
அல்லும் பகலும் அறுபது நாழிகையும்
அவள்மயக்க மெத்தவல்லோ ஆணழகா வுந்தனுக்கு
தேவடியாள் வீதியெல்லாந் திட்டுண்டு திரிகிறவர்
வருவீரோ வாரீரோ யென்றெண்ணி மன்னவனே
இந்தக்-கூத்திமேலாசையுண்டோ குழந்தைமேலாசையுண்டோ
உந்தன் மனமறிய ஓலையெழு தினேனென்றாள்
மெய்யென்று சொல்லியே வந்தீரே வாள்விசயா
பவளத்தேர் கொண்டுவந்து பார்த்தீபா தருவீரோ

ஆமென்றால் சொல்லும் அல்லவென்றாற் றள்ளிவிடும்
மதுரா புரியாளே மகுடத் துரைச்சியரே
தீவாந் தரத்திற்போய் தேடியே கொண்டுவாரேன்
எங்கே யிருந்தாலும் இக்ஷணமே கொண்டுவாரேன்
பாங்கான புத்திரற்குப் பவளத்தேர் கொண்டுவாரேன்
எத்தனை நாளையிலே எனக்குத்தேர் தந்தருள்வீர்
பொய்வசனஞ் சொல்லாமல் போர்விசயா நீருரையும்
மூன்றாறு நாளைக்குள் முடித்துநான் வாரேனென்றான்
ஒன்பது நாளையிலே உனக்குத்தேர் கொண்டுவாரேன்
பவளம்வெட்டப் போமிடத்தில் பார்த்திபா அர்ச்சுனரே
தேர்வேண்டிப் போமிடத்தில் தேர்விசய அர்ச்சுனரே
கானகத்திற் கன்னியரைக் கண்டு மயங்காதே
பல்லைத் திறந்திடுவாய் பரியாசஞ் செய்திடுவாய்
மருமங்க ளாகவே மன்னவரே யிருப்பீரோ
இப்படி யாகவே யிருந்ததே யுண்டானால்
எமலோகம் போனாலும் இட்டுவந்து சங்கரிப்பேன்
பாதாளம் போனாலும் பார்த்துவந்து சங்கரிப்பேன்
வாள்விசய னருச்சுனனு மறுவார்த்தை யேதுரைப்பார்
ஐந்து பிராயம் அழகுள்ள புலந்திரனார்
மைந்தன்மே லாணையது மச்சுரதங் கொண்டுவாரேன்
மைந்தன்மே லாணையிட மனது துணிந்ததோதான்
பிள்ளையின்மே லாணையிடப் பெற்ற மனம்வருமோ
ஏதாய் துணிந்தது என்மகன்மே லாணையிட
இருவரு மாகவே யிருந்தங்கே பேசுகையில்
அச்சுதா னந்த ரையரும் வந்துவிட்டார்
குருக்கள் மகனைக் கொப்பனவே தான்பார்த்து
வாருமென்று தானழைத்தாள் மகுடமுடி யல்லியவள்
வைகைவள நாடறிந்து வந்தீரோ மாயனே
வாழ்மதுரை நாட்டுக்கு வழியுந் தெரிந்ததோ
மதுரைக் கொருபயணம் வாரா திருந்ததென்ன
என்னைசிறை வைத்தாரே எழில்விசயக் கோமானும்
என்னை மறந்து இருந்தா ரெழில்விசயன்

அவர்வாரா விட்டாலும் அச்சுதரே யெனக்காக
நீர்தா னொருபயணம் நினைந்துவர லாகாதோ
என்றது கேட்டவுடன் எழில்மது சூதனனும்
வாள்விசய னில்லாதே வரவுஞ் செலவுமில்லை
நல்விசய னில்லாமல் நான்தான் வருவேனோ
ஆனாற் கேளையாவே அச்சுதா னந்தரே
பாலன் புலந்திரனும் பவளத்தேர் கேட்டதினால்
அழைப்பித்தே னர்ச்சுனரை யல்லாமற் போனால்நான்
மாலையிட்ட நாள்முதலாய் வணங்காத கன்னிகைநான்
மைந்தனுக் காகவே வணங்கினே னர்ச்சுனரை
பாண்டிவள நாட்டுக்குப் பவளத்தேர் செப்பனிட்டு
மூன்றுறு நாளைக்குள் முடித்துநான் வாரேனென்று
மைந்தன்மே லாணையிட்டு மன்னவனும் வாரார்காண்
அண்ணாவே நீருஞ்சற்றே அறிந்திரு மிதனையென்றாள்
அம்மா-மற்றெந்த ஆணைகளை மறந்தாலும் வாள்விசயன்
மைந்தன் மேலாணை மறப்பாரோ வாள்விசயன்
எப்படியுங் கைக்கொண்டு எழில்விசயன் வருவார்காண்
இப்படி யாகவே யிருக்கின்ற வேளையிலே

## பாண்டியர்கள் அர்ச்சுனரைக் காணவருதல்

அர்ச்சுனர் வந்தசேதி யறிந்தந்தப் பாண்டியர்கள்
மருமகனைக் காணுகைக்கு வாரார்கள் பாண்டியர்கள்
மகமேரு பருவதம்போல் மகிட்சியுடன் வந்தார்கள்
பொன்னுமலை நாடாளும் போர்வழுதி யார்கூட
அல்லியம்மாள் தன்னருகே அனைவோரும் வந்தமர்ந்தார்
மகுடத் துரையாளும் வணங்கினா ளப்போது
வாரு மிருங்களென்று மரியாதை பண்ணினாள்
அர்ச்சுனரைத் தான்பார்த்து ஆருயிரம் பாண்டியரும்
மதுரைக்கு வரவுமக்கு வழியுந் தெரிந்ததோ
வைகைவள நாட்டுக்கு வழியுந் தெரிந்ததோ
மதுரைக் கொருபயணம் வாரா திருந்ததென்ன
வாராமல் நீரிருக்க வயிராக்கி யங்களுண்டோ
அத்திமரம் பூத்ததுபோல் அதிசயமாய்த் தோணுது

பிறவா முடிதரித்த பெண்பெருமா ளேதுசொல்வாள்
பாண்டிவள நாட்டானும் பவளத்தேர் கேட்டதனுல்
அவசர மாயெழுதி அழைத்தே னிவரையிங்கு
சீக்கிரமாய்த் தீவுக்குத் தேர்விசயா போங்காணும்
ஆரு யிரவர் அணிதிரளாம் பாண்டியர்கள்
வந்தகா லாறவில்லே மாதுகுலப் பெண்பெருமாள்
இன்ெருரு நாள்போக்கி யினியொருநா ளாகாதோ
பசியோ டிருக்கிருர் பாலமுதஞ் செய்யுமென்ருர்
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் தான்கேட்டு
பாண்டிவள நாட்டார்க்குப் பவள்த்தேர் வந்தபின்பு
விருந்து சமைக்கிறதும் வெகுமானம் பண்ணுவதும்
சீக்கிறமாய் தீவுக்குச் சென்று நடவுமென்ருள்
காண்டா வனமெரித்த காளேயவர் தான்கேட்டு
மைந்தன் புலந்திரற்கு வாட்டமுண் டாச்சுதென்று
மாதரசி வுத்தாரம் வந்த வுடனேநான்
சிவபூசை பண்ணவில்லே தீர்த்தம் அருந்தவில்லே
நான்-காலால் நடவாமல் காற்ருய்ப் பறந்துவந்தேன்
இன்று பகலேக்கு இருந்துநான் போவேனென்ருன்

## அர்ச்சுனனுக்கு விருந்திடல்.

பிறவா முடிதரித்த பெண்பெருமாள் தான்கேட்டு
தனக்குத் தொழில்கள்செய்யுந் தாதி முகம்நோக்கி
அடிசில் சமையுமென்ருள் ஆனந்த வாழ்மாரி
அப்போது தாதியர்கள் அனேவரும் தானெழுந்து
பத்து விதக்கரியும் பதினெட்டு பச்சடியும்
வருத்த வறற்கரியும் வகையான போஜனமும்
பொரித்த பொரிக்கரியும் பொன்போல் பருப்புகளும்
பச்சென்ற கீரையும் பவளம்போல் நற்கரியும்
தப்பள மும்ரசமும் சரியான கூட்டமுதும்
போதச் சமைத்தார்கள் பொற்கொடி மாதரெல்லாம்
அப்பளம் வடையுடனே முப்பழம் மோருடனே
அடிசில் சமைத்தோமென் றல்லியற்குத் தெண்டனிட்டு
அரண்மனேயைத் தான்பெருக்கி அனேவர்க்கு மணேபோட

அமுதுண்ணுஞ் சாலையிலே அல்லியரும் அர்ச்சுனரும்
மாயன் பெருமாளும் வந்திருந்த வேந்தர்களும்
போசனங்க ளுண்டார்கள் புண்ணியருங் கையலம்பி
சிங்கா தனத்திலே சேரவே வந்திருந்தார்
அப்போது அல்லியரும் அந்தபுரந் தானெழுந்து
காச்சாக் களிப்பாக்கும் கம்மாறு வெற்றிலையும்
ஆரங்கிப் பாக்குகளும் மோரங்கி வெற்றிலையும்
வாகா யிலைச்சுருளும் வர்ணத் துவர்பாக்கும்
கோவை யிலைச்சுருளும் கொத்துத் துவர்பாக்கும்
அள்ளிக் கொடுத்தாளே ஆணு லழகனுக்கு
அந்தச் சமையத்திலே அல்லியை யுற்றுப்பார்த்து
சிறிப்பும் பரியாசஞ் செய்தானே வாள்விசயன்
அப்போது அல்லியவ ளாரணங் கேதுசொல்வாள்
ஐந்து வருஷமாக அயர்த்திருந்த காமமதை
இன்று நினைத்திருக்க என்னாலே யாகாதென
அப்போ தருச்சுனனும் ஆணழக னேதுசொல்வான்
பன்னிறு காதவழி பவளவனம் போகிறேனுன்
மனஸ்தாபம் பண்ணுதே மாலை முடியாளே
மனஸ்தாப மென்னலுமே மாது தலைகுனிந்தாள்
தலைகுனிந்த சாடைதனைத் தாதியர்கள் கீண்டந்த
தென்புறப் பள்ளியறை தேன்மொழிக்குத் தான்திறந்து
வடபுறம் பள்ளியறை மயிலணைக்குத் தான்திறந்து
கட்டிலின் மெத்தைகளைக் கனக்க விரித்துதரி
காம்பரிந்த மல்லிகைப்பூ. கட்டிலின் மேல்பரப்பி
பன்னீரும் கச்சாயம் பைங்கிளிக்கு வைத்தாரே
கண்டந்த அல்லியருங் கடுக நடந்தாளே
மஞ்சத்தின் மேலாக மாது குதித்தேற
அர்ச்சுனன் பின்தொடர்ந்து அல்லிபக்கந் தானிருந்து
தக்கோலம் மென்றுதின்று தனித்து விளையாடி
வெற்றிலை மென்றுதின்று விரும்பி விளையாடி
கச்சாயங் கொஞ்சந்தின்று கலந்து விளையாடி
காமக் கடலிலவர் கலந்து தெளிந்தார்கள்

மோகக் கடலிலவர் முழுகித் தெளிந்தார்கள்
தீராத ஆசையெல்லாம் தீர்த்தானே தேர்விசயன்
ஆருத ஆசையெல்லாம் ஆறினு னர்ச்சுனனும்
மஞ்சத்தை விட்டிறங்கி வந்தா ரிருவருமாய்
மஞ்சனீர் சாலையிலே வந்து புகுந்தார்கள்
காலோடு கையையுங் கனிவாயும் சுத்திசெய்து
மார்போடு தோளும் மதிமுகமுஞ் சுத்திசெய்து
அலங்கார மண்டபத்தில் அமர்ந்தா ரிருவருமாய்
தாம முடியார்கள் சதுரங்க மாடலுற்ருர்
அந்தநற் சமையத்தில் அழகொழுகு புலந்திரனுர்

## புலந்திரன் தகப்பனிடத்தில் வருதல்.

வீதி விலாசமது விளையாடி வேல்வேந்தன்
பந்தடித்துச் செண்டடித்துப் பாலன் விளையாடி
தாயா ரருகாகத் தார்வேந்த னேடிவந்தான்
மகனுரைக் காணவே வாரி யெடுத்தணைத்து
உச்சி முகந்தாளே உள்ளங்கால் முத்தமிட்டாள்
உங்கள்-ஐயர் மடிமேலே ஆரணங்கு செல்லுமென்ருள்
அப்போதே புலந்திரனும் அர்ச்சுனற்கு முன்னேவந்தான்
வாரி யெடுத்தாரே மகனுர் புலந்திரனை
அப்பா வருகவென் னழகுள்ள புத்திரனே
பொன்னுங் குடமே புலந்திரனே வாருமென்ருன்
தார்விசய னர்ச்சுனனும் தன்மடியில் வைத்திருந்தாள்
அப்போது புலந்திரனும் அர்ச்சுனருக் கேதுசொல்வான்
ஐயாவே நீர்கேளும் ஆண்மையுள்ள அர்ச்சுனரே
தங்கத்தேர் தந்தார்கள் தாரவேந்த மார்பாட்டர்
செம்பொன்தேர் தந்தாரே சீருடைய யென்மாயன்
மாணிக்கத்தேர் தந்தாரே மண்டலத்து ராசாக்கள்
முத்துத்தேர் தந்தாரே முடிமன்ன ராசாக்கள்
சித்திர வீதிகளுந் தெருவுபதி னுயிரமும்
மட்டில்லா வீதியெல்லாம் மதுரைக்குள் ஓட்டிவர
பாண்டிப் பெருமாளைப் பவளத்தேர் நான்கேட்டேன்
தன்னுலே யாகாதென்று உன்னை வரவழைத்தாள்

என்றுமகன் கொஞ்சுவதை யெழில்விசயன் தான்கேட்டு
பார்த்தீபா வுந்தனுக்குப் பவளத்தே ராவேண்டும்
அப்படியே நான்தருவேன் அஞ்சாதே யென்மகனே
தீவுக்குப் போகிறேனுன் தீவிரமாய்க் கொண்டுவாரேன்
எங்கே யிருந்தாலும் இக்ஷணமே கொண்டுவாரேன்
எத்தனை நாளையிலே எனக்குத்தேர் கொண்டுவாரீர்
மைந்த னவன்கேட்க மனதுமிகத் தாளாமல்
மூன்றுறு பொழுதிலேநான் முடித்துமே வாரேனென்றார்
ஒன்பது நாளையிலே உனக்குத்தேர் கொண்டுவாரேன்
இருமிரு மென்றுசொல்லி எழுந்திருந்தார் மன்னவனார்
அச்சுதா னந்தஅரி யாயனுந் தானுமதாய்
இருவரு மப்போது எழுந்து நடந்தாரே
கூட நடந்தாளே கொம்பனையா ளன்னம்போல்
ஆனைசேனை பரிவாரம் அனுப்புவோம் ராஜாவே
சேனை பரிவாரந் திரளணியுங் கூட்டுவனோ
இருவரும் போரீரோ எந்தனுக்குச் சொல்லுமென
ஆனையுஞ் சேனையும் அனுப்பவும் வேண்டாங்காண்
இருவரும் போய்வாரோம் என்று வழிநடந்தார்
மன்ன ரிருவருமாய் மந்திரவாள் கைப்பிடித்து
வைகைக் கரைகடந்து மதுரா புரிகடந்து
எல்லைமுழு துங்கடந்து இளந்தோப்புத் தான்கடந்து
காட்டு வெளிகடந்து கரியமலை தான்கடந்து
வேங்கை யடர்ந்தவனம் வெண்களாப் பூத்தவனம்
எட்டடி வேங்கைகள் இருக்கும் வனங்கடந்து
பத்தடி வேங்கைகள் பருத்த வனங்கடந்து
அண்டர்கள் அறியாத தண்டக வனங்கடந்து
வேந்தர்கள் அறியாத வெளிக்காடு தான்கடந்து
சிங்க முறங்குவனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
ஆளி யுறங்கும்வனம் அன்னப்பட்சி தூங்கும்வனம்
ஒருநாரைக் கிருநாரை உயர்ந்த வனங்கடந்தார்
கருநாரைக் கிரைதேடுங் கதலி வனங்கடந்தார்
பவளம் விளைகின்ற பாங்கான காடுகண்டார்

காடுதீப் பட்டாற்போல் காணுவதைக் கண்டார்கள்
அச்சுதா னந்தஅரி யாயரே யென்தோழா
நான்-போகாத காடுமில்லை ஆடாத தீர்த்தமில்லை
பார்த்தா ரிருவருமாய் பவளக்கா டுள்நுழைந்தார்
கயிறோடு கொம்புகளை கலந்த கொழுந்துகளும்
ஓடிப் படர்கிறதும் உயர்கொம்பாய் நிற்கிறதும்
தாவிப் படர்கிறதுஞ் சன்னல்பின்ன லாகிறதும்
வேரிற் பவளமது மின்னுகிற காந்திகளும்
பார்க்கமுடி கூடாது பவளம் விளைகிறது
பவளப் புதுமைகளைப் பார்த்துத் திகைத்துநின்றார்
அக்காட்டில் தானிருக்கும் ஆங்காரக் கதண்டுகளும்
ஆனைத் தலையைப்போல அரியுங் கதண்டுகள்தான்
கரடித் தலையைபோலக் கருங்குளவி தாமிருக்கும்
சிங்கத் தலையைபோல செங்குளவி தாமிருக்கும்
வேகமாய் முழமளவாய் வெளிப்பட்டு வந்தது
வாள்விசய னைக்கொல்ல வந்த கதண்டுகளும்
மன்ன னருச்சுனரின் மச்சரேகை யைப்பார்த்து
தேவாதி பிண்டமிவன் தேர்விசய னர்ச்சுனன்காண்
பேரால் புகழ்பெற்ற பெருமா ளிவர்காணும்
கொன்றோமே யாமானல் குடிகேடு வந்துவிடும்
நமது-கூட்ட மழிந்துவிடும் குலக்கேடு வந்துவிடும்
என்று மிகப்பயந்து எழும்பிக் கதண்டுகளும்
அஞ்சி மிகப்பயந்து அடவியிற் சென்றதுகாண்
ஆணு லழகனவன் அர்ச்சுனனு மேதுசொல்வான்
அச்சுதா னந்தஅரி யாயரே யென்தோழா
நாம்-தேவாதி பிண்டமென்று தெரிந்தது கதண்டுகட்கு
நம்மையே கண்டபோதே நடுநடுங்கிச் சென்றதுகாண்
என்றுசொல் லிக்கொண்டே இருக்குமந்த வேளையிலே
கானக வேடுவர்கள் கனவேட்டை யாடியவர்
அக்காட்டு வேடுவர்கள் அவ்வழியே வாரார்கள்
அர்ச்சுனரை மாயவரை அறிதந்த வேடுவர்கள்

* கதண்டு - கருவண்டு.

மெத்தப் பயந்தார்கள் விடவிடென்று வேடுவர்கள்
கண்டு பயந்தவர்கள் கடுகிவந்து தெண்டனிட்டார்
வேடுவரோ நீங்களென்று விசயனார் கேட்கலுற்றார்
ஆமையா நாங்கள் ஆரணிய வேடரென்றார்
இக்காட்டுக் குள்ளேயே யிருக்குங் கதண்டுகளும்
உங்களைக் கொல்லாதோ உத்தமரே சொல்லுமென்றார்
கதண்டுகள் கொட்டாதோ காவலரே யுங்களையும்
தென்னாட்டுப் பேர்களைத் தீண்டாது கதண்டுகளும்
முகமறியாப் பேர்களை முறித்துக் கிடத்திவிடும்
பவளம்வெட்ட வந்தவரைப் பரமலோகஞ் சேர்த்துவிடும்
கதண்டுகொட்டி செத்தவர்கள் கணக்கு மிதங்களில்லை
எங்கள்துரை பவளக்கொடி யெழுப்பின தனந்தமுண்டு
செத்து மடிந்தவரைச் சீவனோ டெழுப்பிடுவாள்
என்று மவர்சொல்ல ஏதுசொல்வா ரர்ச்சுனரும்
எங்கள்துரை யென்றீரே உங்கள்துரை பேருமென்ன
ஆருடைய ராச்சியங்கள் அறிய வுரையுமென்றார்
ஆனாற்கே ளையாவே அடியோம் உரைத்திடுவோம்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக்கொடி ராச்சியங்கள்
சேராம்பூ ராசாக்கள் செகமைத்தோ ரைம்பதுபேர்
ஐம்பது ராசருக்கும் ஆணுமில்லை பெண்ணுமில்லை
பவளகொடி ராச்சியத்தைப் பாலனில்லை ஆளுகைக்கு
கண்டகண்ட கோவிலெல்லாம் கையெடுத்துக் கும்பிடுவார்
காணாத கோவிலுக்கு காணிக்கை யனுப்பிவைத்தார்
இலையிலே சாதமுண்டால் என்னதவ மென்றுசொல்லி
தரையை யவர்மெழுகிச் சாதங்க ளுண்டார்கள்
பாலடைக்குப் பால்கொடுப்பார் பசித்தார் முகம்பார்ப்பார்
தவித்துவந்த பேர்களுக்குத் தண்ணீர் கொடுப்பார்கள்
வந்த வரலாறும் வளர்ப்பும் பிறப்புஞ்சொல்வோம்
சாலைகள் போட்டுவைத்தார் சத்திரங்கள் கட்டிவைத்தார்
நல்லதண்ணீர்க் கிணறுகளும் நடபாவி கட்டிவைத்தார்
அந்தணர் பிராமணர்க்கு அக்ராரம் கட்டிவைத்தார்
தேசபர தேசிகட்குத் திருமகுடங் கட்டிவைத்தார்

குளங்களை வெட்டிவைத்தார் கோபுரமுங் கட்டிவைத்தார்
என்னதவம் பண்ணூலும் எதினூலும் பிள்ளையில்லே
பெருமையாய்ப் பத்தாண்டு பேய்ந்த பெருமழைக்கு
தெப்பலாய் மிதந்துநின்று சேர்ந்துதவம் பண்ணூர்கள்
மைந்தனை வேண்டியல்லோ மாளிகை மறந்தார்கள்
புத்திரனை வேண்டியல்லோ பூமியை மறந்தார்கள்
அவர்மேல்-ஆலம் விழுதோடி அறுகு முளைந்திடவும்
அரகரா வென்றுசொல்லி அகோரதவம் பண்ணூர்கள்
அரகரா வென்றசத்தம் அலேகட லொப்பனைபோல்
சிவசிவா வென்றசத்தம் தெய்வலோகந் தான்கேட்கும்
அவர்பண்ணுந் தவப்பயனை அறிந்துமல்லோ யீஸ்வரனும்
ஈஸ்வரனும் பார்வதியும் ரிஷபத்தி லேறிவந்து
சேராம்பு ராசரிடம் சிவன்வந்து யேதுசொல்வார்
நீங்கள்-கூலி குறைத்தவர்கள் குறைமரக்கால் போட்டவர்கள்
அங்காடி கூடையை அதிரவிலே யிட்டவர்கள்
பட்டரை நெல்லுதனிற் பதரைக் கலந்தவர்கள்
குளமடைத்து மேகுருவிக் கூண்டைக் கலேத்தவர்கள்
நந்தவன மழித்தவர்கள் நற்பெண்டைக் கெடுத்தவர்கள்
பாலடைக்குப் பால்வாரார் பசித்தார் முகம்பாரார்
நீங்கள்-ஏதுதவம் பண்ணூலும் எதினூலும் பிள்ளையில்லே
இந்தப் பிறப்பிலேயும் எழுபிறப்பும் பிள்ளையில்லே
என்றது கேட்டுமல்லோ இராசாக்க ளேதுசொல்வார்
என்னபாவம் பண்ணூலும் ஏதுதோஷஞ் செய்தாலும்
பாவத்தை தீர்த்துவிட்டுப் பாலகனைத் தாருமையா
என்றவர் துதிக்கையிலே யீசர் மனமிரங்கி
பவளத்தின் கொடிமேலே பாலகியை யுண்டாக்கி
குவ்வாகுவ்வா வென்று குழந்தை யழுகுதடோ
ஆணுமது பெண்ணுமது அழகாய் வளர்த்திடுங்கள்
செம்மையா யிருங்களென்று செப்பி நடந்தார்கள்
பெண்ணை யெடுத்துவந்து பிரியமாய் வளர்த்தார்கள்
கவிழ்ந்தாள் தவழ்ந்தாளே கன்னி யிளமயிலும்
ஒருவயது மிருவயது ஒன்றிரண்டு மூன்ருச்சு

ஐந்தாம் பிராயத்திலே அறிந்தாள் பலகலைகள்
பவளகொடி யாளென்று பாருலக மாளுகிருர்கள்
பட்டந் தரித்தலவோ பவனி வருகின்ருள்
ஆணர சாண்டாலே அழிந்துபோஞ் சீமையென்று
பெண்ணர சாளுகிருள் பேடை மயிலணங்கு
என்றது கேட்டானே இளவிசய னர்ச்சுனனும்
வாலைப் பிராயமோ வயதுமெத்தச் சென்றவளோ
பதினறு வயதாச்சு பைங்கொடி மாதருக்கு
கொஞ்சம் பிராயமேனும் கொழுந்தெல்லாம் பிஞ்சலவோ
பாதிப் பிராயமேனும் பக்கமெல்லாம் பிஞ்சலவோ
பூர்க்கும் பிராயமையா பூம்பிஞ்சு விடுங்காலம்
காய்க்கும் பிராயமையா கனியுதிருந் நற்காலம்
தன்வயதுந் தானறியாள் தைய லிளங்கொடியாள்
ஆனலும் வேடுவரே அவளழகைச் சொல்லுமென்ருன்

## வேடன் பவளக்கொடியா ளழகைச்சொல்வது.

ஏதென்று சொல்வேனையா இளங்கொடியாள் தன்னழகை
பார்க்க முடியாதே பத்தினியாள் தன்னழகை
நீர்முட்டை போலிருக்கும் நேரிழையாள் தன்னழகு
சேற்கெண்டை போலிருக்கும் தேன்மொழியா டன்விழிகள்
மேற்புருவந் தன்னழகோ வேப்பிலைச் சாயலைப்போல்
மயிரழகும் பாவனையும் வண்டு முதுகதுபோல்
ஈச்சம் பழத்திலே யிருண்ட கறுப்புமுண்டு
நாவற் பழத்திலே நல்லகறுப்பு முண்டு
அவள்-மயிரே கறுப்பொழிய மற்றக் கறுப்புமில்லை
அவள்-புருவங் கறுப்பொழிய பின்னே கறுப்புமில்லை
தேய்பிறைச் சாயலைப்போல் திருநெற்றித் தன்னழகும்
சீரிய மூக்கழகும் சிவந்த முகத்தழகும்
முத்துப்போல் பல்வரிசை முருக்கிதழ்போற் செவ்வுதடும்
வள்ளைத்தண் டுபோலே வளர்கா திரண்டழகும்
கழுத்தழகும் பாவனையும் கமுகுகுலை சாய்ந்தாற்போல்
அகண்ட புஜமழகும் ஆலிலைபோல் தன்வயிறும்
முளைத்தெழுந்த மூங்கிலைப்போல் மொய்குழலா ளின்புஜமும்

பத்து விரலழகும் பயிற்றங்காய் நெற்றதுபோல்
சிங்கத் திடைபோலே சீரான யிடையழகும்
இருதுடை யிரண்டழகும் யிளவாழைத் தண்டதுபோல்
முத்துசிப்பி தைத்தாற்போல் முழங்கா லிரண்டழகும்
பாம்பின் படம்போலே பாதத் திரண்டழகும்
புத்தசஞ் சேர்த்தாற்போல் புறங்காலின் பின்னழகும்
அவளுக்கு ஒப்பானோர் ஆருமில்லை வையகத்தில்
சுவரி லெழுதலாம் சுவர்ணத்தில் வார்த்திடலாம்
படத்தி லெழுதலாம் பதுமைபோற் பார்க்கலாம்
சந்திரனைப் போல்முகமாய்த் தையல் துலங்குகிறாள்
சூரியனைப் போல்முகமாய்த் தோகை துலங்குகிறாள்
ஈயத்தைக் காய்ச்சி யிலையிலே விட்டாற்போல்
பொன்னை யுருக்கி பூமியிலே விட்டார்போல்
தங்கத்தைக் காய்ச்சி தரையிற் கவிழ்த்தாற்போல்
நீறுபூத்த தீயினை ஊதிபார்த்த நிறம்போல
ஆயிரம் மின்னலிலே சோதிமின்னல் பிறந்தாற்போல்
பார்க்க முடியாது பத்தினியாள் தன்னழகை
அவ்வார்த்தை கேட்டுமவர் அர்ச்சுனரு மேதுசொல்வார்
அவளை-மண்டலத்து ராசாக்கள் மாலை தரித்தாரோ
கன்னி யிளங்கொடிக்குக் கலியாணஞ் செய்தாரோ
விசயநன்று கேட்கையிலே வேடுவரு மேதுசொல்வார்
நாலுலட்சங் கோடியுண்டு நாயகியை நாடிவந்தோர்
பத்துலட்சங் கோடியுண்டு பத்தினியைக் கேட்டவர்கள்
வண்ணலட்சங் கோடியுண்டு மாதரைக் கேட்டவர்கள்
கைநீட்டி மாலையிட்டார் காசினியி லாருமில்லை
நித்திய கன்னியாய் நேரிழையும் இருக்கின்றாள்
நல்லது வேடுவனே நாயகி மாதவளும்
கன்னி யிளங்கொடியுங் கனவேட்டை யாடுவளோ
வேட்டைக்கு வருவதுண்டோ வேடுவனே சொல்லுமென்றார்
மாதரந்த கன்னியரும் வாராளோ வேட்டைமுகம்
ஆறாற்கே ளையாவே அடியே னொருவார்த்தை
மாத மொருபயணம் வனவேட்டை வருவதுண்டு

திங்க 'ளொருபயணம் வருவாளே தேன்மொழியாள்
மற்றொரு நாளையிலே வருகிற தில்லையென்றார்
ஆனாலும் வேடுவரே அறிய வொருவார்த்தை
காட்டுக்கு வந்தாலே கன்னி யிளங்கொடியும்
பவளக் கொடியாளும் பரிவேட்டை வந்தாலே
இந்ததோர் வனத்திலே யிருக்கும் மிருகங்களில்
எந்தமிரு கத்தின்மேல் இச்சையுண்டு மாதருக்கு
ஆசைகொண்ட மிருகமெது ஆவியரே சொல்லுமென
ஆனாற்கேளையாவே அடியோமொரு விண்ணப்பம்
எந்தெந்த மிருகம்பட்சி எதிர்ப்பட்டு வந்தாலும்
கண்டந்த நாழிகைக்கே கண்டிப்பாள் தப்பாமல்
தனக்கான மான்சிங்கம் தத்தை குயில்மயிலை
அன்னத்தைக் கண்டாலே ஆசையாய் விட்டிடுவாள்
மற்றவை களையெல்லாம் வாரிப்போ ரிட்டிடுவாள்
ஏந்திழையாள் கோட்டையது யெத்தனைத் தூரமுண்டு
பன்னிரு காதவழி பவளங்கள் விளைகிறது
நடுநடுவா யிருக்கிறது நாயகியாள் கோட்டையது
புகழ்புகழா யிருக்கிறது பொற்கொடியாள் கோட்டையது
ஆனால்நீர் போய்வாரும் அன்புள்ள வேடுவரே

## அர்ச்சுனன் பவளக்கோடியாள்மேல் மோகித்தது.

வேடுவரும் போனபின்பு விசயனு மேதுரைப்பான்
அச்சுதா னந்தவரி யையரே யென்தோழா
ஆரணங்கு வார்த்தைகளை அன்பாகக் கேட்கையிலே
மன்மத பாணமது மார்புருகிப் போகிறதே
சித்தசன் விட்டகணை சிறுமார்பு ருகுகிறதே
மாரனவ னெய்தகணை மார்பைப் பிளக்கிறதே
அவளை-கண்ணாலே கண்டாலே காமக் களை தீரும்
பார்த்தேனே யாமாகில் பசிதாகந் தீருமென்றான்
என்றைக்குக் காண்பேனோ ஏலப் பசுங்கிளியை
மாலை தரியாமல் வருவதில்லை யென்தோழா
பாவையைக் கலியாணம் பண்ணாமல் வருவதில்லை
அவளழகைப் பார்ப்பதெப்போ தாசை தெளிவதென்றே

கொம்பனையாள் தன்னுடைய குரலோசை கேட்பதென்றோ
பவளக் கொடிமாதை பார்த்தணைவ தெப்போதோ
அச்சுதா னந்தஅரி யாயரு மேதுசொல்வார்
ஏன்காணும் வாள்விசயா இந்தமதி யுந்தனுக்கு
மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி அல்லியற்கு
போய்மூன்று நாளாறு பொழுதிலே வாரேனென்று
மைந்தன்மே லாணையிட்டு வந்தீரே மன்னவனே
மைந்தன்மே லிட்டவாணை மறந்தீரோ வாள்விசயா
மற்றொரு கன்னியரை மணமாலை சூட்டினையே
மகுடதுரை யல்லியரும் மங்கையவள் பொல்லாதாள்
வாழ்பாண்டி நாடுடையாள் வருவாளே படைகூட்டி
சொல்லுக்கு மஞ்சாளே தொடர்ந்துவந்து படையெடுப்பாள்
வெட்டிவெட்டித் துணித்திடுவாள் வீரமணி வாளாலே
வேண்டாங்கா ணென்தோழா வெறுத்துவிடு மிக்கருமம்
ஆனை லழகுமன்னன் அர்ச்சுனனு மேதுசொல்வான்
நீர்-என்னதான் சொன்னாலும் என்செவியி லேறாது
மாதந்த கன்னியரை மணமாலை சூட்டினக்கால்
சித்தசன் விகாரமது தெளியுங்கா ணென்தோழா
நான்-செத்து மடிந்து செலவழிந்து போனாலும்
மாண்டு மடிந்து வைகுண்டம் போனாலும்
செத்த விடந்தனிலே செங்கழுநீர் பூப்பேன்
குடமல்லி யாய்ப்பிறந்து கொண்டையிலே போயிருப்பேன்
கொண்டைக்குப் பூவாவேன் கொய்வனத்திற் பையாவேன்
கண்ணுக்கு மையாவேன் காதுக்கு மெட்டாவேன்
நாயகியாள் நெற்றியிலே நற்சாந்துப் பொட்டாவேன்
அவள்-முந்தாணித் தொங்கலிலே பொத்திய முள்ளாவேன்
என்றென்று தெளியுமோ யெக்காலஞ் சென்றிடுமோ
கைசோர்ந்து மெய்சோர்ந்து கனத்த முடிசோர்ந்து
கலகலத்து கிலுகிலுத்து காமம்வந்து மேலோடி
நேமங்கெட்டு மதிகுலைந்து நினைவெல்லாந் தடுமாறி
மயங்கிக்கீழ் விழுந்தானே மாதர்மேல் நினைவாகி

## பவளக்கொடியாள் வேட்டைக்கு வருதல்.

அன்றையப் போதையிலே ஆனந்த வாழ்மாரி
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
வேல்பொருதுங் கண்ணாளும் வெளியே புறப்பட்டாள்
ஈட்டிபிடி மன்னவர்கள் யேழுலட்சம் பத்துலட்சம்
கத்திபிடி மன்னவர்கள் கணக்கு மிதங்களில்லை
பட்டய* நேரிசமும் பாரிய வில்மழுவும்
கத்திக்கட் டாரியெழு கதைதண்டக் கோல்கழுமுள்
குறுந்தடி யீட்டியுடன் குந்தமுடை வாள்முதலாம்
எண்ணான்கு ஆயுதமும் எடுத்தரையிற் கட்டினார்கள்
பாராசாரி புரவியின்மேல் பவளகன்னி யேறினாள்
சுற்றிக் குடைபிடித்தார் சூரியனைத் தான்மறைக்க
ஆள்படை சேவகரும் அனந்தகோடி சேனைகளும்
தாதிகளும் மூப்பிகளுந் தையல்மார் சூழ்ந்துவர
பத்துலட்சஞ் சேனையுடன் பரிவேட்டை வாராளே
ஆனையின்மேல் பேரிகையும் அஸ்வம்மேல் டங்காவும்
ஒட்டையின்மேல் நகபத்தும் ஓசைகொட்ட கிளம்பினது
பேய்த்தாரை யூதவே பெரியடமா ரம்அடிக்க
சின்னம் முழங்கவே திருச்சின்னந் தான்முழங்க
ஐங்காத வழிதூரம் அதிர்கிறது பேய்த்தாரை
பயணம் பயணமென்று பயணபேரி யாகிறது
அந்த வனங்களெல்லாம் அதிர வருகிறார்கள்
பொங்குங் கடல்போலே போய்ப்புகுந்தார் கானகத்தில்
செம்புலி வேட்டையாடி சிறுத்தையின் வேட்டையாடி
ஓநாயின் வேட்டையாடி ஒட்டக வேட்டையாடி
வக்காவுங் கொக்குகளும் வருங்குருவி தாராவும்
அம்புக்கொவ் வொன்றாக ஆரணங்கு எய்துவிட்டாள்
தப்பாமற் கொன்றுகொன்று தள்ளிவிட்டாள் கானகத்தில்
வேட்டைகளாடியே விடாய்த்துத் தளர்ந்தாளாம்
கானகத்து மண்டபத்தில் கடுகிவந் திறங்கினார்கள்

---

* நேரிசம்=எறிபடை.

பஞ்சணை மெத்தையிலே பதியக் கொலுவிருந்தாள்
தாம்பூலம் போட்டுக்கொண்டு தனியே கொலுவிருந்தாள்
வாசங்கள் பூசிக்கொண்டு மகிழக் கொலுவிருந்தாள்
கேளிக்கை பார்த்திருந்தாள் கெம்பீர நாயகியாள்
சங்கீதம் பாடக்கேட்டு தையனல்லாள் இருக்கின்றாள்
அப்போது செயவிசய அர்ச்சுனனுந் தானெழுந்து
அச்சுதா னந்தவரி யையர் முகம்பார்த்து
வந்தாளிங்கு வந்தாள்காண் மாத ரிளங்கொடியாள்
பவளக் கொடியாளும் பைங்கிளியாள் வந்தாள்காண்
கானகத்து மண்டபத்தில் கன்னியரும் வந்தமர்ந்தாள்
மத்தள வோசையது கேட்கிறது மாயவரே
என்ன வடிவுருவம் எடுப்பேன்கா ணென்தோழா
அர்ச்சுனரே வுன்னடக்கை அறிந்திருந்தும் நானொருத்தன்
அலைச்சல் படும்படியாய் அறியாம லுன்பின்வந்தேன்
என்னவடி வானாலும் எடுத்துக்கொள்ளும் போர்விசயா
கதண்டுகொட்டி மடிந்தாற்போல் கானகத்தில் கிடக்கின்றேன்
கால்வேறு கைவேறாய் கட்டிக் கிடத்திவைத்து
மாயவரே சுற்றிவந்து மாரடித்து நீரழுங்காண்
என்னைநீர் சுற்றிவந்து யிழவுகொடுத் தழுங்காணும்
பெண்ணாய் வடிவெடுத்து பிரலாபித் திடுங்காணும்
மாரிழவு கொடுத்தெனக்கு மயிரிழவு நீர்கொடுங்காண்
குரலோசை நீரெடுத்துக் கூவியழு மொருவேளை
பெண்குர லைக்கேட்டு பேதையும் வந்திடுவாள்
ஆரென்று பார்க்கவே வருவாள்கா ணாரணங்கு
ஆரணங்கு மிங்குவந்து ஆரென்று கேட்டாக்கால்
மாலையிட்ட கணவனென்று மயிலணைக்கு நீருரையும்
யாத்திரையாய் வந்தோமென்று இயம்புங்காண் தேன்மொழிக்கு
மங்கிலியப் பிட்சைகேளு மாது மெழுப்பிடுவாள்
ஆனந்த வாழ்மாரி அவளழகை நான்பார்ப்பேன்
கண்ணுக்கு நன்றானால் கனமாலை சூட்டுகிறேன்
அழகா யிருந்தாலே அவளைமணஞ் செய்திடுவேன்
வடிவுகள் மட்டானால் மதுரைக்குப் போய்விடுவோம்

என்றுசொல்லி யர்ச்சுனனும் எம்பெருமா ளைநினைத்து
பார்த்தீப னர்ச்சுனனும் பரந்தாம னைநினைத்து

**அருச்சுனன் கதண்டுகோட்டி செத்தவன்போலிருத்தல்.**

பொந்தியைத் தானடக்கிப் பொட்டெனப் பூமியிலே
மூச்சை யடக்கியே மூடிசோர்ந்து கீழ்விழுந்தான்
செத்தவனைப் போலாகத் தீவிரமாய்க் கீழ்விழுந்தான்
மாண்டவனைப் போலாக மன்னவன் கீழ்விழுந்தான்
அச்சுதா னந்தவைய ரவரேது செய்தாரென்றால்
கால்கைகள் வேருகக் கட்டிக் கிடத்திவைத்து

**ஸ்ரீகிருஷ்ணதேவர் பெண்வடிவெடுத்துப் புலம்பல்.**

பெண்ணாய் வடிவுகொண்டு பிரலாபங் காட்டலானார்
தன்னுடைய தலைமயிரைத் தானும் விரித்துக்கொண்டு
மன்னவனைச் சுற்றிவந்து மாரடித்துத் தான்விழுந்தார்
கொற்றவனைச் சுற்றிவந்து கோவென் றழுகலுற்றார்
மலையே பருவதமே வாட்டமில்லை யென்றிருந்தேன்
செம்மலைப் பருவதமே சேதமில்லை யென்றிருந்தேன்
செத்து மடிந்தாயோ சிவலோகம் போனாயோ
மாளவோ யிங்குவந்தாய் மாபாவி பட்டணத்தில்
சாகவோ யிங்குவந்தாய் சண்டாளன் சீமையிலே
உன்னைப் பறிகொடுத்து ஒருத்தியுமாய்ப் போவேனோ
மைத்துனருக்கென்னசொல்வேன்மாமனார்க்கென்னசொல்வேன்
என்றுவக் கணைகளிட்டே யேங்கிப் புலம்பலுற்றார்
அழுகின்ற குரலோசை ஆரணங்கு கேட்டுவிட்டாள்
பவளக் கொடியாளும் பத்தினியாள் கேட்டுவிட்டாள்
ஆடுதலும் பாடுதலும் அத்தனையுங் கையமர்த்தி
ஆரடா தூதுவனே அடர்ந்த வனந்தனிலே
அழுகின்ற குரலேது ஆராய்ந்து பார்த்துவாவா
பெண்குரலாய்க் கேட்கிறது போய்பார்த்து வாருமென்றாள்
மாதா செலவருள வனத்திலொரு தூதுவனும்
ஓடினான் தூதுவனும் ஒருநொடியில் போய்நுழைந்தான்
கதண்டுகள் கொட்டியே கானகத்தில் மாண்டவனைக்



மாண்டவன்போல் கிடந்த அருச்சுனனை பவளக்கொடியாள் வந்து காண்பது.

(37-ஆம் பக்கம் பார்க்க.)

கண்டொருத்தி புலம்புவதுங் கண்ணாலே தான்பார்த்து
ஓட்டம் நடையுடனே ஓடிவந்தான் தூதுவனும்
பவளக் கொடிமாதே பத்தினியே யென்றுரைச்சி
ஆரோ வொருத்தியவள் ஆளனுந் தேவியுமாம்
புருஷன் மடிந்துவிட்டான் புலம்புகிறாள் பெண்சாதி
கதண்டுகொட்டி மாண்டுவிட்டான் கதறிப் புலம்புகிறாள்
அவனைவந்து யெழுப்பிவிட்டால் அனேகமான புண்யமுண்டு.

## பவளக்கோடியாள்வந்து காண்பது.

இந்தவொரு மொழிகேட்டு எழுந்தாள் பவளகன்னி
முத்துநிறை பல்லக்கில் மொய்குழலு மேறினாள்
மாண்டவன் றன்னருகே வந்திறங்கி னாள்காண
அச்சுதா நந்தரென்னு மையர் புலம்புகிறார்
நான்-பாராத நாடுமில்லை பணியாத கோயிலில்லை
மிதியாத வனங்களில்லை மீதிசோ தியுமில்லை
தேசம் பலபலவாய்த் தீர்த்தமு மாடிவிட்டேன்
பூமி பலபலவாய்ப் பூவலமுஞ் சுற்றிவிட்டேன்
பவளப் புதுமையிங்கே பார்க்கவந்தேன் மாதாவே
யானையின் மத்தகத்தை யரியுங் கதண்டுமிங்கே
குதிரை சிரசரியுங் குளவியுண் டிவ்வனத்தில்
சிங்கத் தலைபிளக்குஞ் செங்குளவி கொன்றனவே
அறியாம லிங்குவந்தோம் அரும்பாவி பட்டணத்தில்
தெரியாம லிங்குவந்தோம் செனத்துரோகி தேசமதில்
இப்படி வருங்கருமம் யாதொன்றும் நானறியேன்
மலையே பருவதமே வாட்டமில்லாக் குஞ்சரமே
செம்மலையே பருவதமே சேதமில்லாச் சுந்தரமே
கல்லான தூணேஉன்னைக் கரையா னரித்ததுவோ
இரும்பான தூணேயுன்னை யெரித்ததுவோ செல்லேறி
செம்பருந்து வந்துவுன்னைச் சிறகா லடித்ததுவோ
மோதிரக் கையதனை முகத்தோ டறைந்துகொண்டாள்
கோவென்ற சத்தமுடன் குமுறி யழுகலுற்றாள்
தரையிற் புரண்டழுதார் தரணி யளந்தவரும்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளத்தின் கன்னியரும்

ஆரடி பெண்ணேநீ அழுது புலம்புவதேன்
எந்தவூ ரெந்ததேசம் யெங்கிருந் திங்குவந்தீர்
மாண்டவர் யார்காணும் மாதேநீ சொல்லுமென்றாள்

## ஸ்ரீகிருஷ்ணர் சொல்வது.

ஆனால்கே ளம்மாவே ஆரணங்கே சொல்லுகிறேன்
எங்களுக்கு வூருமுண்டோ எங்களுக்கு நாடுமுண்டோ
தேசந் திரிபவர்க்குச் சீமைகள் பூமியுண்டோ
நாடு வடக்கேயம்மா நகரி திருக்காஞ்சி
தேசம் வடக்கேயம்மா திருக்காஞ்சி நந்நகரம்
தீவு பலதிரிந்து தீர்த்தங்க ளாடிவந்தோம்
பூமி பலவோடி பூவலமுஞ் சுற்றிவந்தோம்
பவளப் புதுமையைப் பார்க்கவந்தோ மென்தாயே
மாலையிட்டுக் கொண்ட மணவாள னிவர்காணும்
தாலி தரித்துக்கொண்ட தலைவ னிவர்காணும்
மார்பளவாய் முகமளவாய் வந்தது கதண்டுகளும்
மாலை முடியானை மன்னவனைக் கொன்றுதம்மா
தாலிச் சரடிழந்து தலைவிரிக்க நாளாச்சு
எங்கேயோ வானம் இடிக்கின்ற தென்றிருந்தேன்
தப்பாதே வானந் தலையி லிடித்ததம்மா
அண்ணனில்லை தம்பியில்லை ஆதரிப்பா ராருமில்லை
அள்ளி யிடுவார்கள் அவனிதனி லாருமில்லை
இருவராய் வந்தோமே ஒருத்திநான் போவேனோ
உன்-பெரும்புண்ணிய மாக பிழைக்கவழி பாருமென்றாள்
மங்கிலியப் பிச்சையது மாதாவே தாருமம்மா
உன்-தருமமாய்ப் போகுதம்மா தாயே முகம்பாரும்
முந்தானை யேந்திவந்து முன்னாலே நின்றழுதாள்
மடிபிச்சை தாருமென்று மடியேந்தி நின்றாளே
பக்கத்தில் நின்றதொரு பாங்கியரு மேதுசொல்வார்
பவளக் கொடியாளே பத்தினியே யென்னாச்சி
ஆரோ வொருத்தன் அவனைக் கதண்டுகொட்டி
செத்துக் கிடக்கின்றான் சேயிழையாள் அவனைச்சுற்றி
மாரிழவு தான்கொடுத்து மண்ணி லழுகின்றாள்

அவனை யெழுப்பினால் ஆச்சியரே புண்யமுண்டு
வாலைப் பிராயமம்மா வயதுபதி னறளவே
அவிந்தவிளக் கேற்றிவைத்தால் அனேகதர்ம முண்டெனவே
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளகொடி யாள்கேட்டு
பாசாங்கு கள்ளியையப் பாற்பிடித்துத் தள்ளுங்கடி
என்று-மேக மலைபோலே மெள்ள நடந்துவந்து
அவன்-காலைப் பிடித்துக் கரிய முடியசக்கி
பார்த்தன் திருமுகத்தைப் பார்த்தாள் பலகாலும்
மூடி யிருக்கின்ற முக்காட்டை வாங்கியல்லோ
உற்றுற்றுப் பார்த்தாளே ஒளிபிறந்த கண்ணாலே
வானவர்கள் பெண்டுகளை வலதழிக்குங் கள்ளனடி
மட்டில்லாப் பெண்டுகளை வகைமோசஞ் செய்தவண்டி
தேசத்து மாதர்களைச் சிறையெடுக்குங் கள்ளனடி
பிரட்டுங்கள் தாதிகளே பின்னழகைப் பார்ப்போமென்றாள்
தாமக் கருங்குழலாள் தாதி புரட்டலுற்றாள்
முன்னழகும் பின்னழகும் முதுகில்மச்ச ரேகைகளும்
தோளில் துளபமாலை தொப்புளிலே யமுர்தகலசம்
பல்லிற் பரசவீணை பாதத்திற் செந்தாமரை
மீசை முருக்கழகும் விழியின் திருவழகும்
நாவிலே நட்சத்திரம் நயனவிழிப் பாவையும்
பதினெட்டு லட்சணமும் பார்த்தாளே புத்தினியாள்
தேவாதி பிண்டமடி திருமாலின் மைத்துனண்டி
பேராற் பெரியதொரு பெருமாளின் மைத்துனண்டி
இவனைநா னெழுப்பினால் எனக்குவரு மோசமென்று
பவளக் கொடியறுத்துப் பார்த்தீபனைக் கட்டுமென்றாள்
பவளக் கொடியறுத்துப் பாங்கிமார் கட்டலுற்றார்
அப்போ தருச்சுனனும் ஆயனைத் தானினைத்து
வாள்விசய னர்ச்சுனனும் மாயனைத் தானினைந்து
எப்படியோ வுந்தயவு எம்பெருமாள் மேகவர்ண
ஆரைச் சதமென்பேன் அன்னியரைத் தஞ்சமென்பேன்
அரிராமா மாயவரே அருகிருந்து காருமென்றார்
கட்டினதே யுண்டானால் கழற்றவே பாருமென்றார்

மனதில் நினைந்தானே வாள்விசய னர்ச்சுனனும்
பவளக் கொடியாலே பாங்கிமார் கட்டினார்கள்
கட்டுங் கொடிகளது கடுகவே யிற்றுதங்கே
ஆனைகட்டுஞ் சங்கிலியால் அர்ச்சுனனைக் கட்டினார்கள்
ஆயன் தயவாலே அரிராமர் கிருபையாலே
அந்தையும் பிடித்திழுத்தே அறுத்தா னர்ச்சுனனும்
மார்பின் சரப்பளியை வாங்கி யவள்கொடுத்து
கெட்டியாய்க் கட்டுமென்று கிட்டவந்து நின்றாளே
மாணிக்கச் சரப்பளியால் வலித்திறுக்கிக் கட்டினார்கள்
அவன்-காலை யசக்குகிற கால்சேஷ்டை மெத்தவுண்டு
கையை யசக்குகிற கைசேஷ்டை மெத்தவுண்டு
இங்கே யிருந்தாலே யெனக்குவரு மோசமென்று
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
பல்லக்கின் மீதேறிப் பாங்கியர்கள் சூழ்ந்துவர
ஏந்திழைமார் சூழவேவந் திறங்கினாள் மண்டபத்தில்
வாள்விசய னர்ச்சுனனும் மாணிக்கச் சங்கிலியின்
கட்டை யவிழ்த்தவனுங் கடுக வெழுந்தானே
அர்ச்சுதா னந்தவரி ஐயரே யென்தோழா
ஆயிரந் தோழருக்கு அரிய சிகாமணியே
கண்டீரோ தோழாநீ கன்னிகையின் லட்சணத்தை
பார்த்தீரோ யென்தோழா பவளகொடி லட்சணத்தை
இவளுக்கு ஒப்பானார் யாருமில்லை வையகத்தில்
ஈஸ்வரன் தன்தேவி ஈஸ்பரியு மீடல்ல
இராம ருடையதேவி இலட்சிமியு மீடல்ல
சதுர்முக னுடையதேவி சரஸ்வதியு மீடல்ல
மூச்சுவாங் கேமன்தேவி மோககன்னி யீடல்ல
இந்திரனார் தன்தேவி யிந்த்ராணி யீடல்ல
ஒளிசந்தி ரன்தேவி யுரோகணியு மீடல்ல
தபிசூரி யன்தேவி சாயாவு மீடல்ல
வடிவேலன் தன்தேவி வள்ளியு மீடல்ல
மன்மதன் தன்தேவி மாதுரதி யீடல்ல
ஆருடைய அழகுக்கு ஆரணங்கை ஒப்பிடுவேன்

வேரிற் பவளமது மின்னுகிற காந்திகண்டாய்
ஆயிர மின்னலிலே சோதிமின்னல் தன்னொளியாம்
கண்ணாலே முடியவில்லை கன்னியழ கைப்பார்க்க
எப்படிதான் மறந்திங்கே இவளைவிட்டு நான்போவேன்
இறப்புக்கும் பிறப்புக்கு மினியொருபெண் வேணுமோகாண்
இவளை-மாலை தரியாமல் வருவதொரு நாளுமில்லை
இவளாலே யென்னுயிரை இழக்கிறதும் தப்பாது
அச்சுதா னந்தவரி யையருந் தான்கேட்டு
ஏன்காணும் வாள்விசயா இந்தமதி யுந்தனுக்கு
தோண்மாலை போட்டதொரு தோழிமார் தங்களிலும்
பாஞ்சாலன் பெற்றபெண்ணை பத்தினியை மாலையிட்டீர்
அவளிலு மதியழகோ ஆரணங் கிவளழகு
சொந்த வெனதுதங்கை சுபத்திரையை மாலையிட்டீர்
அவளிலு மதியழகோ ஆரணங் கிவளழகு
அகத்தியனார் பெண்போக வதியவளை மாலையிட்டீர்
அவளிலு மதியழகோ ஆரணங் கிவளழகு
மேகம் பயின்றெடுத்த மின்னொளியை மாலையிட்டீர்
அவ்விலு மிவளழகோ ஆனந்த வாழ்மார்பா
மதுரைதுரை யல்லியரை மாலையிட்டீர் வாள்விசயா
அவளிலு மிவளழகோ ஆரணங்கு பெண்மயிலாள்
மெல்லியரைப் பார்க்கிலும் மிச்சமுண்டோ யிவளழகு
வேண்டாங்காண் வாள்விசயா வெறுத்துவிடு மிவளாசை
ஏழுலட்சந் தேவிமா ரெல்லோருந் தானிருக்க
மாதொருத்திக் காகவே மயங்கி யழுவானேன்
என்னலும் காண்டாவன மெரித்தவன் அப்போது
நீர்-என்னதான் சொன்னாலு மென்செவியி லேறாது
மாதந்தக் கன்னியரை மணமாலை சூட்டினால்
என்னுடைய சீவனிங்கே இருக்குங்கா ணென்தோழா
எண்ணப் படிமுடிக்க ஈஸ்வரனே வேண்டுங்காண்
என்று-இருவரு மாகவே இருக்கின்ற வேளையிலே
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளகொடி நாயகியும்
பொழுதெல்லாஞ் சரிந்ததினால் போகவேண்டும் மாளிகைக்கு.

மார்பின் சரப்பளியை வாங்கிவா தாதியென்ருள்
அப்போது சாதிமார்கள் அதிதுரித மாகவந்து
ஆர்காணும் மன்னவனே அழகான ஐயாவே
ஆச்சியர் கட்டிவைத்த அழகு சரப்பளியை
கட்டிவைத்துப் போனதைக் கடுகவே தாருமென்ருர்
பொழுதெல்லாஞ் சரிந்தது போகின்ரு ளரண்மனேக்கு
மார்பின் சரப்பளியை மன்னவனே கொடுத்திடென்ருர்
திட்டென் றெழுந்திருந்து தேர்விசய னேதுரைப்பான்
உங்கள்-கோட்டைக ளேறிவந்து குதித்தனேடி கொம்பனேயீர்
அரண்மனே யேறிவந்து ஆரணங்கீர் குதித்தனேடி
மதிலேறி குதித்தேனேடி மாதுநல்லாள் கோட்டையிலே
பெட்டிபோய் யெடுத்தேனே பொக்கிஷந் திருடினேனே
மாதவள் கைபடவே வலியவந்து தொட்டேனே
கள்ளன் திருடனேப்போல் கன்னமிட்டுப் போனேனே
என்னகுற்றஞ் செய்தேனன் என்னே யவள்தானும்
கட்டழகி மாதவளுங் கட்டிவைத்துப் போனளே
கள்ளனேப் போலாகக் கட்டவும் நியாயமுண்டோ
திருடனேப் போலாகச் சேர்த்துகட்ட நியாயமுண்டோ
கட்டினலுந் தீராது கன்னியவ ளாசையது
கட்டியமா தானலென்னேக் காட்டில்விட்டுப் போகலாமோ
கூட வழைத்தலவோ கொம்பனேயாள் போகவேணும்
அரண்மனேக் கென்னேயும் அழைத்துபோக லாகாதோ
என்ன சுதந்தரத்தால் என்னேயவள் கட்டிவைத்தாள்
அம்மானின் மகனென்று ஆசையாய்க் கட்டினளோ
அத்தையின் மகனென்று அன்பாகக் கட்டினளோ
வாகான கன்னியென்று மணமாலே சூட்டினேனே
வடிவான கன்னியென்று வாழ்மணஞ் செய்தேனே
என்ன சுதந்தரத்தால் என்னேயவள் கட்டிவைத்தாள்
கையிலகப் பட்டதை கன்னியரே விடுவேனே
மார்பின் சரப்பளியை மாதே கொடுக்கேனடி
வலியவந்த பாக்கியத்தை மாதரசே விடுவேனே
சண்டைக்கு வேண்டுமென்ருல் சரியாக வாரேனடி

அவளுக்கும் அஞ்சுவேனோ ஆனந்த வாழ்மாரி
என்றது கேட்டுடனே ஏதுசொல்வார் தாதியர்கள்
உந்தனுக் குச்செய்த உபகார மத்தனையும்
வேங்கைக்குச் செய்த விஷதாரி யாச்சுதடா
செத்தவிடத் தில்செத்து செல்லுளுத்துப் போகாமல்
மாண்டவிடத் தில்மாண்டு மண்ணுளுத்துப் போகாமல்
எழுப்பிவிட்ட தோஷமோ இத்தனையும் பேசுகிறாய்
*ஆகாத்தியம் பேசுதற்கு அடுக்குமோ வுந்தனுக்கு
என்றது சொல்லியே இளங்கொடி மார்நடந்தார்
வாயுவேக மாகவே வந்தாரே மண்டபத்தில்
பவளகொடி மாதுக்குப் பாதத்தில் தெண்டனிட்டார்
கைகட்டி வாய்புதைத்துக் கன்னியரு மேதுரைப்பார்
மார்பின் சரப்பளிக்காய் மன்னவனைப் போய்க்கேட்டோம்
கேட்டதற் கவனளக்குங் கெட்டிக்கா ரத்தனத்தை
என்னென்று சொல்லுவோம் இடிவிழுவான் சொன்னசொல்லை
பொழுது சரிந்தது போகிறோ மரண்மனைக்கு
மார்பின் சரப்பளியை மன்னவரே தாருமென்றோம்
தரமாட்டே னென்றுசொல்லித் தப்புதப்பா பேசுகிறான்
வாடிபோடி யென்கின்றான் வசைகேலி பண்ணுகிறான்
அவளுக்கு மஞ்சுவனோ அமருக்கு வருவேனென்றான்
இப்பெச்சு கேட்டதுமே யேதுசொல்வாள் பவளக்கொடி
அப்போதே சொன்னேனே அநர்த்தம்வரு மென்றுசொல்லி
அவனை யெழுப்புவதே ஆகாதென் றுரைத்தேனே
நமக்கது வினைஎன்று நானுச்சே சொன்னவளும்
பொன்னுஞ் சரப்பளியும் போனாலும் போகட்டும்
மாளிகைக்கு நாம்போவோம் மாதுநல்லீர் பயணமிடும்
என்றது சொன்னவுடன் இளவிசய னர்ச்சுனனும்
அச்சுதா னந்தவரி யையர் முகம்நோக்கி
என்ன வடிவுருவம் எடுக்கலா மென்தோழா
அன்னத்தின் மேலேநல் ஆசையுண்டு மாதருக்கு
வேடனைப் போலாக வேஷ மெடுங்காணும்

* ஆகாத்தியம் = அக்கிரமம்.

என்னை விலைகூறி யெடுத்துப்போம் ஏந்திழைமுன்
பார்த்தாசைப் பட்டல்லவோ பரிந்து விலைகேட்பாள்
ஆயிரம்பொன் னென்றுசொல்லி அவள்கையில் நீர்கொடுத்து
ஊருக்கு நேர்கிழக்கே* ஒருகொம்பன் கோவிலண்டை
அங்கேபோய் நீரிருங்காண் அச்சுதா நான்வாரேன்
மாயன் பெருமாளை மனதிலே தானினைந்து
ஆயன் பெருமாளை அப்போது நினைத்தானே
எம்பெருமாள் மேகவர்ண ஏழுல களந்தமாயா
முட்டையிற் குஞ்சுகளை முகமறியா நாளையிலே
பிட்டு வளர்த்தீரே பிரபலிய மாகவென்று
மூக்காலே முள்பொறுக்கி முழுமரத்திற் கூண்டுகட்டி
காக்கையின் குஞ்சுகளை கருதி வளர்த்தீரே
உன்னையே நம்பிநம்பி உயிர்கொண் டுலாவுகிறேன்
மாதுபவ ளக்கொடியை மணமாலை சூட்டுகிறேன்
அன்னத்தின் வடிவாக ஆண்டவனே நீர்கொடென்றார்

## ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு அன்னவடிவுகொடுத்தல்

அர்ச்சுனன் தானினைக்க ஆயர்பெரு மாளறிந்து
அன்னத்தின் வடிவாக அப்போதே வரங்கொடுத்தார்
ஆண லழகுமன்னன் அன்னத்தைப் போலானான்
†செட்டை யழகென்ன சீருடைய நெற்றியென்ன
காலி னழகென்ன கழுத்தி னழகென்ன
கண்ணி னழகென்ன காது வடிவழகே
மூக்கி னழகென்ன முனைமயிரும் பாவனையும்
கூவுங் குரலழகன் குலுங்கும் நடையழகன்
அர்ச்சுன ராசனவன் அன்ன வடிவானான்

## ஸ்ரீகிருஷ்ணதேவர் வேட வுருவெடுத்தல்

அச்சுதா னந்தவரி யாயர் பெருமாளும்
காட்டுக் கிழங்கெடுக்கும் கனவேடன் போலானார்
காற்செருப்புந் தோல்குல்லாவுங் கைதனிலே மான்றலையும்
பன்றிகுத்தும் ஈட்டிபாலா பல்லயமும் கைபிடித்து

*ஒரு கொம்பன்= விநாயகர். † செட்டை= இறகு.

கதையுடை வாள்மழுவு கட்கமுங் கைபிடித்து
கருநாயுஞ் சங்கிலியுங் கைதனிலே தான்பிடித்து
அன்னத்தை யேந்திகொண்டு அவசரமாய்க் காட்டைவிட்டு
பவளக் கொடியாள் பத்தினியாள் தானிருக்கும்
மண்டபத்து வழியாக வருகிறான் வேடனவன்
ஆரணங்கு தோழிமார்கள் அன்னத்தைத் தான்பார்த்து
ஆரடா வேடுவனே அன்னத்தை விற்கிறவன்
விற்பதே யாமானால் வேண்டியபொன் கிடைக்குமிங்கே
அப்படியே நல்லதென்றான் அழகுள்ள வேடனவன்
ஓடியே வந்தார்கள் உத்தமிமுன் தாதியர்கள்
பவளக் கொடியாளின் பாதத்திற் போய்ப்பணிந்து
ஆரோ வொருவேடன் அன்னத்தை விற்கவுற்றான்
அன்னத்தைப் பார்த்தால் அழகா யிருக்குதம்மா
கண்ணிட்டுப் பார்க்கவே காண முடியாது
நாம்-எங்கிலும் பார்த்ததில்லை இயலான அன்னமது
வைத்து வளர்க்கலாம் வாங்குமம்மா ஆச்சியென்றார்
அவ்வார்த்தை தான்கேட்டு அன்ன நடைமாது
அந்தநல்ல வேடுவனை அழைத்தோடி வாருமென்றாள்
ஓடினார் தாதியரும் ஒருநொடியில் வேடனண்டை
ஆரடா வேடுவனே ஆச்சி யழைக்கின்றாள்
அன்னத்தைக் கொண்டுவாடா அழகுள்ள வேடுவனே
என்றது சொல்லையிலே இசைந்து வழிநடந்தான்
பவளக் கொடியாள் பத்தினியாள் முன்னேவந்தான்
கண்டாள் பவளக்கொடி கட்டழகி யன்னமதை
என்னப்பா வேடுவனே யென்னவிலை யன்னமென்றாள்
ஆயிரம் பொன்கொடுத்தால் அன்னம் தருவேனென்றான்
ஆரடி தாதிகளே அளந்துபொன் கொடுத்திடென்றாள்
அன்னத்தை கையில்வாங்கி அழகாய் மடியில்வைத்தாள்
மூக்கினால் அர்ச்சுனனும் முன்மார்பில் குத்தலுற்றான்
மார்பில் ஸ்தனத்தையவன் வாயால் பிடித்திழுப்பான்
முகத்தோடே முகமணைவான் முத்தங் கொடுத்திடுவான்
பவளக் கொடியாளும் பத்தினியா ளேது சொல்வாள்

என்னடா வேடுவனே இப்படிமேல் விழுகிறது
ஆயிழையா ளென்தங்கை அவள்வளர்த்த அன்னமிது
பெண்டுக ளென்றாலோ பிரியமாய் மேல்விழுமே
ஆசையாய் முத்தமிட்டே அணைத்து விளையாடும்
சீராய் வளர்த்துமென்று செப்பி வழிநடந்தான்
ஆரடி தாதிகளே அலங்காரச் செங்கமலம்
இந்தஅன்ன மெப்பெப்போ திரைக ளெடுத்ததோ
போசனங் கொண்டுவாடி பொற்கொடியும் என்றாளே
மாம்பழமும் பலாப்பழமும் மலைவாழை ரஸ்தாளி
கரிவாழை செவ்வாழை காட்டு விளாம்பழமும்
கொண்டுவந்து வைத்தாளே கொம்பனையாள் முன்னேதான்
அன்ன மதற்கூட்டி ஆவல் தெளியவைத்து
ஆரடி தாதிகளே அழையுங்கள் தச்சனைத்தான்
ஈழத்துத் தச்சனை இக்ஷணமே யழையுமென்றாள்
ஓடினார் தாதியர்கள் ஒருநொடியி லிட்டுவந்தார்
வந்து பணிந்தானே வரிசையுள்ள தச்சனவன்
என்னை யழைத்தது ஏது கருமமென்றான்
அன்னமது தானிருக்க அழகுகூண்டு பண்ணுமென்றாள்
சொன்னதுந் தச்சனவன் செப்பனிட்டான் சீக்கிரத்தில்
செம்பொன்ஒருநூறும்பெற்றுத் தெண்டனிட்டுபோய்நடந்தான்
அன்னத்தைத் தானெடுத்து ஆவலுடன் முத்தமிட்டு
கூண்டி லடைத்தவளும் கொப்பனவே தானெழுந்தாள்
ஏறினாள் பல்லக்கில் எடுத்தார் நெடுங்குடைகள்
பக்கம்வந்து நிறைந்தார்கள் பாங்கிகளுந் தோழிகளும்
சுற்றிவந்து நிறைந்தார்கள் தோழிகளும் மூப்பிகளும்
ஆனைமேல் பேரிகைகள் அடிக்கிறது கோடிவகை
ஒட்டையின்மேல் நகபத்தின் ஓசைமுழங் குகின்றது
முழங்கவே மேளதாளம் மொய்குழலும் வாராளே
காடு வனம்கடந்து கரியமலை தான்கடந்து
வனமாய் வனங்கடந்து வாழ்மனைக்கு வாராளாம்
*தெத்துக் கடந்தாள் தெருவீதி தான்கடந்தாள்

---

* தெத்து = எல்லை.

கடையும் கடைத்தெருவுங் கருமார வீதிவிட்டு
அங்காடி வீதியது அரண்மனையுந் தான்கடந்து
மாடத் தெருவீதி மயிலணையுந் தான்கடந்து
கோபுர வாசலண்டை கொம்பனையாள் வந்துநின்று
மாளிகையி னுள்நுழைந்து வந்தாள்கொலு மண்டபத்தில்
சிங்கார மண்டபத்தில் தேன்மொழியாள் போய்ச்சேர்ந்தாள்
அந்திகால மாச்சுது ஆதித்தன் போய்மறைந்தான்
பொழுது மறைந்தது போத விருளாச்சு
ஆரடி தாதிகளே அலங்காரத் தோழிகளே
அன்னத்தைக் கொண்டவிலை அறிவீர்கள் தாதியரே
கூடத்தின் மாடத்தில் மங்கையரே கட்டாதீர்
நற்பவளத் தூணுக்கு நடுவாகக் கட்டுமென்றாள்
சலவைசப்ர மண்டபத்தில் தான்வைத்துக் கட்டலுற்றார்
பாரித் திருந்தானே பாரமெத்த தோணுகைக்கு
அடி-அக்கமாரே தங்கைமாரே அன்னமெத்த பாரமடி
மஞ்ச மலங்கரித்து மண்டபத்துச் சங்கிலியால்
வைத்திழுத்துக் கட்டினார் மன்னவ ரர்ச்சுனரை
பவளகொடி யாளுடைய பஞ்சணை மேலாக
நற்பவளத் தூண்நடுவே நலமாகக் கட்டினார்கள்
பவளக் கொடியாளும் பத்தினியா ளப்போது
தீர்த்தங்கள் வாங்கியே திருவாயுங் கைகழுவி
போசனங்க ளுண்டு புனல்வார்த்துக் கைதுவட்டி
பஞ்சணைச் சாலையது படுக்கையறை ஜோடியென்றாள்
கடுகெனவே வெழுந்தார்கள் கட்டழகி தாதியரும்
கண்மூன் றுடைய கனவயிரக் கட்டிலிட்டு
மெத்தை மடித்திட்டு மேலே யணைகோலி
காய்பரிந்த ஐங்கலப்பூ கட்டிலின் மேல்பரப்பி
கால்கோட்டை கைகோட்டை இட்டந்தக் காரிகைக்கு
ஒருகு தலையணையா மொய்யாரப் பஞ்சணையாம்
அன்னவூ சல்மேலே அழகாக ஜோடித்தார்
அத்தர் புனுகுகளை அள்ளித் தெளித்தார்கள்
கதம்ப கஸ்தூரிகளை கரைத்துத் தெளித்தார்கள்

சந்தனமுங் குங்குமமும் சவ்வாதுந் தான்தெளித்து
சாம்ப்ராணி வாடைகளும் சந்தனப் புகைகொடுத்தார்
பஞ்சணை மெத்தையண்டை வைத்தார் தம்பலவட்டில்
காச்சாக் களிப்பாக்கும் கைம்மாறு வெற்றிலையும்
ஆரங்கி பாக்குசளும் மோரங்கி வெற்றிலையும்
வாகா யிலைச்சுருளும் வர்னத் துவர்பாக்கும்
கொத்துத் துவர்பாக்கும் கோவை யிலைச்சுருளும்
முத்துசுட்ட சுண்ணாம்பும் மொய்குழற்கு வைத்தார்கள்
கெண்டியில் தீர்த்தமும் கொண்டுவந்து வைத்தார்கள்
குத்து விளக்கும் குடவிளக்கு மேற்றிவைத்தார்
மாட விளக்கும் மயில்விளக்கு மேற்றிவைத்தார்
வண்ண மணிவிளக்கை வாசலி லேற்றிவைத்தார்
ஜோடித்தோ மம்மாவென்று சொல்லியே தெண்டனிட்டார்
பவளக் கொடியாளும் பத்தினியுந் தானெழுந்து
காவல்பதி னெட்டுவாசல் காக்கிற தாதியர்கள்
பத்திரங் காவலென்று பஞ்சணையில் போயிருந்தாள்
பள்ளியறைச் சாலையிலே பைங்கிளியும் போயிருந்தாள்
காயாரக் காய்த்த கமுகி னிளம்பாக்கும்
வாயாரத் தின்றவளும் மலரணையிற் பள்ளிகொண்டாள்
மந்திர வாளுருவி மார்மேலே சாத்திக்கொண்டாள்
பவளக் கொடியாளும் பள்ளிகொண்டா ளப்போது
அங்கங்கே தாதிமார் அனைவோரும் பள்ளிகொண்டார்

## அர்ச்சுனராசன் அன்னவடிவை விட்டு மனிதரூபமாகுதல்.

அனந்தல் நெடுநாழி யான பிறகாக
ஆணழக னர்ச்சுனனும் ஆயனைத் தானினைந்து
மாயன் பெருமாளை மனதிலே தானினைந்து
கூண்டைத் திறந்தவனும் கொப்பெனவே ரூபமானான்
அன்ன வடிவைவிட்டு ஆள்ரூப மானானே
பொல்லாத காதல் புலம்புகிறது கௌளியது
வன்குரலில் பல்லியது வலப்புறமாய்ச் சொல்லியது

எழும்பிய காதலே எண்ணியவள் பார்ப்பளவில்
ஆள்வருத் தாகவே அக்கௌளி சொல்லியது
அடுத்தடுத்து சொல்லுவதும் ஆள்வருத்தாய்க் காணுவதும்
இத்தனே நாளாக இல்லாத கௌளியது
ஒருநாளுஞ் சொல்லாதே உச்சிதமாய்ச் சொல்லுதின்றே
காட்டி லிருந்தவர்கள் கள்ளரோ நானறியேன்
ஆரம்பம் பண்ணுமல் அழுதாற்போ லேயிருந்தாள்
பின்னும் மரைநாழி பேசாமல் பொறுத்திருந்தாள்
பொல்லாத காதல் பொற்கொடிக்கு எழும்பிற்று
எழும்பிய காதலே எண்ணியவள் பார்ப்பளவில்
அடுத்தடுத்து சொல்லுவதும் ஆள்வருத்தாய்க் காணுவதும்
எண்ணிக் கலங்கி இளங்கொடியா ளேதுசொல்வாள்
ஆரடி தாதியரே அலங்காரச் செங்கமலம்
பஞ்சணே மேலாகப் பாங்கியரே பள்ளிகொண்டேன்
ஒருநாளுஞ் சொல்லாத உச்சித கௌளியது
வலப்புறத்துப் பல்லியது வடபுறமாய்ச் சொல்லுதடி
கௌளியின் சாஸ்திரத்தை ஆராய்ந்து பாரடிநீ
என்றது கேட்டவுடன் இளங்கொடிமார் தாதியர்கள்
அறிந்தமட்டும் சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்க்கலுற்ருர்
ஆரோ தெரியாது ஆள்வருத்தாய்க் காணுதென்ருர்
அவ்வார்த்தை கேட்டுமவள் ஆரணங்கு ஏதுரைப்பாள்
காவல்பதி னெட்டுவாசல் காக்கிற மங்கையர்கள்
பத்திர மாகவே பைங்கொடியீர் காத்திடுங்கள்
எச்சரிக்கை யாகவே யிருங்களடி காவலிலே
தப்பித முண்டானல் தலேயைத் தறித்திடுவேன்
காவ லுடையவர்க்குக் கட்டுதிட்டம் பண்ணிவைத்தாள்
பவளக் கொடியாள் புத்தினியாள் சொற்படிக்கு
பதினெட்டு வாசலுள்ளார் பத்திரமாய்க் காக்கலுற்ருர்
அன்னவூசல் மேலாக ஆரணங்கு பள்ளிகொண்டாள்
பின்னு மொருநாழி பேசாமல் பொருத்திருந்தாள்
பொல்லாக் கௌளியும் சொல்லுதே அடுத்தடுத்து
பின்னு மொருநாழி பேசாமல் பொருத்திருந்தாள்

காண்டா வனமெரித்த காளை யெழுந்திருந்து
எப்படிக்கு மிவளுடனே யிணங்கி மருவிடுவேன்
மூச்சைப் பிடித்தவனும் விளக்கை யணைத்துவிட்டான்
கொம்பனையாள் மெத்தையை கொப்பன வசக்கிவிட்டான்
பஞ்சணை மெத்தையிலே பைம்மணிக ளசைந்ததுகாண்
பொட்டென விழித்துப் பொற்கொடியும் பார்த்தாளே
மந்திர வாளாலே வீசினாள் மாதுகன்னி
முன்லாகை யாகாமல் பின்லாகை யால்குதித்தான்
நற்பவளத் தூணுக்கு நடுவாக யிற்றதுகாண்
வெட்ட விழுந்தது வீரமணி வாளாலே
பவளக் கொடியாளும் பத்தினியா ளேதுசொல்வாள்
வானவர்கள் தேவர்களும் வந்தாரோ வாசலுக்கு
வானவர்க ளானக்கால் வாள்முனைக்குத் தப்பிடுவார்
மனுஷரூப மானக்கால் மாண்டு மடிந்திடுவார்
என்றது சொல்லி இளங்கொடியாள் தான்படுத்தாள்
பின்னு மொருநாழி பேசாமல் பொருத்திருந்தாள்
ஆனந்த மார்பனவன் அர்ச்சுன ராசதுரை
மஞ்சத்தைத் தான்பிடித்து மன்ன னசக்கிவிட்டான்
அரைவடமும் கிண்கிணியு மசைந்து கிடுகிடென்ன
அன்னமும் பொன்மயிலும் ஆடிற்று வோசையுடன்
மஞ்சம் பிரண்டது மணிக ளசைந்ததுகாண்
வேல்பொருதுங் கண்ணாளும் வீசலுற்றா ளந்நேரம்
வீசின வாளாலே வேந்தரவ ரர்ச்சுனரும்
முன்லாகை யாகாமல் பின்லாகை யால்குதித்தார்
நற்பவளத் தூணுக்கு நடுவாக யிற்றதுகாண்
கண்விழித்துப் பார்த்தாளே கட்டழகி மாதுகன்னி
காட்டி விருந்ததொரு கள்ளன் திருடனோ
வானவர்கள் தேவர்கள் வந்தாரோ நானறியேன்
மஞ்சம் புரளுவதேன் மணிகளெலா மசைவானேன்
வானவர்க ளென்றாலென் வாள்முனைக்குத் தப்பிடுவார்
ஆள்ரூப மானால் அவர்பிழைக்கப் போவதில்லை
ஏறெடுத்துப் பார்த்தாளே யிளங்கொடியா ளர்ச்சுனரை

மன்னன் முதுகிலே மட்சரேகை கண்டாளே
அப்போ துவிசயன் அர்ச்சுனனு மேதுரைப்பான்
உன்-வாசலுக்கு தேவர்களும் வாராரோ பைங்கிளியே
நான்-தேவாதி பிண்டமடி தேர்விசய னர்ச்சுனண்டி
மாயனெம் பெருமானுக்கு மைத்துனன் நான்தாண்டி
பல்லொளியைக் காட்டினன் பவளக் கொடியாட்கு
பல்லொளியைக் காட்டலுமே பார்த்து நகைத்துவிட்டாள்
பல்லொளி கண்டவுடன் பவளக்கொடி சோர்ந்துவிட்டாள்
சோர்ந்து மயங்கியவள் சொரணைதப்பிக் கீழ்விழுந்தாள்
ஆணு லழகுமன்னன் அர்ச்சுனன் தானெழுந்து
சாய மணிக்கவுரி சந்தனத்தா லூதுவத்தி
வீசின களைதெளிய வெண்சா மரைகவுரி
வீசக் களைதெளிந்து மெல்லியருங் கண்விழித்து
கற்பழியாக் கன்னியரும் கற்பழிந்து போனாளே
கற்பழிந்து போனேனென்று கன்னி புலம்புகிறாள்
அப்போ துவிசயன் அர்ச்சுனனு மேதுசொல்வான்
நீதானோ கற்பழிந்தாய் நேரிழை நாயகமே
கற்பழிந்த மாதர்களைக் கன்னியரே சொல்கிறேன்கேள்
தீயிற் பிறந்தவளாம் திரோபதை பாவையரும்
மேகம் பயின்றெடுத்த மின்னொளி நாயகியும்
நாகம் பயின்றெடுத்த நறுநுதலாள் கன்னியரும்
அச்சுதன் தங்கையவள் ஆரணங்கு சுபத்திரையும்
மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி யல்லியரும்
நான்-கற்பழித்த மாதர்கள் கணக்கு மிதங்களில்லை
என்றது கேட்டடனே இளங்கொடியா ளேதுசொல்வாள்
எத்தேச காலமும் இதுவே தொழில்தானோ
எப்போது மெந்தனுக்கு இதுவே தொழில்தாண்டி
குருகுல வம்மிசத்தில் குந்தி வயிற்றாலே
ஐவ ருடன்பிறந்தேன் ஆனந்த வாழ்மாரி
அவனி முழுவதும் ஆளுகிறார் தர்மலிங்கம்
நான்-தேவியைக் கொள்கிறதுஞ் செல்வரை யீன்கிறதும்
இதுவே தொழிலாக இருக்கிறே னேந்திழையே

மன்னவருந் தேவியரும் மனதுற வர்னபின்பு
உன்மேல் மயலாகி உந்தனைச் சேரவென்று
அன்ன வடிவதுநான் ஆரணங்கே கொண்டேனே
வேடனார் கைதனிலே விலையாகக் கொண்டாயே
அத்தாளுஞ் சாடை அறியாமற் போனையேடி
என்-மூக்கினால் உன்மார்பை மொய்குழலே குத்தினேனே
உன்-மார்சதை யைக்குத்தி வலித்தேனடி மங்கையரே
அத்தாளுஞ் சாடை அறியாமற் போனையேடி
ஆளனுந் தேவியுமாய் அக்காட்டில் நானிருந்தேன்
கதண்டுகொட்டி செத்தவன்போல் கானகத்தில் நானிருந்தேன்
பவளக் கொடியறுத்துப் பத்தினியே கட்டிவைத்தாய்
கட்டுங் கொடியை கன்னியரே அறுத்தேனடி
அத்தாளுஞ் சாடை அறியாமற் போனையேடி
யானைகட்டுஞ் சங்கிலியால் ஆரணங்கே கட்டிவைத்தாய்
சங்கிலியை நானறுத்துத் தையலரே போட்டேனே
அத்தாளுஞ் சாடை அறியாமற் போனையேடி
உன்-மார்பின் சரப்பளியால் வரிந்தென்னைக் கட்டிவைத்தாய்
பின்-பாங்கியரை நீயனுப்பி வாங்கிவரச் சொன்னாயே
சொல்லாத வார்த்தையெல்லாஞ் சொல்லி யனுப்பினண்டி
உன்னை-திட்டி யனுப்பினண்டி தீங்காகச் சொன்னேனடி
அத்தாளுஞ் சாடையது யறியாமற் போனையேடி
அன்ன வடிவுருவம் ஆரணங்கே யெடுத்தேனே
வேடனார் கொண்டுவர விலைகொடுத்து வாங்கினையே
உன்-முத்துஸ் தனத்தைநான் மூக்குகுத்தி வலித்தேனே
மார்பின் சதையைநான் மகாகுத்தி வலித்தேனே
அத்தாளுஞ் சாடை அறியாமற் போனையேடி
வேடனைப் போலாக வந்தவனு மென்தோழன்
அன்னத்தைத் தாதியர்க ளரண்மனையிற் கட்டிவைத்தார்
பவளக்கால் மண்டபத்தில் பத்தினியே கட்டிவைத்தார்
அன்ன வடிவைவிட்டு ஆள்ரூப மானேனடி
பஞ்சணை மெத்தையை மணியசைய அசைத்தேனே
அத்தாளுஞ் சாடை யறியாமற் போனையேடி

உனக்கு-அழகே பெரிதுகண்டாய் ஆண்மைகள் போதாது
மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி யல்லிநல்லாள்
அல்லி யவளுடைய ஆண்மையுனக் கில்லையடி
இவையெல்லாஞ் சொல்லியே இளவிசயன் சிறிக்கலுற்றான்
பவளக் கொடிமாது பத்தினியு மேதுசொல்வாள்
தோழரு நீருமாய் சுந்தரரே வந்தேனென்றீர்
அருகேவந்த தோழரவர் ஆணழகா யெங்கேயென்றார்
ஊருக்கு அப்பாலே பிள்ளையார் கோவிலண்டை
பிள்ளையார் கோவிலண்டை பிரியமாய் இருக்கின்றார்
இட்டுவரச் சொன்னாலே இக்ஷணமே நானழைப்பேன்
ஆனா லழைத்துவாரும் ஆணழகா தோழரைத்தான்

## பவளக்கொடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை அழைத்து வர அர்ச்சுனராசனை அனுப்புதல்.

என்றது கேட்டுடனே இளவிசய னேதுசொல்வான்
எந்த வழியாக இளங்கொடியே நான்போவேன்
சுரங்கத்துக் குள்ளாக சுருக்காய் நடவுமென்றாள்
அப்படியே நல்லதென்று அர்ச்சுனனுந் தானெழுந்து
சுரங்கத்துக் குள்ளாக சுறுக்காய் நடந்தானே
கோட்டை கடந்தானே கொத்தளமுந் தான்கடந்தான்
பிள்ளையார் கோவிலண்டை மெள்ள நடக்கலுற்றான்

## ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனராசனை நினைத்துப் புலம்பல்

அச்சுதா னந்தஅரி யாயர் புலம்புகிறார்
ஆருயிர்த் தோழனே அர்ச்சுனனே யென்னசெய்வேன்
உன்-அண்ணன் தருமருமே அனுப்பினா ருன்பிறகே
இருவரு மாகவே யிங்குவந்தோம் தீவுதனில்
உன்னை யிழந்துநான் ஊர்வழியே போவேனோ
மாதர்மே லாசையாய் மயக்க மெடுத்தீரே
அன்ன வடிவாக ஆசைகொண்டு போனீரே
அவளை-கூடி யணையயிலே கொம்பனைமார் கண்டாரோ
பார்த்திபா வுந்தன் பதட்ட மறிவேனே
நீ-கட்டி யணையயிலே காவலர்கள் கண்டாரோ

அவனை-கூடி யெழுந்திருக்கக் கோடிபேர் வந்தாரோ
உன்னை-கட்டிப் பிடித்தாரோ காவலிலே வைத்தாரோ
வெட்டி யெறிந்தாரோ வீரமணி வாளாலே
உத்தம வீரியனை உயிர்க்கழுவில் வைத்தாரோ
நீ-மாண்டு மடிந்தாயோ வயிரமுடி சிந்திற்றோ
சந்தன வடிவழகர் தருமருக் கேதுசொல்வேன்
வெற்றி மதயானை வீமருக் கேதுசொல்வேன்
ஈரல் புகுந்த இரட்டையர்க் கேதுசொல்வேன்
தோரா வடிவழகி துரோபதைக் கென்னசொல்வேன்
மந்தாரக் குந்தியற்கு மாதருக் கென்னசொல்வேன்
அவர்-அங்கம் பிழையாதே ஆணழகா யென்னசொல்வேன்
காணவும் போகிறேனே காண்டீபங் கொண்டவனை
பாண்டிப் பெருமாளை பார்க்கவும் போகிறேனே
என்றுசொல்லி மாயவரும் யேங்கிப் புலம்பலுற்றார்
அந்தச் சமையத்திலே அங்குவந்தான் வாள்விசயன்
ஏன்காணு மச்சுதரே யேங்கிப் புலம்புகிறீர்
என்-சமர்த்துகளும் சேவகமும் தாழ்வாகப் போகாது
எந்த விதத்திலும் ஈடழித்து நான்வருவேன்
என்றது கேட்டுமப்போ தேதுசொல்வா ரச்சுதரும்
என்ன வடிவாக யிருந்தீ ரவளுடனே
அன்ன வடிவாக அவளுடனே சேர்ந்தீரோ
ஆள்ரூப மாகி அவளுடனே சேர்ந்தீரோ
மனித ரூபமாகி மாதரைச் சேர்ந்தீரோ
என்ன வடிவாக யிருந்தீ ரவளுடனே

## அருச்சுனன் பவளக்கொடியாள் சேதியைச் சொல்லல்.

என்றது கேட்டுமப்போ திளவிசய னேதுசொல்வான்
அல்லகா ணச்சுதரே ஆயர் பெருமாளே
அன்ன வடிவாக அவளிடத்தில் யான் இருந்தேன்
பவளக்கால் தூணடுவே பத்தினியாள் கட்டிவைத்தாள்
பஞ்சணை மெத்தையிலே பள்ளிகொண்டாள் பத்தினியும்
அர்த்தராத்திரி வேளையிலே அச்சுதரே நானெழுந்தேன்

அவள்-நித்திரை சோதித்து நினைவறிய வேணுமென்று
அன்னவூஞ்சல் தன்னைநான் அசைத்துவிட்டே னப்போது
அசைத்துவிட்டே னப்போது அவள்கையில் வாளுருவி
வீசினு ளன்னேரம் வீரமணி வாளாலே
முன்லாகை யாகாமல் பின்லாகை யாய்க்குதித்தேன்
மனிதரூப மானுக்கால் வாள்முனைக்குத் தப்பார்கள்
தெய்வரூப மானுக்கால் திரும்பிப் பிழைத்திடுவார்
வந்தவ ராரென்று வாய்மொழியுங் கேட்கலுற்ருள்
நான்-தேவாதி பிண்டமடி தேர்விசய னர்ச்சுனனடி
பேரால் புகழ்பெற்ற பெருமாளவர் மைத்துனனடி
மாயன்பெரு மாளுக்கு மைத்துனனும் நான்தாண்டி
இவ்வார்த்தை நான்சொன்னேன் இளங்கொடி மாதருக்கு
பல்லொளியை நான்காட்டிப் பார்த்து நகைத்துவிட்டேன்
கண்டு மயங்கிவிட்டாள் கட்டழகி கன்னியவள்
கோபித்துக் கண்சிவக்கத் தோகை யிளங்கொடியை
கூடி மருவினேன் குங்குமச் சாலையிலே
மருவிப் பிரிந்தேனே மாத ருறவானேன்
உம்மை யழையுமென்று உத்தாரம் பண்ணிவிட்டாள்.
அவள்-மாளிகைக் குப்போக வாருங்கா ணச்சுதரே
அப்படியே யச்சுதரும் ஆணழக ரிருவருமாய்
சல்லடந் தான்தொடுத்துத் தட்டி வரிந்துகட்டி
தட்டிமே லொட்டியாணம் சதுரமாய் வரிந்துகட்டி
முத்தி னுருமாலை முகமிலங்கக் கட்டினுர்கள்
சட்டை தமானுகளும் தரித்தா ரழகுபெற
பொன்முத்துப் பட்டாடை போர்த்தினுர் மேலுக்கு
அப்போ தருச்சுனனும் ஆணழக னேதுசொல்வான்
அச்சுதா னந்தவரி யாயரே யென்தோழா
சரப்பளியும் பொன்னுந் தானெடுத்து வாருமென்ருன்
அப்படியே யச்சுதரும் அழகுமூட்டை தானெடுத்து
இருவரு மாகவே யிசைந்து வழிநடந்தார்
சுரங்கத்து வழியாகத் துரிதமாய்ப் போய்ப்புகுந்தார்
பவளக் கொடியாள் பத்தினியாள் கோட்டையிலே

உள்வாசல் போய்நுழைந்தார் உத்தம வீரியர்கள்
அவள்-சிங்கா தனத்துக்கு முன்பாக வந்துநின்ருர்
வந்தவரைக் கண்டாளே மாது இளங்கொடியாள்
வாரும்வாரு மென்று வணங்கிஞள் மாதிவளும்
பத்தியுடன் புத்தியுடன் பாதஞ் சரணமென்ருள்
கொண்டுவந்த மூட்டையைக் கொற்றவர்கள் கீழேவைத்து
கொம்பனைக் கெதிரில்வந்து கொற்றவர்கள் தானமர்ந்தார்
பங்கயஞ் சீர்கண்ணுள் பவளக் கொடியாளும்
வேல்பொருதுங் கண்ணளும் வேந்தர்களைத் தான்பார்த்து
உங்க ளிருவருக்கும் உத்தியோக மிதுவோ வென்ருள்
எங்க ளிருவருக்கும் இதுவே தொழில்களென்ருர்
மூட்டையென்ன வென்றுசொல்லிக் கேட்டா ளிளங்கொடியாள்
அச்சுதா னந்தவரி யாயரு மேதுசொல்வார்
அர்ச்சுனரு முன்னுலே அன்ன வடிவெடுக்க
அவர்-ஆடலும் பாடலும் அதிசயத்தை நீபார்க்க
உன்-கொலுமுகச் சாவடியிற் கொண்டுவந்தேன் முன்பாக
அன்னமென்று சொல்லி ஆரணங்கே நான்பிடித்து
வேடனு மாக விலைகூறி வந்தேனே
என்ன விலையென்று இளங்கொடியே நீகேட்க
ஆயிரம் பொன்னென்று ஆரணங்கே சொன்னேனே
நீ-அன்ன மொருதட்டும் பொன்ஞெரு தட்டுமாக
பொற்கொடியே நீகொடுத்த பொன்மூட்டை யம்மாவிது
காண்டீப னர்ச்சுனரைக் கானகத்தில் கட்டிவைத்த
உன்-மார்பின் சரப்பளி மாதாவே யிந்தாவென்று
கருநீலப் பூங்குழலாள் கையிலே தான்கொடுத்தார்
அப்போது பெண்மயிலும் அங்கையில் தான்வாங்கி
பொங்கி மனங்குளிர்ந்து பொற்கொடியா ளப்போது
மெத்த யிளப்பா யிருக்கிறீர் வேந்தர்களே
எங்கேயுண்ட போசனமோ யென்ரு ளிளங்கொடியும்
அப்போது-ஆயன் பெருமாளும் அரிராமர் தான்கேட்டு
அல்லி யிடத்தில் அங்கே பொசித்ததுதான்
மூன்று நாளாச்சுது மொய்குழலே நாம்பொசித்து

## பவளக்கோடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கும் அர்ச்சுன ராசனுக்கும் விருந்திடல்.

இவ்வார்த்தை தான்கேட்டு இளங்கொடியாள் தானெழுந்து
அவள்-ஆக்க பதமறியாள் அரிசிபதந் தானறியாள்
அப்படிப் பட்டவளாம் ஆரணங்கு மப்போது
பட்டாடை தான்வாங்கிப் பாவாடை யுள்ளுடுத்தி
அடிசில் சமைக்க ஆரணங்கு தானினைந்து
பாண்டத்தைக் கழுவிவிட்டுப் பனிநீ ருலைவார்த்து
சிறுமணி சன்னசம்பா தீட்டி யுலையிலிட்டாள்
முத்துப்போல் சாதம் வடித்தா ளிளங்கொடியாள்
நந்தியெனும் பூசினிக்காய் நாலுவிதங் கறிசமைத்தாள்
வாழைக்காய் பொரியலிட்டாள் வழுதலங்காய் குழம்புமிட்டாள்
பீர்க்கங்காய் பொரியலிட்டாள் பெண்டைக்காய் குழம்புமிட்டாள்
கத்தரிக்காய் தான்பொரியல் கருணை புளிக்குழம்பு
கொத்தவரைக் காய்கறிகள் கூட்டிப் பொரியலிட்டாள்
பாவற்காய் பச்சடியும் பயிற்றங்காய் தான்பொரியல்
அத்தி விறகொடித்து தித்திக்கப் பால்காய்த்து
புத்துருக்கு நல்லநெய்யும் பொன்போல் பருப்புகளும்
அதிரசமுந் தேன்குழலும் அறுசுவை பதார்த்தங்களும்
பத்து விதக்கறியும் பதினெட்டு பச்சடியும்
எட்டு விதக்கறியும் இயலான போசனமும்
ஆயிரத் தெட்டுவிதம் அரிக்கறியும் பொரிக்கறியும்
அப்பளமும் வடையுடனே முப்பழம் மோருடனே
பண்டு பலாதியுடன் பாயசம் வடையுடனே
கடுக சமையலிட்டாள் கன்னி யிளமயிலும்
ஆச்சுது போசனங்கள் அமுதுண்ண வாருமென்று
பாளையு மோலையும் பக்குவமாய் கைகொடுத்தாள்
பாளைகொண்டு பல்விளக்கி ஓலைகொண்டு நாவழித்து
தீர்த்த நீர்வாங்கி திருமுகமுஞ் சுத்திபண்ணி
வசந்தநீர் ஸ்நானமாடி வஸ்திர முடுத்துகொண்டு
பூசைபண்ணு மண்டபத்தில் புண்ணியர்கள் வந்துநின்று

வாஸ்ழ யிலைபோலே வழித்திட்டார் வெண்ணீறு
கோவை யிலைபோலே குழைத்திட்டார் திருநீறு
பூசை முடித்துகொண்டு புகழ்வேந்தர் வீரியரும்
போசன மண்டபத்தில் புண்ணியர்கள் வந்தமர்ந்தார்
வட்ட மணைபோட்டாள் வந்தவர்க ளிருவருக்கும்
வட்ட மணைமீது வந்தமர்ந்தா ரிருவருமாய்
வாழை யிலைபோட்டு வட்டித்தாள் சாதமது
சுத்திக் கறியைவைத்தாள் தோகை யிளங்கொடியாள்
அள்ளிப் பருப்பையிட்டா ளதுகொண்ட நெய்வார்த்தாள்
குளிர்ந்தசலம் வெந்நீரும் கொண்டுவந்து வைத்தாளே
கனிவர்க்க முஞ்சிலது கச்சாய முஞ்சிலது
இத்தனையும் தான்படைத்தாள் யேந்திழையா ளப்போது
உண்ணுங்க ளென்றுசொல்லி உபசரணை செய்யலுற்றாள்
அப்படியே குந்திக்கொண்டு ஆர அமரப்பார்த்து
போசனங்க ளுண்டார்கள் புண்ணியரு முண்டபின்னர்
சிங்கா தனத்திலே தேர்விசயன் வீற்றிருந்தான்
மாயன் பெருமாளும் வந்தாச னத்திருந்தார்
காச்சாக் களிப்பாக்கும் கைம்மாறு வெற்றிலையும்
ஆரங்கிப் பாக்குகளும் மோரங்கி வெற்றிலையும்
அள்ளிக் கொடுத்தாளே ஆரணங்கு இருவருக்கும்
பவளக் கொடிமாது பத்தினியா ளேதுரைப்பாள்
அச்சுதா னந்தரே அண்ணாவே நீர்கேளும்
சேராம்பூ ராசாக்கள் செய்த பெருந்தவத்தால்
பவளக் கொடிமேலே பத்தினியாள் பெண்பிறந்தேன்
பதினாறு வருஷமாய் பட்ட மரசாண்டேன்
கொள்ள வருவார்கள் கோடான கோடியுண்டு
மாலையிட வந்தவர்கள் வண்ணலட்சங் கோடியுண்டு
நான்-மாலை தரியாமல் மணமாலை சூட்டாமல்
நித்யகன்னி யாகவே இருந்தேனின் றுள்வரைக்கும்
அர்ச்சுனர் தன்னாலே அழிந்ததே யென்தவங்கள்
பத்தினி தாபமது பாழாய் முடிந்ததே
எந்தன் விதிப்பயனை ஏதென் றெடுத்துரைப்பேன்

கதியைத் துலேக்கவல்லேன் காவேரி நீந்தவல்லேன்
என்-விதியைத் துலேக்குகைக்கு வெல்ல வகையறியேன்
சேராம்பூ ராசருக்குத் தேன்மொழிநா னென்னசொல்வேன்
இப்படி யாகவேதான் இளங்கொடியாள் தான்புலம்ப
அச்சுதா னந்தரும் ஆரணங்கைத் தான்பார்த்து
என்னென்று சொல்லி எடுத்துரைப்பார் மங்கையற்கு

## ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பவளக்கோடியாளுக்கு கனவு சொல்லுதல்.

பவளக் கொடிமாதே பத்தினியே சொல்வதைக்கேள்
என்னேப் பிறப்பித்த ஈஸ்வரனு மீஸ்வரியும்
அக்கினி யாற்றுக்கு அருகாகத் தான்வந்து
சூலமொரு கையிலே கபாலமொரு கையிலே
மாஞெரு கையிலே மழுவொரு கையிலே
விரித்த சடைமுடியும் வெண்புலித்தோ லாசனமும்
பக்கங் கொலுவிருக்கும் பார்வதி நாயகரும்
கங்கா பவானியருங் காய்நிலாக் கொன்றையரும்
திருக்கண் ணுடையவருந் திருநீறு தானணிந்து
வெள்ளே ரிஷபமேறி வித்தகரும் வந்தார்காண்
நான்-கண்டு பயந்தெழுந்து கடுக சரணமிட்டேன்
பங்கயஞ்சீர் கண்ணுளே பவளக் கொடிமாதே
சேராம்பூ ராசாக்கள் செய்த தவத்தாலே
பவளக் கொடிமேலே பாலகியை யுண்டுபண்ணேன்
பதிஞறு பிராயமட்டும் பட்டந்தரித் தாளுமென்றேன்
பதிஞறும் ஆயினது பாவையர்க்கோர் நாயகனே
மாலே தரியாமல் மணமாலே சூட்டாமல்
இருந்தீரே யாமாஞல் எரித்திடுவேன் பட்டணத்தை
பட்டணத்தை நீருக்கிப் பதியை யெரித்திடுவேன்
மெய்யாகக் கண்டேன் விழித்தேன் கனவாச்சு
இப்படிக் கனவுகண்டே னென்றுநீ சொல்லுமென்ருர்
அப்படிக்கே சம்மதித்தாள் ஆரணங்கு மப்போது
போய்வாரோ மென்றுசொன்ஞர் புண்ணியர்க ளிருவருமாய

அப்படியே நல்லதென்ருள் ஆரணங்கு பவளக்கொடி
அவ்வார்த்தை தான்கேட்டு அர்ச்சுனனு மாயவரும்
சுரங்கத்துக் குள்ளாக துரிசாய் நடந்துவந்து
வசதியாய்த் தங்குகின்ற வடகோடி கானகத்தின்
பிள்ளையார் கோவிலண்டை பிரியமாய்ப் போயிருந்தார்
அப்படிக்குத் தானிருக்க ஆரணங்கு மங்கையவள்
சப்ரகூட மஞ்சத்தில் சயனஞ்செய் திருந்தாளே
அந்தச் சமயத்தில் ஆரணங்கு தாதியர்கள்
அருகே புடைசூழும் அரிவையர்கள் வந்துநின்று
தட்டி யெழுப்பினுர்கள் தாமக் குழலாளை
அலண்டு மெழுந்திருந்தாள் ஆரணங்கு மங்கையவள்
அவள்-மஞ்சத்தின் மேலிருந்த மல்லிகைப் புஷ்பமெல்லாம்
காம்பழுகி நிற்கக் கண்டார்கள் தாதியர்கள்
ஒருநாளுங் கருகாத ஊசிமல்லி புஷ்பமெல்லாம்
எந்நாளுங் கருகாத யிருவாட்சி புஷ்பமெல்லாம்
காம்பழுகி நிற்பதென்ன காரணமோ சொல்லுமென்ருர்

## பவளக்கொடியாள் கண்டகனவை தாதிகளுக்குச் சொல்லுதல்.

பங்கயஞ் சீர்கண்ணுள் பவளக்கொடி சொல்லுகிருள்
மஞ்சத்தின் மேலேநான் மாதர்களே நித்திரைசெய்தேன்
அந்தநல்ல வேளையிலே ஆதிசிவ னிங்கேவந்து
என்னை-தட்டி யெழுப்பினுர் தாமக் குழலாளே
அலண்டு எழுந்திருந்து ஆரென்று நான்கேட்டேன்
உன்னைப் பிறப்பித்த உம்பர்பிரான் வந்தேனென்ருர்
எங்கேதாம் வந்தீரென்று இளங்கொடியே நான்கேட்டேன்
பதினறு வயதளவும் பட்ட மரசாண்டாய்
கேட்டவரம் நான்கொடுத்தேன் கிளிமொழியே யிப்போது
மணமாலை சூடுமென வாழ்த்தி மறைந்தாரே
மாலையிட்டுக் கொண்டதாக மங்கையரே கனவுகண்டேன்
மஞ்சத்தின் மேலேநான் மருவி யிருந்தேனடி
நான்-கண்ட கனவாலே கருகிற்று புட்பமெல்லாம்

மாதர்களே என்கனவு மற்ருென்றும் நானறியேன்
என்று இளங்கொடியாள் எடுத்துரைக்க வப்போது
தாய்போல் வளர்த்தெடுத்த தாதியர்கள் தான்கேட்டு
மணமாலை சூட்டுதற்கு மனமுண்டோ மங்கையரே
அப்படியே சம்மதந்தான் அரிவை யிளங்கொடியே
இவ்வார்த்தை தான்கேட்டு எழுந்தாரே தாதியர்கள்

## பவளக்கொடியாள் கண்டகனவைக் கேட்டு தாதிகள் போய்ச் சேராம்பூ ராசாக்களுக்குச் சொல்லல்.

சேராம்பூ ராசரண்டை தீவிரமா யோடிவந்து
முக்கா லடிவணங்கி மூவிருகால் தெண்டனிட்டார்
தெண்டனிட்ட மாதர்களைக் கண்டார்கள் ராசாக்கள்
என்னைப் பணிந்ததென்ன ஏந்திழையே சொல்லுமென்ருர்
கைகட்டி வாய்புதைத்துக் கன்னியர்கள் சொல்லுகிருர்
பங்கயஞ் சீர்கண்ணுள் பவளக்கொடி நாயகியாள்
பதினறு வயதளவும் பட்டங்கட்டி யாண்டிருந்தாள்
பட்டங்கட்டி யாண்டிருந்தாள் பாருலக மத்தனையும்
இன்றைய தினத்திலே இளங்கொடியாள் கோட்டையிலே
கண்ட வசதியைக் கன்னியர்கள் சொல்லுகிரேம்
பார்த்த வசதியைப் பாவையர்கள் சொல்லுகிரேம்
என்னவென்று சொல்லி எடுத்துரைப்போம் மன்னர்களே
மஞ்சத்தின் மேலிருந்த மலர்கள் கருகிற்று
இது-என்னென்று கேட்டோம் இளங்கொடி நாயகியை
பங்கயஞ் சீர்கண்ணுள் பவளக்கொடி சொன்னதுதான்
என்னைப் பிறப்பித்த ஈஸ்வரரும் வந்துநின்று
சொற்பனஞ் சாதித்தார் தோகை யிளங்கொடிக்கு
பதினறு வயதளவும் பட்ட மரசாண்டாய்
கேட்ட வரங்கொடுத்தேன் கிளிமொழியே யுந்தனுக்கு
இனி-மணமாலை சூட்டிக்கொண்டு வாழ்ந்திரு வையகத்தில்
என்று வுரைத்தாராம் ஈஸ்வரன ரப்போது
இப்படிக் கண்டேனென்று ஏந்திழை தானுரைத்தாள்
மணமாலை சூட்டுதற்கு மனதாச்சு மங்கையற்கு

என்று வுரைத்தார்கள் ஏந்திழைமார் தாதியர்கள்
இவ்வசனங் கேட்டார்கள் இன்பமுடன் ராசாக்கள்
சந்தோஷ மானார்கள் சரீரங்கள் பூரித்தார்
இன்பங் குளிர்ந்தாரே இருதோளும் பூரித்தார்
வற்றிக் கிடந்ததொரு மாபெரிய காவேரி
முட்டப் பெருகியே முழுஆறு வந்ததுபோல்
சந்தோஷப் பட்டார்கள் தரணியாளும் ராசாக்கள்
சேராம்பூ ராசாக்கள் சேதிகேட் டதுசொல்வார்
எங்கள் மனதினி லிருந்தபடி யாச்சுதம்மா
மாலையிட வல்லவோ வருந்தினோம் காலமெல்லாம்
எங்கள் தவசுபலன் யீடேறிப் போச்சுதம்மா
பண்ணும் தவசுபலன் பலித்ததம்மா பத்தினியே
கன்னி துலையாதார் காசினியி லாருமில்லை
அப்படி யேநீயும் அழகுமணி மாலையிடும்
சிந்தை குளிர்ந்தாரே சேராம்பூ ராசாக்கள்

## சேராம்பூராசாக்கள் மந்திரிகளையனுப்பி தமுக்கடிக்கும் பறையனை அழைத்துவரச் சொல்லல்.

ஆருங்காண் மந்திரியே அறிவுள்ள வீரியரே
இன்றையப் போதையிலே யென்றன் மகள்தனக்கு
மணமாலை சூட்டவேணும் மங்கை யிளங்கொடிக்கு
தோட்டியைத் தானழைத்து சொல்தமுக்குப் போடவேணும்
வெட்டியானைத் தானழைத்து வீரமுற சறையவிடும்
மண்டலத்து ராசர்களை வரவழைக்கச் சொல்லுமென்றார்
ஆரடா தூதுவனே அழையடா சாம்புவனை
ஓடி யழைத்தவனை ஒருநொடியில் வாருமென்று
சொன்னதைக் கேட்டுத் துரிதமாய்த் தூதுவனும்
ஓடி யழைத்தவனை ஒருநொடியில் வந்தானே
வந்ததொரு சாம்புவனும் வாய்புதைத்துக் கைகூப்பி
என்னை யழைத்தவகை யேது கருமமென்றான்
அப்போது-ஐம்பதுபேர் ராசாக்கள் ஐயமா ரேதுசொல்வார்
பவளக் கொடிமாது பணிமாலை சூட்டுகிறாள்

பட்டத்து ராசாக்கள் பலபேருந் தானறிய
முரசறைந்து வாருமென்ருர் முடிமன்னர் மந்திரியும்
நல்லதென அப்படியே நடந்தானே சாம்புவனும்
வெள்ளானை மேலாக விருதுகளைக் கட்டிவிட்டான்
வெள்ளித் தமுக்கடித்தான் வெண்கலக் கொம்பெடுத்தான்
ஆனையேறி மாலைசூடி அடித்தான் பறையோசை
என்னசொல்லித் தானடிப்பான் இராசாக்கள் தான்கேட்க
சேராம்பூ ராசாக்கள் செய்த தவத்தாலே
பவளக் கொடிமேலே பதிவிரதை தான்பிறந்தாள்
பதினறு வருஷமாய் பட்ட மரசாண்டாள்
மணமாலை சூட்டுதற்கு மாது நினைவானுள்
கொம்பனையைக் கேட்டவர்கள் கோடான கோடியுண்டு
மாலையிட வந்தவர்கள் வையகத்தில் கோடியுண்டு
மாதிது நாள்வரைக்கும் மணமாலை சூட்டாமல்
நித்யகன்னி யாகவே நிலத்தை யாண்டிருந்தாள்
இப்போது-மணமாலை சூட்டுதற்கு மாது நினைவானுள்
திங்கட் கிழமையிலே திகழ்புனர்ப் பூசத்திலே
இருபது நாழிகையில் எழில்மாலை சூட்டுகிருள்
மனதுள்ள ராசாக்கள் வந்திடுங்கள் பந்தலுக்கு
மண்டலத்து ராசாக்கள் வந்திடுங்கள் பந்தலுக்கு
அனைவோரு மறியவென்று அடித்தான் பறையோசை
அடித்த பறையோசை அந்நகரந் தான்கேட்டு
மண்டலத்து ராசாக்கள் மந்திரிகள் தான்கேட்டார்
திக்கிலுள்ள ராசாக்கள் தேசமெல்லாங் கெட்டார்கள்
பிள்ளையார் கோவிலண்டை வீற்றிருந்த போர்விசயன்
அடித்த பறையோசை ஆணழகன் கேட்டுவிட்டான்
சந்தோஷப் பட்டலவோ சரீரங்கள் பூரித்து
என்ன வடிவாக எடுப்பதவள் பந்தலுக்கு
ஆரை நினைக்கலுற்ருன் அளவற்ற சிந்தையிலே
மாயன் பெருமாளை மனதிலே தானினைந்து
அடியளந்த மாயவனே ஐயா சரணமையா
காக்குங் குலதெய்வமே கரியமால் மைத்துனரே

வெண்ணெயுண்ட செவ்வாயா வெற்றிகொடுக் குந்தூயா
கண்ணுக்குள் நிமைபோல காக்கிறே னென்றுசொன்னீர்
இதுவேளை யிதுசமையம் ஏழையைக் காருமையா
பவளக் கொடியாளை பணிமாலை சூட்டுதற்கு
மாலைவந்து மார்பில்விழ வரந்தாரு மெந்தனுக்கு
மூக்காலே முள்பொறுக்கி முனைமரத்தில் கூண்டுகட்டி
காக்காயின் குஞ்சுபோலே கடுகி வளர்த்தவரே
முட்டையின் குஞ்சுகளை முகமறியாப் பாலகரை
பிட்டு வளர்த்தீரே பிரபல்யங் காணவென்று
உந்தன் தயவாலே உயிர்கொண் டுலாவுகிறேன்
பங்கயஞ் சீர்கண்ணுள் பவளக் கொடியாளை
மணமாலை சூட்டுதற்கு வடிவெனக்குத் தாருமென்றான்

## ஸ்ரீகிருஷ்ணதேவர் அர்ச்சுனராசனுக்குக் கிழப் பிராமணவடிவங் கொடுத்தல்.

அப்படியே மாயவரும் அன்பாகத் தந்துவிட்டார்
அந்தச் சமையத்திலே அர்ச்சுன ராசதுரை
ஏழைபிரா மணரூபம் எடுத்தாரே புண்ணியரும்
தொண்ணூறும் பத்துஞ்சென்ற துவண்ட கிழவனானர்
நாற்பதுப் பத்துஞ்சென்ற நரைத்த கிழவனானர்
தும்பைப்பூப் போலே துவண்ட கிழவனானர்
நாணற்பூப் போலே நரைத்த கிழவனானர்
பண்ணைப்பூப் போலே பழுத்த கிழவனானர்
பரந்த முகத்துடனே நரைத்த நரையானர்
குஷ்டரோகிப் பிராமணன்போல் கொற்றவரும் ரூபமானர்
வெள்ளரிப் பழம்போலே வெடித்தது தேகமெல்லாம்
புண்ணு மிரணமுமாய் புழுக்கள் நெளிகிறது
சீழு மிரத்தமுஞ் சிந்துதே தேகமெல்லாம்
ஒருகண்ணும் பொட்டை ஒருகாலும் நொண்டியானர்
ஒட்டைத் தவலையொன்று ஒடிந்ததெண் டாயுதமும்
செல்லெரித்த புஸ்தகத்தை சேரவே கைகொடுத்தார்
பட்டயம் போலாக பரந்ததிரு நாமமிட்டார்

முத்தைப் பிளந்தார்கள் மூன்றுங்கால் நட்டார்கள்
பவளம் பிளந்தார்கள் பந்தக்கால் நட்டார்கள்
வெள்ளியால் கால்நிருத்தி வெற்றிலையால் பந்தலிட்டார்
கரும்பாலே கால்நிருத்தி கமலத்தால் பந்தலிட்டார்
ஈர்க்குப் பிளந்தார்கள் இருகாதம் பந்தலிட்டார்
மூங்கில் பிளந்தார்கள் முக்காதம் பந்தலிட்டார்
நாணல் பிளந்தார்கள் நாற்காதம் பந்தலிட்டார்
வன்னி மரம்பிளந்து வாச லலங்கரித்தார்
மாவிலைத் தோரணமும் மகுடநல்ல தோரணமும்
அரசிலைத் தோரணமும் அலங்காரம் பண்ணூர்கள்
கண்ணுடி சல்லிகட்டி கவரிமான் சுங்குவிட்டார்
பச்சைக் கிளிகளைப் பந்தலிலே தூக்கிவிட்டார்
வெட்டிவேர் குருவேரும் விதம்விதமாய்த் தூக்கிஞர்கள்
பட்டா லலங்கரித்து பாளையா லொப்பமிட்டார்
கோத்தமுத் தைத்தூக்கி கொலுமுகத்தில் தொங்கவிட்டார்
மற்றமுத்தைப் பந்தலிலே மாணிக்கமாய் வைத்திழைத்து
வாழைமரம் கமுகுமரம் வாசலெங்கும் கட்டிஞர்கள்
தென்னை பலாக்காயும் தெருக்களெங்குங் கட்டிஞர்கள்
எங்கெங்குந் தோரணமே எங்கெங்குந் திருவிளக்கே
ஜன்னல்கள் தோறுஞ் சரங்கள்மிகக் கட்டிஞர்கள்
அத்தர் புனுகுகளை அள்ளித் தெளித்தார்கள்
சந்தனமுங் குங்குமமுஞ் சவ்வாதுந் தான்தெளித்தார்
நிலக்கோல மிட்டார்கள் நிலத்தின்மேல் பூத்தெளித்தார்
பந்த லலங்கரித்து பட்டுரத்னப் பாய்பேட்டார்
தங்கப்பாய் போட்டார்கள் சரிகைதலை யணைகளிட்டார்
ஆயிர மணங்குபெற்ற ஆராய்ச்சி மணியெடுத்து
கற்பகப் பந்தலிலே கட்டியே தூக்கிஞர்கள்
இரும்புநல்ல சங்கிலியால் இயல்பெறவே கட்டிஞர்கள்
ஆராய்ச்சி மணியை அடித்தார்க ளோசைபெற
ஆராய்ச்சி மணிசத்தம் அந்நகரில் கேட்டிடுமாம்

## ஐம்பத்தாறுதேசத்து இராசாக்கள் வருதல்.

அடித்த பறையோசை யாவருங் கேள்வியுற்று
ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் வாரார்கள்
ஓரணியாம் பச்சைவில்லு ஒன்றுநா றாயிரமாம்
இரண்டணியாம் பச்சைவில்லீ ராயிரஞ் சேனைரதம்
யானையேறுந் துரைகளெல்லாம் யானையேறி வந்தார்கள்
குதிரையேறுந் துரைகளெல்லாம் குதிரையேறி வந்தார்கள்
ஒட்டையேறுந் துரைகளெல்லாம் ஒருகோடி வாரார்கள்
கண்ட விடங்களெல்லாம் கருமலைபோல் யானைகளாம்
பார்த்த விடங்களெல்லாம் பருவதம்போல் தேரணிகள்
கண்கொள்ளா கடுஞ்சேனை மண்கொள்ளா மகாதளங்கள்
ஏகமாய்த் திரண்டிருண்டு யெல்லோரும் வாரார்கள்
பூமி யதிருதங்கே பூலோகம் நெக்கிடவே
வாரார்கள் ராசாக்கள் மகமேரு குலுங்கிடவே
பிள்ளையார் கோவிலுக்கோர் புறமாக வாரார்கள்
காளையவ ரர்ச்சுனனூர் கண்டாரே துரைகள்தன்னை
அச்சுதா னந்தஅரி யாயரே நீர்கேளும்
இத்தண்ட ராசாக்கள் இச்சையுடன் வாரார்கள்
பவளக் கொடியாளை பணிமாலை சூட்டுதற்கு
அனந்தகோடி ராசாக்கள் ஆசையுடன் வாரார்கள்
மாயன் தயவாலேநான் மணமாலை சூட்டினால்
இத்தண்ட ராசாக்கள் இஞ்சிதின்ற குரங்காவார்
ஏக்கத்துப் போவாரே இருந்தவிடஞ் சொல்லாதே
என்று நகைத்தவரும் எல்லோ ருடன்நடந்தார்
பார்ப்பான் வருகிறதைப் பார்த்தார் துரைகளெல்லாம்
ஈழக் கிழவனிவன் ஏதுக்கு வாரான்காண்
தோலும் நரம்புகளும் தொங்குது கிழவனுக்கு
அங்கம் சதைகளெல்லாம் ஆடுது கிழவனுக்கு
இந்தக் கிழவன் ஏதுக்கு வாரான்காண்
என்று சிரித்தார்கள் இயலான ராசாக்கள்
கோவிந்தா வென்று கொற்றவனுங் கீழ்விழுந்தான்
தள்ளாடித் தடியூன்றித் தான்வருவான் மெள்ளமெள்ள

கொக்கென் றிரும்புவான் கோழைவந்து மாரடைக்க
வப்புவாய் கொட்டிவர வாய்நீரு சொள்ளொழுக
கண்ணிரண்டுங் கீரைவிரை காதிரண்டுங் கேளாது
தூக்கியடி வைப்பாராஞ் சுழன்று விழுவாராம்
எடுத்துஅடி வைப்பாராம் இடறி விழுவாராம்
அறுகம்புல் தட்டினால் அறுப திடம்விழுவார்
மூங்கில்வேர் தட்டினால் மூந்நூ றிடம்விழுவார்
இப்படி யாகவிவர் இருக்கின்ற வேளையிலே
இவனைக்-காணாதே யல்லவோ கலங்குகிறாள் பவளக்கன்னி
நெடுநாள் தவமிருந்து நித்திரையும் வாராமல்
கண்கெட்ட பார்ப்பானைக் கலியாணம் பண்ணவென்று
மாலையிடத் தேடியே மயங்குகிறாள் மங்கையரும்
காணாதே தேடியல்லோ கலங்குகிறா ளென்றுசொல்லி
இவனை-பரியாசம் பண்ணியே பலபேரும் பொய்நடந்தார்
சேராம்பூ ராசாக்கள் திருமணப் பந்தலிலே
வாகனங்கள் விட்டிறங்கி வந்தமர்ந்தார் மன்னர்களும்
மணக்கோலப் பந்தலிலே மன்னவரும் வந்தமர்ந்தார்
ஆரிய கிழவனும் அர்ச்சுனனும் வந்தமர்ந்தார்

## பவளக்கோடியாளை ஸ்நானஞ்செய்வித்து ஆபரணங்களை அலங்கரித்தல்

பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளை
ஆயிரந் தாதிமார்கள் அருகாக வோடிவந்து
சலவைக்கல் மண்டபத்தில் ஸ்நானங்கள் செய்விக்க
பூத்திண்ணை மண்டபத்தில் பொற்கொடியைக் கூட்டிவந்தார்
தண்டை யசைய சதங்கை தகுதிகென்ன
கொண்டை யசைய குயில்வந்து கூத்தாட
வட்ட மணைமேலே மாதரை யிருக்கவைத்து
நல்லெண்ணெய் கொண்டுவந்து நலங்கிட்டார் பந்தலுக்குள்
சம்பங்கி யெண்ணெய்கொண்டு தடவிநலங் கிட்டார்கள்
குங்குமப்பூ யெண்ணெய்கொண்டு கூந்தல்தனக் கிட்டார்கள்
மூந்நூறு சுமங்கலிகள் மூன்றுநலங் கிட்டார்கள்

ஐந்நூறு சுமங்கிகள் ஐந்துநலங் கிட்டார்கள்
மங்களம் பாடியே மாதர்நலங் கிட்டார்கள்
சோபனங்கள் பாடியே தோழியர் நலங்குமிட்டார்
ஆலாத்தி சுற்றியே அபிஷேக மாட்டலுற்ருர்
மஞ்சனச் சாலையிலே மஞ்சனீ ராட்டிவைத்தார்
ஒட்டுமஞ்சள் பூசியே ஒளிபவள நீராட்டி
ஸ்நானங்கள் பண்ணியே தாமக் கருங்குழலாள்
நீர்காட்டி வூதியே நெருப்பில் தலைசாய்த்து
ஈரத் துகில்களைந்து இழைசேர்ந்த பட்டுடுத்தி
நனைந்த துகில்களைந்து நாகரீகப் பட்டுடுத்தி
பாவாடை வுள்ளுடுத்தி பட்டாடை மேல்சாத்தி
ஆனந்த மாரியரை அலங்காரம் பண்ணலுற்ருர்
பூவாழை எண்ணெய்தொட்டு போத மயிர்கோதி
சீவியே சிக்கறுத்து சிமிழ்போலே கொண்டையிட்டு
வாரி முடித்தார்கள் மாணிக்கக் கொண்டையிட்டார்
ஒவ்வோர் மயிர்களுக்கு எவ்வேழு பொன்னிதழாம்
பொன்னிதழும் பூவிதழும் போத முடித்தகொண்டை
கோதி முடித்துவைத்த கொண்டைவந்து தோளசைய
தட்டி முடித்துவைத்த தாழ்குழல் தானசைய
ஆயிரம் பொன்பெற்ற அன்பான சவுரிவைத்து
கொண்டை சடையில்லை குப்பி யலங்கரித்து
ஆண்மயிலும் பெண்மயிலும் அணிந்தா ரழகுபெற
சந்த்ரபிறை சூர்யபிறை சடைநாகந் தானணிந்தார்
நெற்றிக்குச் சுட்டிகட்டி நேர்விழிக்கு மையெழுதி
கண்ணுக்கு மையெழுதி கஸ்தூரி பொட்டுமிட்டார்
முத்தான பொட்டுமிட்டு முன்னாலே தொங்கலிட்டார்
அன்னகொப்பு வன்னகொப்பு அருகுவாளி சொருகுவாளி
மாணிக்க வாளி மயிற்கீழே சோதிவிட
கமலக்கம்மல் வைடூர்யங் காதி லணிந்தார்கள்
இருதலைப் பட்சிகளும் இசைந்தபட்டுப் பூச்சிகளும்
பக்கம் புகடிகளும் பச்சைக்கல் முருகுகளும்
முத்தணிந்த மூக்குத்தி நத்து மணிந்தார்கள்

ஒற்றைச் சரடுகளும் ஒருபுறமாம் பொற்சரிகை
முத்துச் சரப்பளியாம் மோகன மாலைகளாம்
வட்டச் சரப்பளியாம் வராகன்பூ மாலைகளாம்
கொத்துச் சரப்பளியாம் கோர்த்தமணித் தாவடமாம்
சந்திராரங் கிள்ளட்டிகை தரித்தார்க ளப்போது
ரவையட்டி கைதனையும் நடுக்கழுத்திற் முன்தரித்து
தோள்வந்தி கைவந்தி தொடுத்தார்கள் கைவளை யல்
கடகஞ் சரிபவளங் கைநிறைந்த பொன்வளை யல்
உத்திர சஞ்சமது உத்தமிக்கு போட்டார்கள்
எட்டு விரலுக்கும் இசைந்த கணையாழி
பத்து விரலுக்கும் பதிந்த கணையாழி
அரைக்கிசைந்த ஒட்டியாணம் அணிந்தா ரிடைதனிலே
தண்டை கொலுசுடனே சதங்கையும் பாடகமாம்
காலாழி கல்லணையாம் பீலாழி பில்லணையாம்
அஷ்டா பரணமெல்லாம் அலங்கரித்தா ரந்நேரம்
பட்டுப் பளபளென்ன பாடகக் காலசைய
முத்து மினுமினென்ன முந்தாணி பொன்னுதிர
திருநீற்றுக் காப்பு திருச்சாந்து பொட்டுமிட்டார்
அஞ்சனக் கண்ணுக்கு அழகாக மையுமிட்டார்
மல்லிகை மாலைகளை மாதவளின் கழுத்திலிட்டார்
சந்தனமும் பன்னீருஞ் சாந்துசவ் வாதுகளும்
குங்குமமும் பன்னீருங் குழைத்தல்லோ பூசினர்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
அப்போது-ஆரை நினைத்தாள் அளவற்ற சிந்தையிலே
ஆலவாய்ச் சொக்கரை அடிபணிந்து தெண்டனிட்டாள்
மாயன் பெருமாளை மனதிலே தானினைந்தாள்
சுவாமி பெருமாளே துணைவாரு மெந்தனுக்கு
பரம சிவனருளால் பார்வதி கிருபையினல்
பவளக்கொடி மேல்பிறந்த பதிவிரதை மெய்யானல்
ஆதிசிவன் பூமாலை அனுப்புங்க ளெந்தனுக்கு
ஈசுவரியாள் பூமாலை வரவேணு மெந்தனுக்கு
கோதைபவ ளக்கொடியுங் கும்பிட்டு நின்றுளே

சிவனார் மனமகிழ்ந்து சிந்தை மிகக்குளிர்ந்து
ஆலவாய்ச் சொக்கரும் அம்மன் மீனாட்சியும்
திருமாலை சந்தனமும் திருநீறுந் தானெடுத்து
அணங்கு அரண்மனைக்கு அந்தரமா யனுப்பிவிட்டார்
வந்தபூ மாலையை மாதவளுங் கைப்பிடித்தாள்
மாணிக்கத் தேர்தனிலே வந்துமெள்ள ஏறினாள்
ஏறின போதே எடுத்தார் நெடுங்குடைகள்
சுத்திக் குடைபிடித்து சூரியனைக் காணாமல்
பக்கங் குடைபிடித்தார் பகவானைக் காணாமல்
கவிந்து குடைபிடித்தார் கதிரோனைக் காணாமல்
முந்நூறு தேங்காயை முடியோடே சூரையிட்டார்
ஐந்நூறு தேங்காயை அடித்தொடைத்து சூரையிட்டார்
முழங்குது வாத்தியங்கள் மும்மண்ட லமுமசைய
அடிபடுது பேரிகை அங்கர் தத்தளிக்க
பேரிகை சத்தம் பெரிதாய் முழங்குதங்கே
ஐங்காத வழிதூரம் அடிபடுது பேரிகையும்
நாற்காத வழிதூரம் நாகசின்னந் தான்கேட்க
முக்காத வழிதூரம் முரசு முழங்கிவர
மச்சு ரதமேறி வாராளாம் மாதுகன்னி
அங்கிருந்த ராசாக்கள் அனைவோரும் பார்த்துரைப்பார்
ஒருவர்க் கொருவர் உகந்துகந்து பேசுகிறார்
நீறுபூத்த தோர்நெருப்பை ஊதிபார்த்த நிறம்போல
ஆயிர மின்னலிலே சோதிமின்னல் மின்னாப்போல்
தங்கத்தைக் காய்ச்சியே தரையிலே விட்டாற்போல்
ஈயத்தைக் காய்ச்சியே யிலையிலே விட்டாற்போல்
பொன்னை யுருக்கியே பூமியிலே விட்டாற்போல்
சந்திரனைப் போலாகத் தளும்புகிறாள் தையலரும்
சூரியனை போலாகத் துலங்குகிறாள் தோகையரும்
யார்க்கிவள் கிட்டுவளோ அண்ணமாரே நாமறியோம்
எவர்க்குக் கிடைக்குமோ இந்தநல்ல பாக்கியங்கள்
யென்று தம்முட் சொல்லியே யெடுத்துதலைப் பார்த்திருந்தார்
ஆனந்த வாழ்மாரி அவளுடைய தேர்வருது

பார்மன்னன் சபைநடுவே பவளக்கொடி தேர்வருது
அரசர் சபைநடுவே ஆரணங்கு தேர்நிறுத்தி
எண்ணுது மெண்ணுகிருள் ஏலப் பசுங்கிளியாள்
ஆணு லழகுமன்னன் அர்ச்சுன ராசாவை
வடிவோடே வாருமென்று மன்னவனை சொன்னதில்லை
என்ன வடிவாக யிருக்கிருரோ யென்றறியேன்
இவளைப்போல் மங்கை எங்குங் கிடையாதோ
நாட்டில் அமையாதோ நாயகியாள் தன்போலே
என்று மனதில் இசைந்தவழி போனுரோ
தருமா புரிக்கலவோ தானடந்து போனுரோ
என்செய்வேன் ஈசுவரனே யேது மறியேனே
கிழக்கு முகம்நோக்கிக் கிளிமொழியாள் பார்த்தாளே
பக்கத்தில் நின்றதொரு பாங்கியவ ளேதுசொல்வாள்
முத்து முடிதரித்த முடிமன்ன ராசாக்கள்
பவள முடிதரித்த பாராளும் ராசாக்கள்
அங்கவங் கங்சலிங்கம் அவந்தி யரசரம்மா
சிங்களங் கொங்கணம் தெங்கண ராசரம்மா
மாளவம் சாலவம் மகதமச்ச ராசரம்மா
இப்படிக்குத் தாதிசொல்ல யிளங்கொடியாள் தான்கேட்டு
தெற்கு முகமாகத் திரும்பிளுள் ராசாத்தி
பக்க மிருந்ததொரு பாங்கியவ ளேதுசொல்வாள்
வச்சிர முடிதரித்த மந்திரிகள் ராசரம்மா
அருணங் கிராடம் யவனங்குரு சவ்வீரம்
குடகுகொல்லம் சூரசேனம் கோசலஞ் சிந்துசீமை
மண்டலத்தை யாளுகின்ற மகராச ராசரம்மா
மாலை சுழற்றியே மன்னர்மேல் போடுமென்ருர்
மேற்கு முகமாக மெல்லி திரும்பிப்பார்த்தாள்
பக்கத்தி லிருக்கின்ற பாங்கியவ ளேதுசொல்வாள்
பல்லவம் பாஞ்சாலம் பப்பரங் காந்தாரம்
தேசத்தை யாளுகிற தீர ரிவர்களம்மா
மாலையைச் சுழற்றியே மன்னவர்மேல் போடுமம்மா
வடக்கு முகமாகத் திரும்பிளுள் மாதுகன்னி

பக்கத் திருந்ததொரு பாங்கியவ ளேதுசொல்வாள்
துஷ்டர் தனையடக்குந் துரைக ளிவர்களம்மா
வடதேச ராசாக்கள் மன்ன ரிவர்களம்மா
ஏந்திழையே உன்னழகுக் கேற்ற புருஷரம்மா
உன்-மனதுக் கிசைந்த மணவாளன் தானிருப்பான்
மாலை சுழட்டுமென்றார் மாத ரிளங்கொடியை

## பவளக்கொடியாள் அர்ச்சுனனை மாலை தரித்தல்.

பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
அப்போது-ஆரை நினைத்தாளோ அளவற்ற சிந்தையிலே
எவரை நினைத்தாளோ எண்ணமற்ற சிந்தையிலே
ஆகாய வாணிதுர்க்கை யம்மன் பிடாரிகளே
மஞ்ச ளழகிகளே மடிச்சேலை காரிகளே
பொங்க நயினாரே பொற்கொடி யாண்டவனே
இல்லறத்து தேவதைகள் எல்லோருந் துணையிருங்கள்
ஆலவாய்ச் சொக்கரே அங்கயற்கண் மீனாட்சி
மதுரைமீ னாட்சியம்மாள் வந்து துணையிருங்கள்
என்னைப் பிறப்பித்த யீசுவரரே துணையிருங்கள்
மாயன் பெருமாள் மங்கைநல்லாள் லட்சுமியே
ஆயன் பெருமாளென் னருகே துணையிருங்கள்
முப்பத்து முக்கோடி முனிவரெல்லாங் காத்திருங்கள்
வசிஷ்ட ரருந்துதியும் மணிமாலை காத்திருங்கள்
நான்-ஆகாயம் விட்டமாலை அர்ச்சுனனார் தன்கழுத்தில்
சுழற்றிவிட்ட மாலையது சுரேந்திரன் மகன்கழுத்தில்
அர்ச்சுனனார் தன்கழுத்தில் அழகுமாலை விழவேணும்
என்ன வடிவாக இருக்கிறாரோ நானறியேன்
சுவாமியைத் தானினைந்து சுழற்றினாள் மாலைதன்னை
விரலால் சுழற்றியே வீசினாள் மாலைதன்னை
சுழற்றிவிட்ட மாலையது சுரர்லோகம் போகிறது
சூரிய மண்டலத்தை சுற்றி வருகின்றது
எதிர்ப்பட்ட தேவர்கள் யாவரையும் பார்த்துவரும்
நாலுபக்கஞ் சூழ்ந்திருக்கும் ராசர்களைச் சுற்றிவரும்



பவளக்கொடி அருச்சுனனுக்கு மாலையிடல்.

தேடியே பார்க்குதே தேர்விசய னர்ச்சுனரை
ஆரியனைப் போலாக அமர்ந்ததோ ரர்ச்சுனர்மேல்
வாள்விசயன் தோள்மேலே வந்து விழுந்தது
வேதியன் தன்கழுத்தில் விழுந்தது பூமாலை
தேவதுந்து மிமுழங்க தேவர்பூ மாரிபெய்ய
ஆகாய பேரிகைதான் அடிபடுது திமிதிமென்று
பூவருஷந் தான்பொழிந்தார் பொன்னுலக தேவரெல்லாம்
ஆராய்ச்சி மணிகளும் அடித்தது ஓசையுடன்
சேராம்பூ ராசாக்கள் தீரர்களும் பார்த்துவிட்டார்
மற்றண்ட ராசாக்கள் மந்திரிகள் வந்திருக்க
விருத்தனுடைய தோள்மேலே விழுந்ததென்ன பாவமிது
வேதியன் கழுத்திலே விழுந்ததென்ன பாவமிது
ஆரியனை மாலையிட ஆரணங்கு பிறந்தாளோ
வேதியற்கு மாலையிட விதித்ததோ யென்மகளே
செல்வமாய்ப் பெண்பிறந்து சீரழிய நாளாச்சோ
அருமையாய்ப் பெண்பிறந்து அம்பல மானீரோ
பிச்சை யிரந்துண்ணும் பிராமணற்குப் பெண்டாகி
கல்லெடுப் பரிசிக்கு காத்திருக்க நாளாச்சே
பாத்தாளி யரிசிக்கு பார்த்திருக்க நாளாச்சே
இந்தக் கிழவனுக்கோ இதுக்கோநான் பெண்வளர்த்தேன்
குருட்டுக் கிழவனுக்கோ கோடிநாள் தவசுபண்ணேன்
நொண்டிக் கிழவனுக்கோ நோக்கித் தவசுபண்ணேன்
சண்டிக் கிழவனுக்கோ தனிமாலை சூட்டிவிட்டாள்
இந்தக் கிழவனுக்கு எவர்தான் வழிவிட்டார்
பாவி கிழவனிவன் பந்தலுக்குள் ஏன்வந்தான்
ஆர்காண் பிராமணரே அழகுமாலை தாருமென்றார்
பெண்ணரசு தான்போட்ட பூமாலை தாருமென்றார்
அப்போது வாள்விசயன் ஆரியனு மேதுசொல்வான்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாட்கு
மாலை தரிக்கிறார் மன்னவர்க ளென்றுசொல்லி
பிச்சைக்கு வருமிடத்தில் பெண்மாலை போட்டுவிட்டாள்
வேணுமென்று வந்தேனோ மெல்லியரை மாலையிட

பிச்சைக்கு வருமிடத்தில் பெரும்பாம்பு சுற்றியது
இவளைநான் பெண்டுவைத்து என்செய்யப் போவேனப்பா
தள்ளாத கிழவனுக்குத் தையலரு மேன்காணும்
மாளுங் கிழவனுக்கு மாதர்க ளேன்காணும்
எனக்கிட்ட மாலைதனை எடுத்துத் தரித்துக்கொள்ளும்
மாலை தரித்துக்கொண்டு மங்கிலியம் சூட்டுகிறோம்
உங்களுக்குப் பெண்டிருக்க உலகத்தி லுற்றபடி
வளர்த்து எடுத்தீர்கள் மாலை தரித்திடுங்கள்
இந்தாரு மாலையென்று ஈந்தார் பிராமணரும்
அந்தச் சமையத்தில் ஆரணங்கு தான்கேட்டு
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக்கொடி யோடிவந்து
என்னையும் பெற்றெடுத்த இயலான ஐயாவே
மாளாக் கிழவனுடன் வார்த்தைகளே னுங்களுக்கு
என்தலை விதிப்பயனை எவரு மறியார்கள்
ஆதிசிவன் தன்னெழுத்தை ஆரு மறியார்கள்
எல்லார் தலையிலும் ஈரெழுத்து ஓரெழுத்து
பாவி தலையிலிந்தப் பார்ப்பானை எழுதிவைத்தான்
கதியைத் துலைக்கவல்லேன் காவிரியை நீந்தவல்லேன்
என்விதியைத் துலைக்குகைக்கு வெல்ல வகையறியேன்
அன்றெழுதும் ஆதிசிவன் அழித்தெழுதப் போவதில்லை
தலை யி லெழுதினதை தள்ளிவைக்கப் போவதில்லை
தலையி லெழுதினது தவறு தொருக்காலும்
ஒருவனுக்கு மாலையிட்டு உலகத்தார் வாழ்வார்கள்
இவருக்குப் பெண்டாக இருப்பேனோ தந்தையரே
வாருமையா வென்றுசொல்லி வலதுகையைத் தான்பிடித்து
மாணிக்க வாசலிலே மறையவனைக் கொண்டுசென்றாள்
அந்தச் சமையத்தில் ஆயன் பெருமாளும்
செந்தும்பி போலே ஸ்ரீராமர் வடிவெடுத்தார்
ஜிவ்வென்று தான்பறந்து தேன்மொழியாள் தன்செவியில்
வந்து நுழைந்தார் மயிலனையாள் தன்செவியில்
அஞ்சாதே அஞ்சாதே அருந்தங்கை யஞ்சாதே
ஆணு லழகுமன்னன் அர்ச்சுன ராசன்காண்

என்று வுரைத்தார் இளங்கொடியாள் தன்செவியில்
அருஞ்செவியில் தானுரைத்து ஆயரும் போய்நடந்தார்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
வேடத்தை மாற்றி விசயா வடிவெடென்றாள்
அர்ச்சுனர் வடிவுகளை அழகாகக் காட்டுமென்றாள்

## அர்ச்சுனராசன் கிழப்பிராமணன் வடிவைவிட்டுத் தன் சுயரூப மெடுத்தல்.

சேராம்பூ ராசாக்கள் சிந்தை குளிர்ந்துவிட
கண்டோர் பயந்துவிட கால்கைகள் தடுமாற
சிந்தை குளிர்ந்துவிட தேர்விசயன் வடிவெடுத்தான்
அங்கங் குளிர்ந்துவிட அர்ச்சுனன் வடிவெடுத்தான்
முன்னழகும் பின்னழகும் முதுகிலே மட்சரேகை
பல்லிலே பரசவீணை பாதத்திற் செந்தாமரை
நாவிலே நட்சத்திரம் நயனவிழி சோதிவிட
மாயன் தயவாலே வாள்விசயன் ரூபமானான்
ஆயன் தயவாலே அர்ச்சுனன் ரூபமானான்
கண்டவர்கள் தான்மயங்க காண்டீபன் வடிவெடுத்தான்
பார்த்தவர்கள் தான்மயங்கப் பார்த்திபன் வடிவெடுத்தான்
ஐந்து பிராயம் அறியாப் பிராயமென்றும்
அச்சுதா னந்தஅரி ஐயரும் வந்துவிட்டார்
பவளக் கொடிமாது பார்த்து மகிழ்ந்துவிட்டாள்
சேராம்பூ ராசாக்கள் தேர்விசயன் தன்னைக்கண்டு
கண்டு மகிழ்ந்தார்கள் காண்டீப னர்ச்சுனரை
பார்த்து மகிழ்ந்தார்கள் பார்த்திபன் அர்ச்சுனரை
விசய னழகுகண்டு மெத்த மனமகிழ்ந்தார்
எங்கள்-மகள்தனக் கேத்ததொரு மணவாளன் வந்தீரே
அர்ச்சுனரைப் போலாக வாராமல் ஆணழகா
பிராமண வடிவாகப் பெண்கொள்ள வந்தீரோ
வந்தென்னைப் பெண்கேட்டால் தந்திடோ மென்றோமோ
ஈனக் கிழவனைப்போல் ஏன்காண் வடிவெடுத்தீர்
என்று மனமகிழ்ந்தார் இயலான ராசாக்கள்

அந்தச் சமையத்தில் அங்குவந்த துரைகளெல்லாம்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடிமாது
ஆரியனை மாலையிட்டு அழைத்தேகக் கண்டவர்கள்
இஞ்சிதின்ற குரங்கதுபோல் ஏக்கமுற்றார் மன்னவர்கள்
விருத்தக் கிழவனுக்கு வேதியற்கு வாய்த்ததென்று
இங்கிருந் தென்னபலன் என்றெண்ணி ராசாக்கள்
அவரவர்கள் மாளிகைக்கு அனைவோரும் போகலுற்றார்
சேராம்பூ ராசாக்கள் தீரரவ ரேதுசெய்தார்
வில்விசய னர்ச்சுனனை வேந்தர் வரவழைத்து
நல்லவேளை தப்பாமல் ராகுகாலம் வாராமல்
வாச்சியங்கள் தியாச்சியங்கள் வாராத வேளைகண்டு
சேஷை மணைபோட்டு சீரான பந்தலிலே
செந்நெல் லரிசிகொண்டு தினகரற்குப் பொங்கலிட்டு
மாப்பிளையும் பெண்ணையும் மணைமே லிருக்கவைத்து
முந்நூறு சுமங்கிகள் முகந்து முளைதெளிக்க
ஐந்நூறு சுமங்கிகள் அள்ளி முளைதெளிக்க
சாலுங் கரமும் சந்திரற்கு முன்பாக
அம்மி வலமாக அரசாணி முன்பாக
வேதப் பிராமணர்கள் வேதங்க ளோதிவர
ஓமப் புகையெரிய உடனுகை வேதஞ்சொல்ல
காப்பரிசி தான்வழங்கி கங்கணமும் கட்டினார்கள்
சேராம்பூ ராசர்க்கள் தீர ரெழுந்திருந்து
மாவுங் கனிநூலும் மஞ்சளோடு நெல்விதையும்
தாலியுங் கூறையுந் தான்கொண்டு வந்தார்கள்
குருகுலத்து ராசரவே குந்தி மகனாரே
மந்தாரக் குந்தியரும் பெற்ற மகனாரே
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளை
தந்தே னுனக்கீந்தேன் தாரைநீர் பிடியுமென்றார்
காலுக்கு மிஞ்சியிட்டார் கைக்குக்கணை யாழியிட்டார்
தையலரைத் தான்கொடுத்துத் தாரைநீர் வார்த்தார்கள்
ஏந்திழையை தான்கொடுத்து இஷ்டநீர் வார்த்தவரும்
மாலை தரித்துமே மணமாலை சூட்டுமென்றார்

அப்போ தர்ச்சுனனும் ஆயனைத் தானினைந்து
தாலியைக் கட்டினன் தார்விசய னர்ச்சுனனும்
பிர்மமுடி மூன்றுமுடி போட்டானே வாள்விசயன்
காப்பரிசி தான்வழங்கி கங்கணமுந் தானவிழ்த்தான்
அம்மி மிதித்து அரசாணி சுற்றிவந்து
பெரியோர்க ளெல்லோரும் பெருக்க மனமகிழ்ந்து
மன்னவனுந் தேவியுமாய் மாளிகையி னுட்புகுந்தார்
தங்கரத்ன மேடையிலே தனஞ்சயனும் வீற்றிருந்தான்
ஐம்பதுபே ரையமாரும் அவர்களுட தேவிமாரும்
பொங்கி மனங்குளிர்ந்து பொற்கொடி மாதரெல்லாம்
தனஞ்சயற்கும் வேதியற்கும் சரமாகச் சேஷையிட்டு
பாலும் பழமும் பரிவுடனே தான்கொடுத்தார்
பாலமுத முண்டு பசியாறித் தானிருந்தார்
அப்பால்வந்த மனிதருக்கும் மகாபெரிய சேனைகட்கும்
அத்தரும் பன்னீரும் அழகாகத் தான்தெளித்து
சந்தனங் கெந்தபொடி தாம்பூலந் தான்வழங்கி
பாலித்தார் புட்பம் பரிமளங்கள் தன்னுடனே
கோடிவெகு பூரிதானங் கொடுத்தார் பெரியோர்க்கு
தட்சணையுந் தாம்பூலந் தார்வேந்தர் தான்கொடுத்தார்
வந்த மனிதர்கள் மகாசேனை யெல்லவர்க்கும்
கைக்குச் சலங்கொடுத்தார் கட்டழக ரெல்லவர்க்கும்
பந்தி யமர்த்தி பரிமாறிப் போசனங்கள்
பொரித்த பொரிக்கறியும் பொன்போல் பருப்புகளும்
பத்துவகை பச்சடியும் பறிமாறி யாவருக்கும்
புத்துருக்கு நெய்யதனை போத மிகப்படைத்து
முப்பழமுஞ் சர்க்கரையும் அப்பளமுந் தான்படைத்து
ஆயாசந் தீரவே பாயாசந் தான்கொடுத்தார்
போசனங்க ளுண்டு புகழ்வேந்தர் யாவர்களும்
கைகா லலம்பியே கனமிகுந்த மன்னரெல்லாம்
வேடிக்கை யாகவே வீற்றிருந்தார் பந்தலிலே
அப்போது-வெட்டிய பாக்குடனே மிகமணக்கும் வெற்றிலையும்
சொர்னபுட்ப மாலைகளும் சோடிசக லாத்துகளும்

வைத்துக் கொடுத்தார்கள் வரிசை வெகுமானம்
ஒட்டைக் குதிரைகள் உத்தமர்கள் மொய்யெழுதி
உத்தமர்க ளெல்லோரும் உள்ளங் களிகூர்ந்து
காண்டீப னர்ச்சுனனும் கன்னியவள் தேவியுமாய்
ஊர்வல மானபின்பு உத்தமனுந் தேவியுமாய்
பள்ளியறை மண்டபத்தில் பாங்குடனே போகலுற்ருர்
வந்திருந்த ராசாக்கள் மன்னவர்க ளெல்லோரும்
அவரவர்கள் ராச்சியத்தை ஆளுகைக்குப் போனார்கள்
வாள்விசயன் கோமானும் மருவுண்டு தானிருந்தான்
பதிஞெரு நாளாச்சு பார்த்தன்வந்து மாலையிட்டு
இப்படி யாகவே இருக்கின்ற வேளையிலே
அல்லிப் பெருமாளும் ஆரணங்கு மேதுசெய்தாள்
மகுடத் துரைச்சியரும் வாழ்வரசி யல்லியரும்
கொச்சி துரைச்சியரும் கொடிமதுரை யல்லியரும்
மச்சு துரைச்சியரும் வடமதுரை யல்லியரும்
காலையில் தானெழுந்து கனிவாயைச் சுத்திபண்ணி
பாளைகொண்டு பல்விளக்கி ஓலைகொண்டு நாவழித்து
பொய்கை தனிலிறங்கி பொற்கொடியும் ஸ்நானஞ்செய்து
ஈரத் துகில்களைந்து இழைசேர்ந்த பட்டுடுத்தி
நனைந்த துகில்களைந்து நாகரீகப் பட்டுடுத்தி
சொக்க ருளென்று தூளிதக் காப்புமிட்டு
மதுரைமீ னுட்சியரை மாதாவைத் தானினைந்து
அரன்பூசை யரிபூசை அனுஷ்டானம் பண்ணியவள்
இங்கித மானதொரு சிங்காரம் பண்ணலுற்ருள்
சல்லடந் தான்தொடுத்து தட்டி பிகுவெடுத்தாள்
தட்டியின்மே லொட்டியாணம் சாதா வரிந்துகட்டி
சல்லடத்தின் மேலேயவள் தாமரைப்பூச் சுங்குவிட்டாள்
வலபுறத்துச் சுங்கிலே மாகாளி யட்சரமும்
தென்புறத்துச் சுங்கிலே தெய்வகன்னி யட்சரமும்
முத்துக்க பாயணிந்து முதுகெல்லா மங்கிபோட்டாள்
வச்சிரக்க பாயணிந்தாள் மார்நிறைந்த அங்கிபோட்டாள்
அங்கிக பாயணிந்தாள் அல்லிமலர் நாயகமும்

கேடயமும் பல்லயமும் கிளிமொழியாள் தான்தரித்தாள்
மந்திர வாளெடுத்து வலதுகையில் தான்பிடித்தாள்
பதினெட்டு ஆயுதமும் பத்தினியாள் தான்தரித்தாள்
முத்து மிதியடியை தொட்டு நடந்துவந்து
வசந்தமணி மண்டபத்தில் மாதவளும் வந்தமர்ந்தாள்
கொலுக்கூட மண்டபத்தில் கொம்பனையும் வந்தமர்ந்தாள்
மந்திரி பவளசேனை மயிலணையும் வந்தமர்ந்தாள்
தாதிகளுந் தோழிகளுந் தையலரைச் சூழ்ந்தார்கள்
செங்கமலத் தாதியும் சேளுதி பவளசேனை
வெண்சா மரைக்கவரி வீசியவள் பக்கம்நின்றாள்
ஆலவட்டஞ் சாமரைகள் அருங்கிளிமார் வீசிவர
மல்லிகை விசிறிகளும் மயில்விசிறி தான்வீச
செண்டாடிப் பந்தாடித் தேன்மொழிமார் சுழன்றுவர
ஆடுவார் பாடுவார் அல்லவருஞ் சூழ்ந்தார்கள்
பந்தாடிச் செண்டாடிப் பாங்கிமார் சூழ்ந்துவர
கேளிக்கை பார்த்து கிளிமொழியாள் இருக்கிறாள்
சங்கீதம் பார்த்து சௌந்தரியாள் இருக்கிறாள்
முத்துவிற்கும் வர்த்தகரும் மூவிரு கணக்கர்களும்
கணக்குச் சுருளெடுத்து கடுகவே வாரார்கள்
கொம்பனையாள் முன்னேவந்து கும்பிட்டு தெண்டனிட்டார்
கைகட்டி நின்றார்கள் கட்டழக ரெல்லவரும்
மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி யேதுசொல்வாள்
முத்துக் கொழித்ததுவும் விற்றக் கணக்குகளும்
அன்றாடங் கணக்குகளென் அம்பலத்தே வாராமல்
எட்டுநாள் வாராமல் இருந்த வயணமென்ன
ஒருமுத்து குறைந்தாலே உயிர்க்கழுவில் போட்டிடுவேன்
இருமுத்து குறைந்தாலே யீரல் பிளந்திடுவேன்
எட்டுநாள் கணக்குகளும் எழுதி முடியுமென்றாள்
கண்கள் பொறிபறக்கக் காந்தாளப் பட்டாளே
செந்தலை நாகம்போல் சீறி யெறிபறந்தாள்
கண்ணால் பொறிபறக்க காதா லனல்வீச
வாயால் பொறிபறக்க வலதுகண் ணனல்வீச

ஈச்சம் பழம்போலே இருகண்ணுந் தான்சிவக்க
கோவைப் பழம்போல கொள்ளிகொண்டு வீசுதுபார்
கண்ட சதைகளைக் கடித்துமிழ்ந்தா ளல்லியரும்
கணக்க ரதிகாரி கைகால் நடுங்கிவிட்டார்
எட்டுநாள் கணக்குகளும் எழுதி முடிக்கலுற்ருர்
கண்ணுக்கு மேல்கண்ணுய் கன்னியரும் இருக்கிருள்
ஆருலுங் கூடியே ஆற்றவொண்ணுக் கோபமப்போ
அந்தச் சமையத்தில் அங்குவாரான் புலந்திரனும்
வீதி விலாசமது விளையாடி வில்வேந்தன்
தங்கத்தே ரோட்டியே தனஞ்சயன் புத்திரனும்
செம்பொன்தே ரோட்டியே சித்திர வீதியெல்லாம்
முத்தின்தே ரோட்டியே முடிமன்னர் விதியெல்லாம்
மாணிக்கத் தேரோட்டி மதுரைதெரு வீதியெல்லாம்
தண்டை யசையவே சதங்கை தகுதிகென்ன
அரைவடமுங் கிண்கிணியும் அசைந்து நிழல்காட்ட
கணையாழி சோரவிட கண்ட சரங்கள்மின்ன
வட்டமிட்ட நெற்றியிலே வயிரசுட்டி நின்றிலங்க
சர்வா பரணங்களும் தாவடமுந் தானசைய
சிங்கார மிதியடியும் சிங்காணி வில்லுகளும்
பக்க மிருபுரமும் பட்டா சுழற்றிவர
கத்திகட்டு மன்னரெல்லாங் கைகட்டி யோடிவர
ஈட்டிபிடி மன்னரெல்லாம் இருபுரமுஞ் சூழ்ந்துவர
பொற்பரிசு மேலாகப் பிள்ளை வருகுதுபார்
வெகுசனங் கள்நெருங்கி வருமிடங் கொள்ளாமல்
அருகே நெருங்கிவந்த அருமகனைக் கண்டுவிட்டாள்
அப்பா வருக ஆணழகா புத்திரனே
வருக வருகவென் வாழ்கவே வருகவென்ருள்
திருவருக பூவருக தேனே வருகவென்ருள்
கண்ணே மணியே கருவிலமே நீவருக
கண்மூன் றுடைய கைலாச நாதரெனும்
சொக்கர்திரு வாசலுக்குத் தூண்டா மணிவிளக்கே
வைகைக் கரைதனக்கு மண்சுமந்த சொக்கரவர்

கப்பலுஞ் சோங்குங் கரைதுரையு முள்ளவனே
சங்கீன்ற முத்துச் சபால முடையவனே
அப்பா வருகவென்று ஆவலுடன் முத்தமிட்டாள்
வாரி யெடுத்தவளும் மதிமுகத்தில் முத்தமுட்டாள்
மைந்தனைப் புல்கியே மடிமேலே வைத்திருந்தாள்
போரர் சரமன்னன் புலந்திரனுங் கூறுவான்
போதும்போது மென்னுச்சி பிள்ளையைக் கொஞ்சினது
மைந்தனைக் கொஞ்சினது மாதாவே போதுமம்மா
தங்கத்தேர் தந்தாரே தனஞ்சயனு ரென்பாட்டன்
செம்பொன்தேர் தந்தாரே திகழ்வேந்த ரென்மாமன்
மாணிக்கத் தேர்தந்தார் வளநாட்டு ராசாக்கள்
முத்துத்தேர் தந்தார்கள் முடிபுனைந்த ராசாக்கள்
சித்திர வீதி தெருக்கள்பதி னாயிரமும்
மதுரைப் பெருந்தெருவும் மட்டில்லா வீதிகளும்
பவளத்தே ரோட்டவென்று பத்தினியே நான்கேட்டேன்
தாரேனென்று சோன்னீரே தகப்பனையும் போகவிட்டீர்
பவளத்தே ரெங்கேயென்று பாலன் பிணங்கினான்
அவ்வார்த்தை கேட்டாளே அல்லிப் பெருமாளும்
அர்ச்சுனன் போனதொரு அந்நாளைப் பார்க்கலுற்றாள்
பதினாறு நாளாச்சு பரர்த்திபன் போனதுவும்
மூன்றுநா ளாறு பொழுதிலே வாரேனென்று
மைந்தன்மே லாணையிட்டு மாபாவி போனானே
மைந்தன் மேலாணை மறந்தானோ வாள்விசயன்
ஆணை மறந்தவனும் ஆர்மேலே ஆசைகொண்டான்
எங்கே உல்லாசமா யிருக்கிறானோ வாள்விசயன்
அவன்-எமலோகம் போனாலும் இட்டுவந்து சங்கரிப்பேன்
பாதாளம் போனாலும் பார்த்திபனைக் கொன்றிடுவேன்
ஆகாயம் போனாலும் அதம்பண்ணிப் போட்டிடுவேன்
என்று-சீறியே கண்சிவந்து சிங்கத்தின் குட்டியைப்போல்
கையைக் கடித்துக் கன்னியருந் தானுமிழ்ந்தாள்
உதிரமுஞ் சதையுமாய் உமிழ்ந்தாளே பூமியிலே
காட்டானை போலாகக் கதறி யெழுந்தாளே

சிங்க்த்தைப் போலாகத் தேன்மொழியா ளல்லியரும்
உருட்டினு ளிருகண்ணை ஒதுங்கினர் மன்னர்களும்
ஆக்கரித்துப் பறகடித்து அதட்டி யெழுந்தாளே
ஆராலுங் கூடியே ஆற்றவொண்ணக் கோபமுடன்
பாண்டி வளநாடு பஸ்பமாய்ப் பற்றுது
பகல்வத்திப் போலாக பற்றியதே யிருகண்ணும்
மைந்தனைத் தாணிடுக்கி வளநாட்டாள் தான்குதித்தாள்
அறுபது பேரெழுந்து அன்னேர மோடிவந்து
அம்மா-எந்தந்த நாடென்று யிளங்கொடியே நீஅறிவாய்
எங்கே யிருந்தாலும் இட்டுவாரோ மர்ச்சுனரை
நீ-இங்கே யிருமம்மா இராசகுல நாயகமே
என்றது கேட்டுமெவ ளேதுசொல்வா ளல்லியரும்
எனக்கெதிர் சொல்லாதே யென்னுணை யையாவே
அரண்மனை திறவுகோல் அண்ணர்தங் கைக்கொடுத்தாள்

## அல்லியரசாணி அர்ச்சுனன்மேல் படையெடுத்தல்

ஆரடா மந்திரியே அறிவுள்ள காருபாரி
ஆனைசேனை பரிவாரம் அடங்கலும் பயணமென்ருள்
காலாளுஞ் சேவகருங் கடுகப் பயணமென்ருள்
தேர்கொண்டு வாருமென்ருள் சீக்கிரமாய்ப் போகவென்று
சொன்ன பொழுதிலே துரிதமாய் மந்திரிகள்
சித்திரத் தேர்தன்னைச் சீரா யலங்கரித்தார்
ஆறுவண்டி நூறுசட்டம் அழகான குத்துக்கால்
குத்துக்கால் செப்பனிட்டுக் கொடுங்கை திரைவளைத்து
கும்ப கலசமுங் குடைக ளலங்கரித்தார்
அங்குருச் சீலையது அலங்காரம் பண்ணுர்கள்
பாராசாரி புரவியொன்று பஞ்சகலி யாணியொன்று
தேசியென்னும் புரவியொன்று பஞ்சகலி யாணியொன்று
நாலு புரவிகளை நலமா யலங்கரித்து
குதிரை யலங்கரித்து கொண்டுவந்து தேரிற்கட்டி
அலங்கரித்தோம் தேரையென் றடிபணிந்து நின்ருர்கள்
பயணம் பயணமென்று பயணபேரி தானடித்தார்

இப்போ பயணமென்று இயலாகத் தானடித்தார்
கானலுக்குத் தானெடுத்தார் கறுப்புநல்ல கூடாரம்
வெய்யலுக்குத் தானெடுத்தார் வெள்ளைநல்ல கூடாரம்
பனிகளுக்குத் தானெடுத்தார் பச்சைநல்ல கூடாரம்
யானையின்மேல் டேராவும் குதிரையின்மேல் சண்டாவும்
கறுப்புநி ஜான்சிகப்பு கலந்துநிஜான் பிடித்தார்கள்
யானைக ளாறுகோடி அசுவங்க ளேழுகோடி
தேர்க ளொருகோடி தேரணிகள் முக்கோடி
அதிரதருஞ் சமரதரும் ஆஸ்தான மரகதரும்
கலிங்கர் தெலுங்கர்களுங் கன்னடியர் மராட்டியரும்
ஈழத்து வங்கணரும் இளநாட்டுச் சோனகரும்
போட்டசட்டை வாங்காத பொந்திலிய ரானவரும்
கும்பாசம் வாங்காத குலமன்ன ரானவரும்
மட்டில்லாச் சேனைகளும் மன்னர் பயணமானார்
பட்டய நேரிசமும் பாங்கான வாட்படையும்
கத்திகட் டாரியெழு கதைதண்டக் கோல்கழுமுள்
குறுந்தடி யீட்டியுடன் குந்தமுடை வாள்முதலாம்
சக்கரமும் வேலுந் தடியும் பெருவுலக்கை
சுண்டுவில்லும் உண்டைவில்லுஞ் சுங்காணி பூச்சுவில்லும்
எண்ணான்கு ஆயுதமும் எடுத்தரையிற் கட்டினார்கள்
பாளையங்க ளுள்ளதெல்லாம் பயணங்க ளாச்சுதப்போ
ஆனையின்மேல் பேரிகை அடிபடுது குமுகுமென்று
ஒட்டையின்மேல் நகபத்து ஓசை கிளம்புது
அண்டங் கிடுகிடென்ன ஆகாயம் நெக்குவிட
பூமி கிடுகிடென்ன பூலோகம் நெக்குவிட
அடங்காத கோபமுடன் அல்லிமலர் நாயகியாள்
அலங்கரித்த தேர்மேலே ஆரணங்கு மேறினாளே
மந்திரி பவளசேனை மங்கையவள் தானேறி
தேரைத் திருப்பினாள் சீராக அக்கணமே
சுற்றிலுங் குடைபிடித்தார் சூரியனைத் தான்மறைக்க
பக்கங் குடைபிடித்தார் பகவானைத் தான்மறைக்க
கவிந்து குடைபிடித்தார் கதிரோனைத் தான்மறைக்க

அடிபடுது பேரிகைகள் அங்ககரும் தானதிர
எட்டுத் திசைநடுங்க இளங்கொடியாள் தான்வாரான்
ரதகச துரகமுடன் நாலுவர்க்க சேனைகளும்
மாவணியுந் தேரணியும் மற்றுமுள்ள சேனைகளும்
வருகிறது வெகுஜனங்கள் மண்ணும்விண்ணுங் கொள்ளாமல்
செந்தூ ளெழும்புது தினகரனைக் கப்புதங்கே
கருந்தூ ளெழும்புது சதிரோனைக் கப்புதங்கே
அண்டரண்டந் தானதிர அடித்தார்கள் பேரிகையை
பெரும்பூமி கிடுகிடென்ன பேரிகை தான்முழங்க
கடல்நீர் சுவறிடவே காளசின்னந் தானூத
அஷ்டதிக் கெங்கும் அதிரசின்னந் தானூத
அண்டங் கிடுகிடென்ன அடிபடுதே ராயபேரி
ஆனை யணிநடக்க அரசுமன்னர் பின்னடக்க
குதிரை யணிநடக்க கொற்றவர்கள் பின்னடக்க
தெத்துக் கடந்து தெருவீதி தான்கடந்து
அங்காடி வீதியது ஆயர் தெருக்கடந்தார்
குச்சிலியர் வீதி குலமன்னர் தான்கடந்தார்
பித்தளை கடைத்தெருவும் பின்னிற்க முன்னடந்தார்
வைகைக் கரைகடந்து மதுரா புரிகடந்தார்
பட்டணத்தை விட்டுப் பரிவாய் நடந்தார்கள்
காடு செடிதாண்டி கரியமலை தான்கடந்து
ஆறு சுனைதாண்டி அரிய வனங்கடந்து
சில்லென்று பூத்த செடிகள் வனங்கடந்து
புல்லென்று பூத்த புலியின் வனங்கடந்து
வேங்கை யடர்ந்தவனம் வெண்களாப் பூத்தவனம்
எட்டடி வேங்கை யிருக்கும் வனங்கடந்து
பத்தடி வேங்கை பருத்த வனங்கடந்து
அறுப தடிவேங்கை அடர்ந்த வனங்கடந்தார்
சிங்க முலாவும்வனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
யாளியு லாவும்வனம் அன்னபட்சி தூங்கும்வனம்
கெண்ட பேரண்டங்கள் இருக்கும் வனங்கடந்தார்
பாதிரிப்பூ முல்லை பருத்த வனங்கடந்தார்

ஒருநாரைக் கிருநாரை உயிர்ந்தகொம்பில் தானிருக்கும்
கருநாரைக் கிரைதேடும் கதலி வனங்கடந்தார்
குயிலோசை கேட்கும் குளிர்ந்த வனங்கடந்தார்
மயிலோசை கேட்கும் மாந்தோப்புத் தான்கடந்தார்
ஈக்கள் நுழையாத இருண்ட வனங்கடந்து
அண்ட ரறியாத தண்டக வனங்கடந்தார்
வேந்த ரறியாத வெளிக்காடு தான்கடந்தார்
சந்திர சூரியர்கள் தாங்காணு வனங்கடந்தார்
வெகுதூரம் வருகையிலே வேல்பொருதுங் கண்ணாளும்
பவளம் விளைகின்ற பாங்கான காடுகண்டாள்
தூரத்திற் கண்டவுடன் தோன்றலவ னேதுரைப்பான்
எங்களையா போனது இக்காடோ ஆச்சியென்றான்
ஐயாவென்று சொல்லவே அடித்தாளே வாய்மேலே
அடித்த பொழுதிலே அலறிப் புலம்பிவிட்டான்
பாதகனை நினைக்கவல்லோ பாலனை நானடித்தேன்
என்று-மைந்தனைக் கொஞ்சி மடிமேலே வைத்தாளாம்
அப்போது-மதுரைப் பரிசனங்கள் மகாசேனை தான்கலந்து
அணியணி யாகவேதான் அநேக படைத்தலைவர்
அணித்தலைவர் யுகத்தலைவர் யாவர்களுஞ் சூழ்ந்துவர
ஐந்துலட்சங் குதிரைகளும் அல்லியரைச் சூழ்ந்துவர
ஆனைக் குழாங்களுமே ஆரணங்கைச் சூழ்ந்துவர
சேனைப் பரிசனங்கள் செப்பமுடி போகாது
இப்படி யாகவே இவர்களுந் தானடக்க
அப்போது-காடு மிருக்கிறதுங் கல்லு மிடறுவதும்
ஆனைமே லம்பாரி அசைந்து குலுங்குவதும்
குதிரையின்மேல் கூடாரங் கூட அசைகிறதும்
குதிரை பிரியாமல் கூட நடக்கலுற்றார்
அப்போது அல்லியரும் ஆரணங்கு மேதுரைப்பாள்
ஆனைக ளாறுகோடி குதிரைக ளேழுகோடி
மதுரைப் படைகளெல்லாம் மன்னு வருகுதடா
என்று மதுரைவளர் இராசாத்தி கேட்கலுற்றாள்
அப்போது-அம்மா வருகுதென்றார் ஆனைசேனை பரிவாரம்

பாண்டிவள நாட்டாளும் பவளக்காடு போய்ப்புகுந்தாள்
வேண்டி விடாய்த்துவந்து விழுந்ததே சேனையெல்லாம்
காதை யடைக்கிறதுங் களையாய் வருகிறதும்
நாக்கை வரட்டுவதும் நடுநாக்கு வரளுவதும்
வாடி மயங்கினர் மயிலனையாள் சேனையெல்லாம்
அந்தச் சமையத்தில் ஆரணங்கு தான்கேட்டு
பாளைய மிறங்குமென்றாள் பத்தினியா ளல்லியரும்
கூடாரம் போட்டுக் கொப்பென விறங்குமென்றாள்
பஞ்சவர்னக் கூடாரம் பலதிசையும் போட்டார்கள்
பாணிபாணி யென்று பறந்தது பாளையங்கள்
ஆனைக்கு டோராவுங் குதிரைக்குக் கொட்டாயும்
மாட்டுக்குத் தும்புகளும் மனிதருக்குக் கூடாரம்
இத்தண்ட பேரும் இருந்தார்கள் கானகத்தில்
பாளையங்க டோறும் படிகொடுத்தா ளல்லியரும்
இப்படி யாகவே யிருக்கிற வேளையிலே
கானகத்தி லுள்ளிருக்குங் கனவேடர் வந்தார்கள்
பாளைய மிறங்கினதைப் பார்த்தார்கள் வேடுவர்கள்
இப்பெரிய கானகத்தில் இருக்கிறோம் வெகுநாளாய்
இத்தனை காலமாய் இதுநெடுநாள் கண்டதில்லை
இப்படிக்குப் பாளையங்கள் இவ்வுலகிற் கண்டதில்லை
இந்த-பாளையம் வந்திறங்கப் பார்த்ததில்லை யோர்நாளும்
இதுவென்ன காலமோ என்று மனதிலெண்ணி
என்றல்லோ வேடுவர்கள் எல்லோரும் வந்தார்கள்
கண்டார்கள் மந்திரிகள் கானகத்து வேடுவரை
ஆரப்பா நீங்களென்று அப்போது கேட்டார்கள்
இந்தநல்ல கானகத்தில் இருக்கின்ற வேடுவர்கள்
என்றவர் சொல்ல எஞ்சலிலா மந்திரிகள்
பிடித்துவந்து விட்டார்கள் பெண்பெருமா ளண்டையிலே
அவர்கள்-கும்பிட்டு நின்றார்கள் கொம்பனைக்கு முன்பாக
மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி கண்டுவிட்டாள்
எந்தவூர் வேடுவரோ எனக்கறியச் சொல்லுமென்றாள்
இந்த வனத்திலே யிருக்கிறது நாங்களம்மா

இந்த வனந்தனிலே ஏனம்மா யிங்குவந்தாய்
கதண்டு குளவிகொட்டி காவலர்கள் தான்மடிவார்
முகமறியாப் பேரை மொய்க்குங் கதண்டுகள்தான்
இந்த-கானகத்தி லம்மா கதண்டு குளவிகள்தான்
பவளவேட்டை வந்தவர்கள் பாருலகில் மெத்தவுண்டு
கதண்டுகொட்டி மடிந்தவர்கள் கணக்கு மிதங்களில்லை
ஆச்சி யெழுப்பிடுவாள் அனந்தங்கோடி சேனைகளை
என்றுசொல்ல வேடுவரும் ஏந்திழையா ளேதுசொல்வாள்
இது-யாருடைய ராச்சியம் என்றாளே அல்லியரும்
ஆனாற்கே ளென்னாச்சி அதுவிபரம் சொல்லுகிறோம்
சேராம்பூ ராசாக்கள் செல்வரவ ரைம்பதுபேர்
பிள்ளையில்லை யென்று பெருந்தவசு பண்ணார்கள்
மைந்தனில்லை யென்று வருந்தித் தவசுபண்ணார்
குமாரனில்லை யென்றுசொல்லி கோடி தவசுபண்ணார்
எவருக்கும் பிள்ளையில்லை என்றாரே யீசுவரனார்
பரமசிவன் மனமகிழ்ந்து பவளக் கொடிமேலே
பாலகியை யுண்டுபண்ணார் பரமசிவ னப்போது
பவளக்கொடி யாளென்று பேரிட்டா ரீசுவரனும்
அப்போது-சேராம்பூ ராசாக்கள் துரைகளவ ரெல்லோரும்
பிள்ளை கலியினால் பெண்ணென்று சொல்லாமல்
மாதை யெடுத்துவந்து வளர்த்தார்கள் ராசாக்கள்
பெண்ணென்று சொல்லாமல் பிள்ளையென்று தான்வளர்த்தார்
அவள்-மீறி வளர்ந்தாளே மெல்லிருது வானாளே
பிள்ளை யென்றுசொல்லி பொன்மகுடஞ் சூட்டினார்கள்
அந்த முடிகொண்டு ஆளுகிறாள் ராச்சியத்தை
பதினாறு தன்வருஷம் பட்ட மரசாண்டாள்
அவளைக்-கொள்ள வருவார்கள் கோடான கோடியுண்டு
அவளை-மாலையிட வந்தவர்கள் மட்டு மிதங்களில்லை
இளங்கன்னி யாகவே இருந்தாளிந் நாள்வரைக்கும்
குருநாட்டான் குருகுலத்தான் குந்திமக னர்ச்சுனன்காண்
சந்தன வடிவழகன் தருமராசன் தம்பியவன்
நேசனுந் தானுமாய் தேசத்தில் வந்தவரும்

பவள்க் கொடியாளை பத்தினியை மாலையிட்டான்
பதினாறு நாளாச்சு பத்தினியை மாலையிட்டு
அந்த-ஆனந்த மாரியவள் அழகுள்ள ராச்சியத்தை
நவரத்ந முடிதரித்து நலமுடனே யாளுகிறாள்
அவ்வார்த்தை கேட்டாளே அல்லிப் பெருமாளும்
சீறி யெரிபறந்து சிங்ககுட்டிப் போலெழும்பி
கொக்கரித்து யெழுந்தாளே கொல்லுங் குருவியைப்போல்
ஆரடா தூதுவனே அழையுங்கள் வேடுவரை
காவலிலே வையுமென்றாள் கட்டழகர் வேடுவரை
ஆனைகட்டுங் கூடத்தில் அடைத்தார்கள் வேடுவரை
மூன்றுநா ளாறு பொழுதிலே வாரெனென்று
மைந்தன்மே லாணையிட்டு வந்தாரே வாள்விசயன்
மாலையிட்டுக் கொண்டு வாழ்ந்திருக்க நாளாச்சே
எமலோகம் போனாலும் இட்டுவந்து சங்கரிப்பேன்
ஆகாயம் போனாலும் அர்ச்சுனரைக் கொன்றிடுவேன்
பாதாளம் போனாலும் பார்த்தரைக் கொன்றிடுவேன்
எரிபறந்து கண்சிவந்து எழுந்தாளே பத்தினியாள்
அப்போது மாயவரும் அறிந்தாரே இவ்வசனம்
மோசங்கள் வந்து முடிந்ததே யர்ச்சுனர்க்கு
ஒன்பதவ தாரங்கள் ஒக்கப் பிறந்தாரே
பத்தவ தாரங்கள் பாங்காய்ப் பிறந்தாரே
அப்படிப் பட்டதொரு அர்ச்சுன ராசாவை
சங்கரிக்க வேணுமென்று தையலரும் நினைத்தாளே
அண்டர் வரத்தையெல்லாம் பெற்றவள்காண் ஆரணங்கு
சொக்கர் வலிமையுண்டு சுந்தரியா ளல்லியற்கு
அறிந்து மிருப்போமே அல்லிநல்லாள் தன்சமர்த்தை
ஏமாந்து நாமிருந்தால் இறந்திடுவா ரர்ச்சுனரும்

## ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் அல்லியரசாணியுடைய பாளயங்க ளெல்லாவற்றையுங் கொல்லும்படியாய்க் கதண்டு குளவிகளை யேவிவிடுதல்.

என்றது மெழுந்தாரே எம்பெருமாள் மேகவண்ணர்
துவாரகை யைவிட்டு சுவாமியும் வந்துவிட்டார்

மாயையாய் வந்துவிட்டார் வளமாம் வனந்தனிலே
கதண்டு குளவிகளைக் கடுக வரவழைத்தார்
செங்குளவி கருங்குளவி சேர வரவழைத்தார்
அல்லியரும் புத்திரரும் அவ்விருவர் தன்னைவிட்டு
ஆனை குதிரைகளை அடங்கவொண்ணாச் சேனைகளை
அத்தண்ட பேரையும் அல்லவரைக் கொல்லுமென்றார்
என்றது சொன்னார் எம்பெருமாள் மேகவண்ணர்

## கதண்டு குளவி சேனைகளைக் கொல்லுவது.

மாய னுரைகேட்டு வருகிறது கதண்டுகள்தான்
பாளையத்திற் போய்ப்புகுந்து பதைக்கவே கொல்கிறது
கண்டகண்டந் துண்டமாய்க் கண்டித்துப் போடுது
ஈரலைப் பிடுங்குதே யாவரையுங் கொன்றிடுதே
குடலைப் பிடுங்குதே குப்பையில் தள்ளுதே
அம்மாடி யாத்தேயென்று அலறி விழுந்தவரும்
செத்து மடிந்தாரே சிவலோகம் போய்ச்சேர்ந்தார்
அல்லியரும் புத்திரரும் அவ்விருவர் தப்பவிட்டார்
மற்றபே ரெல்லாரும் மாண்டு மடிந்தார்கள்
கண்டாளே அல்லியரும் கனக்க விசாரமிட்டு
இதுவென்ன பாவமிது ஏதேது மறியேனே
அன்னீத மாகவே அனைவோரு மாண்டாரே
இவர்களைத் தானெழுப்ப இளங்கொடியுந் தானினைந்தாள்
ஆலவாய்ச் சொக்கர் ஆண்டவரே வாருமென்றாள்
மதுரைமீ னாட்சியம்மை வாழ்மதுரை சொக்கேசர்
ஆபத்தைத் தீர்க்கவேணும் ஆண்டவனே வாருமென்றாள்
தொழுது வணங்கியே தோத்திரம் பண்ணலுற்றாள்

## சொக்கலிங்கரும் மீனாட்சியம்மையும் வருகிறது.

சொக்க ரதுவறிந்து துடுக்கென்று தானெழுந்து
அங்கயற்கண் மீனாட்சி ஆச்சியருந் தானெழுந்து
அல்லவரைத் தானெழுப்ப ஆண்டவருந் தான்வருவார்
மாய ரதுவறிந்து வந்துவிட்டார் சொக்கரண்டை

என்னுடைய மைத்துனரே எங்குநீர் போகிறீர்காண்
புருஷனுந் தேவியுமாய்ப் போகிற பயணமெங்கே
அல்லியின் பாளையங்கள் அதமாய் மடிந்ததுகாண்
கதண்டுகொட்டி செத்தவர்க்கு கன்னி புலம்புகிறாள்
அல்லவரை நானெழுப்ப ஆயரே போறேனென்றார்
மாயன் பெருமாளும் மறுவார்த்தை யேதுரைப்பார்
இதுவொரு காரியமாய் ஏன்போக வேண்டும்நீங்கள்
அடியேனு லாகாதோ யாவரையுந் தானெழுப்ப
என்னாலே யாகாதோ எழுப்பிவிட மாட்டேனோ
மயிர்க்கால் முறியாதே மாதரின் சேனையெல்லாம்
எழுப்பி விடுகிறேன் யீசுவரரே தப்பாது
அரண்மனைக் கேகுமென்று அனுப்பிவிட்டார் மாயவரும்

## ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனரை யழைப்பது.

சேராம்பூ ராசாக்கள் சீமையிலே வந்துவிட்டார்
அச்சுதா னந்தரும் அந்தநல்ல வேளையிலே
காலையில் தாமெழுந்து கால்முகஞ் சுத்திபண்ணி
பூங்கா வனத்திற்குப் போகின்ற வேளையிலே
மாயன் பெருமாளை கண்டு வணங்கினார்
ஆயன் பெருமாளை அடிபணிந்தா ரெல்லோரும்
வாள்விசய னெங்கேயென்று மாயவனார் கேட்கலுற்றார்
வட்பரவ ரர்ச்சுனரை மாயவரும் எங்கேயென்றார்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக்கொடி யாளருகே
சதுரங்க மாடியே தனஞ்சயனும் இருக்கின்றான்
வாள்விசயன் கோமானை வரவழைத்து வாருமென்றார்
அவ்வார்த்தை கேட்டுமவர் அச்சுதரு மோடிவந்தார்
அர்ச்சுனரும் தேவியரும் ஆசார வாசலிலே
சொக்கட்டா னுடுகையில் தோழனவன் கைதட்டி
கண்காட்டித் தானழைத்தான் காண்டீப னர்ச்சுனரை
சைகையைத் தானறிந்து தனஞ்சயன் தானெழுந்தான்
பூசைபண்ணி வாறேனென்று போய்நடந்தா னர்ச்சுனனும்
அரண்மனைக ளேழுகட்டும் அந்தப்புரம் தான்கடந்து

தெத்துக் கடந்து தெருவீதி வந்தபின்பு
ஆணழகர் அர்ச்சுனரே அரிராமர் வந்தார்காண்
மாயன் பெருமாளும் வரவழைத்தா ருன்னையென்றார்
எங்கே யிருக்கிறார் எம்பெருமாள் சொல்லுமென்றார்
பிள்ளையார் கோவிலண்டை யிருக்கிறார் வாருமென்றார்

## அர்ச்சுனன் வருவது.

என்றது கேட்டுமெவர் இளவிசயன் தான்பயந்து
பூங்கா வனம்புகுந்து புஷ்ப மலர்பறித்து
மல்லிகை முல்லை மலர்பறித் தோடிவந்து
மாயன்றன் பாதத்தில் வணங்கியே தெண்டனிட்டார்
கொண்டுவந்த பூமலரைக் குபுகுபென்று தான்சொரிந்தார்
முக்கா லடிபணிந்து முடிவணங்கித் தெண்டனிட்டார்
வந்து பணிந்தவனை வாழ்த்தியந்த மாயவரும்

## ஸ்ரீகிருஷ்ணர் சொல்வது.

வம்பரவ ரர்ச்சுனரே மன்னா யெழுந்திரென்றார்
மூன்றுநா ளாறு பொழுதிலே வாரேனென்று
மைந்தன்மே லாணையிட்டு வந்தீரே வாள்விசயா
மற்றுமொரு கன்னியரை மணமாலை சூட்டினாய்
மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி பொல்லாதாள்
வெட்டி யெறிவாளே வீரமணி வாளாலே
கொல்ல நினைத்தாளே கொம்பனையாள் மாதுகன்னி
வைகை நதியாளும் வந்தாளே படைகூட்டி
தண்டெடுத்து வந்தாளே தைய லிளங்கொடியாள்
வடகோடி கானகத்தில் வந்துதண் டிறங்கினது
ஆயிரங் கூடாரம் அங்குவந்து போட்டார்கள்
என்னசெய்வீர் வாள்விசயா என்றார் பெருமாளும்

## அர்ச்சுனன் சொல்வது.

ஆணா லழகுமன்னன் அர்ச்சுனரு மேதுசொல்வார்
மதிமயக்க மாச்சுது மாயவரே யென்னசெய்வேன்
எங்கே யொளித்து இருப்பேன்காண் மைத்துனரே

நான்-யமலோகம் போவேனோ ஏழுலகங் கொண்டவனே
பிரமலோகம் போவேனோ பெருமாளே சொல்லுமென்றார்
நீ-சிவலோகம் போனாலும் தேர்விசய ராசாவே
நீ-பிரமலோகம் போனாலும் போய்பிடிப்பா ளல்லியவள்
நீ-எமலோகம் போனாலும் இழுத்துவந்து சங்கரிப்பாள்
நீ-ஆகாயம் போனாலும் அம்புக் கிரையிடுவாள்
நீ-பாதாளம் போனாலும் பாய்ந்து பிடிப்பாளே
இனியென்ன செய்வீர்காண் என்றார் பெருமாளும்
உன்-பாதார விந்தத்தில் பரகதி சேர்ந்திடுவேன்
நான்-செத்து மடிந்திடுவேன் ஸ்ரீ ராமா நீரறிய
நான்-வல்ல பிராணனைக் கல்லோடு மோதிடுவேன்
வேறுகதி யில்லையென்று விழுந்தலறி தெண்டனிட்டான்

## ஸ்ரீகிருஷ்ணர் இருவரையு மாண்ட்வர்போல் செய்வது·

ஆயன் பெருமாளும் அருளாள ரப்போது
எந்நாளு முந்தனிடம் இடியோடா யெந்தனுக்கு
உன்னாலே யென்னபாக்யம் உண்டுபதங் கண்டேனடா
என்றந்த மாயவரும் எழில்விசய னர்ச்சுனனை
பவளநல்ல காட்டினிலே பாரளந்தார் கூட்டிவந்து
அர்ச்சுனன் தன்னுயிரும் அச்சுதன் தன்னுயிரும்
இருவர் உயிர்வாங்கி எம்பெருமா ளடக்கிவைத்தார்
கதண்டுகொட்டி செத்தவர்போல் கரியமா லுண்டுபண்ணூர்
குடலைப் பிடுங்கியே குத்தி சரித்துவிட்டார்
வயிற்றைக் கிழித்து மணிக்குடலைத் தொங்கவிட்டார்
துண்டந்துண்ட மாகத் துணித்தா ரிருவரையும்
நாய்நரிகள் தீண்டாத நல்லெறும்பு மொய்யாத
சக்கரத்தைத் தானெடுத்து சாமியார் காவல்வைத்தார்
பத்திரமாய்க் காருமென்று பாரளந்தா ரப்போது

## கிருஷ்ணமூர்த்தி ஓலை யெழுதல்·

மற்றோர் மரத்தடியில் வந்து பெருமாளும்
சேமக் குருத்தோலை வாரியந்த மாயவரும்
வண்ணக் குருத்தோலை வாரியந்த மாயவரும்

பொன்னி னெழுத்தாணி பொருந்தவே கைபிடித்து
*உற்பனம தாகவே ஓலை யெழுதுகிறார்
சேரம்பூ ராசாக்கள் சேர்ந்தெழுதும் பாவனைபோல்
குருகுல வம்மிசத்தில் குந்திமகன் தருமருக்கு
வெற்றி மதயானை வீம னவன்தனக்கும்
நகுலன் சகாதேவன் ராசாக்கள் யாவருக்கும்
மந்தாரக் குந்தியற்கும் மற்றுமுள்ள மன்னருக்கும்
பாஞ்சாலன் பெற்றெடுத்த பதிவிரதை துரோபதைக்கும்
ஆரு யிரவ ரையன்மார் பாண்டியற்கும்
மகுடத் துரைச்சியவள் வாழ்வரசி யல்லியற்கும்
மேகம் பயின்றெடுத்த மின்னொளி நாயகிக்கும்
நாகரு மீன்றெடுத்த நாககன்னி மங்கையற்கும்
சோர வளநங்கை சுபத்திரை நாயகிக்கும்
ஊரு மதயானை உத்தமர்கள் நூற்றுவர்க்கும்
அட்டத்தார் சுற்றத்தார் அனைவோருந் தானறிய
உறவின் முறையாரும் உள்ளவருந் தானறிய
வெள்ளிக் கிழமையில் விடிந்தைந்து நாழிகையில்
சேரம்பூ ராசாக்கள் சேர்ந்தாண்ட பட்டணத்தில்
பவளம்வெட்டப் போமிடத்தே பார்த்தன் விசயனையும்
அச்சுதா னந்தஅரி அன்பான தோழனையும்
கதண்டுகொட்டி மாண்டார்கள் கட்டழக ரென்றுசொல்லி
சாவோலை போலெழுதி தலைப்புறத்திற் கட்டாராம்

## ஸ்ரீகிருஷ்ணர் வெட்டியானாய் ஓலைகொண்டு போகுதல்.

அப்போது-ஆயன் பெருமானும் அருளாள ரேதுசெய்தார்
வெட்டியா னைப்போலே வேஷங்கொண்டா ரெம்பெருமாள்
கம்பளியை மேல்போர்த்து கையில் தடியெடுத்து
தோட்டியைப் போலாக தீட்டோலை கைபிடித்து
ஓட்டம் நடையுமாய் ஓடுகிறா ரெம்பெருமாள்
அல்லிநல்லாள் தானிருக்கும் அவ்வழியே வாராராம்
கண்டாளே தோட்டிதன்னை கட்டழகி யல்லியரும்
மனிதரு மில்லாதே மயங்குகின்ற வேளையிலே

---

* உற்பனம்=உண்மை.

தோட்டியைக் கண்டவளுந் துரைச்சியவ ளேதுரைப்பாள்
ஆரடா தோட்டிஎன்று அழைத்தாளே யல்லியரும்
ஏனம்மா யென்னையழைத்தீர் என்றவனுந் தெண்டனிட்டான்
எந்தவூர்த் தோட்டிநீ எனக்கறியச் சொல்லுமென்ருள்
சேராம்பூ ராசாக்கள் சீமையின் தோட்டியென்ருன்
எந்தவூர் பூமிக்கு யாதோலே கொண்டுசெல்ல
குருநாட்டுச் சேனைக்கு போகின்றேன் கொற்றவியே
குருகுல வம்மிசத்தில் குந்திமக னர்ச்சுனனும்
தருமரின் தம்பியராம் தனஞ்சய னர்ச்சுனனும்
வெற்றி மதயானை வீமருக்குத் தம்பியராம்
சேராம்பூ ராசாக்கள் சீமைதுரை கள்பெண்ணை
பங்கயஞ் சீர்கண்ணுள் பவளக் கொடியாளை
பதினறு நாளாச்சு பத்தினியை மாலையிட்டு
கதண்டுகொட்டி மாண்டுவிட்டார் காண்டீப ரர்ச்சுனரும்
ஆகையி னலேதான் அனுப்பின ரென்னையம்மா
ஓலைகொண்டு போகிறேன்காண் உத்தமியே யென்னுச்சி
அவ்வார்த்தை தான்கேட்டு அல்லி வயிறெறிந்து
ஓலையைத் தாரும் உத்தமனே பார்ப்போமென்ருள்
ஏந்திழையாள் முன்னெடுத்து ஈய்ந்தான் மடக்கோலை
மடக்கோலை தானெடுத்து வாசித்துப் பார்த்தாளே
அதிலிருந்த மார்க்கமெல்லாம் அறிந்து புலம்பலுற்ருள்
விரித்தாள் தலைகூந்தல் விட்டெறிந்தாள் தம்பலத்தை
அப்பிகொண் டாள்வயிற்றில் அறைந்துகொண் டாள்முகத்தில்
கோடை யிடித்தாற்போல் குத்திகொண் டாள்வயிற்றில்
பிச்சுகொண் டாள்சதையை பிடுங்கிகொண் டாள்மயிரை
கோவென்ற சத்தமுடன் குமுறிப் புலம்பலுற்ருள்
ஐயையோ தெய்வமே அநியாயம் பண்ணீர்களே
எங்கேயோ வானம் இடித்தது என்றிருந்தேன்
தப்பாதே வானம் தலையி லிடித்தது
தண்டெடுத்து வந்தேனே சண்டையிட்டுப் போராட
உயிரோ டிருந்தாலே உற்றசண்டை பண்ணவேணும்
மடிந்தவர்கள் தன்னுடனே வார்த்தைகளே னெந்தனுக்கு

என்-பத்தாவைப் பறிகொடுத்து பாரினில் நிற்பேனோ
புருஷனை நானிழந்து பூமியிலே நிற்பேனோ
கூட மடிந்திடுவேன் குவலயத்தி னில்லாதே
மாண்டு மடிந்திடுவேன் வையகத்தி னில்லாதே
தீப்பாய்ந்து போவேனென்று செப்பி யழுதாளே
அண்ணுவே தோட்டியடா அழகுமைந்தன் தாரேனடா
எந்தன்றன் புத்திரனை ஏந்திநீ மன்னவனே
கொண்டுபோய் மாமியிடம் குருநாட்டிற் சேருமென்றாள்
பாட்டி யவள்கையில் பாலகனை வொப்பியென்றாள்
அப்போது தோட்டி ஆரிழைக்கு ஏதுசொல்வான்
அரண்மனைக ளென்றால் அஞ்சுவோம் நாங்களம்மா
நான்-தந்த மடக்கோலை தையலரே தாருமென்றான்
மடக்கோலை தான்கொடுத்தாள் மாது இளங்கொடியும்
ஓலையைக் கைப்பிடித்து உத்தமனுந் தானடந்தான்

## புலந்திரன் சொல்வது.

போரஞ்சா மன்னன் புலந்திரனு மப்போது
மாதாவைப் பார்த்து மைந்தனு மேதுசொல்வான்
அம்மாநா னையாவென்றால் அடித்தாயே வாய்மேலே
இப்போது-ஆரென் றழுகிறீர் ஆனந்த வாழ்மாரி
புருஷன்மேல் சண்டைக்குப் புறப்பட்டாய் பொற்கொடியே
புருஷன்மேல் போருக்குப் போவாரோ வையகத்தில்
தண்டெடுத்துப் போகவே தனஞ்சயனார் மாண்டுவிட்டார்
நீ-வாளெடுத்துப் போகவே வைகுந்தஞ் சேர்ந்துவிட்டார்
நான்-பவளத்தேர் கேட்ட பாவமல்லோ யென்தாயே
கேளாமல் நானிருந்தால் கெடுதியொன்றுஞ் சேராதே
எனக்காக யிங்கேவந்து என்தகப்பன் தான்மடிந்தார்
என்தகப்பன் தன்னுடனே என்னுயிரை நான்மடிப்பேன்
என்தகப்பன் மாண்டு இனியிருக்கேன் பூமியிலே
நான்-இப்போதே யென்னுயிரை இழக்கின்றேன் மாதாவே
நான்-ஐந்து வயதம்மா அறியாத பாலனுக்கு
இந்தவிதி யெந்தனுக்கு ஈசுவரனார் கட்டளையோ

என்று-மண்ணில் விழுந்து மைந்தன் புரண்டழுதான்
அப்போது-பால னழுகிற பரிதாபந் தான்பார்த்து
ஐயோ சிவனேயென்று அழுகிற பாலகனை
நல்லது தம்பியென்று நாயகியாள் சென்றெடுத்து
அப்பா மகனே அறிவுள்ள கண்மணியே
இந்த வயதிலே ஈசுவரனார் கட்டளையோ
அறியாத பாலனுக்கு அனைமத்தாரே யித்துயரம்
இப்போது-பழிகாரி யானேனே பாலன் புலந்திரனே
என்று-ஆறுத துக்கமுட னழுதுகொண்டு தானிருந்தாள்

## கிருஷ்ணர் தருமருக்கு ஓலை கொடுத்தது.

அப்பால்-தோட்டியு மான துவாரகா புரிவாசன்
சில்லென்ற காடுகள் செடிகள் வனங்கடந்து
காடு கடந்து கரியமலை தான்கடந்து
எண்ணு மலையி லிசைந்துவரும் காவேரி
மணமாலை ரங்கர் வனங்களெல்லாந் தான்கடந்து
துங்கபத் திரிநாடு தோட்டியரும் கடந்தாரே
குருநாடு தேசத்தில் கொற்றவனும் போய்ப்புகுந்து
அன்புடைய தருமரவர் அரண்மனைக்குப் போய்ப்புகுந்து
கொற்றவனார் தருமரவர் கொலுவுக்கு முன்னேவந்து
கைகட்டி நின்றவனுங் கடுகெனவே தெண்டனிட்டான்
தயவாக தோட்டிமுகம் தருமருந் தான்பார்த்து
யாருடைய தோட்டிநீ யென்றாரே ஆணழகர்
நான்-சேராம்பூ ராசாக்கள் தேசத்து தோட்டியென்றான்
இங்கேநீ வந்ததென்ன எனக்கறியக் கூறுமென்றார்
சொன்னவுட னேயவன் சுருளோலை கைகொடுத்தான்

## தருமர் முதல் யாவரும் புலம்பல்

மடக்கோலை கட்டவிழ்த்து வாசித்துப் பார்த்தவரும்
அதிலிருக்குஞ் செய்தியெல்லாம் அறிந்தாரே தருமலிங்கர்
வாய்மூடி தருமரவர் வயிறெரிந்து புலம்பலுற்றார்
மாளவோ மாயனுடன் உன்னை யனுப்பிவைத்தேன்
என்-செல்வத் திருமுகமே தேர்விசய அர்ச்சுனனே

என்-கண்ணே நவமணியே கற்பகமே யெங்கொளித்தாய்
என்-கட்டிக் கரும்பேநீ கருவிளமே யெங்கொளித்தாய்
தேடக் கிடையாத திரவியமே யெங்கொளித்தாய்
சுவரி லெழுதவொண்ணுச் சித்திரமே யெங்கொளித்தாய்
படத்தி லெழுதவொண்ணுப் பார்த்தீபா யெங்கொளித்தாய்
உன்னைப் பிரிந்துநான் உலகி லிருப்பேனே
நான்-எப்படி மனந்துணிந்து இருப்பேனே வாள்விசயா
என்றது சொல்லியே ஏங்கி யழுகலுற்றார்
வெற்றி மதயானை வீமசே னன்கேட்டு
கோவென் றழுதானே கொற்றவனு மப்போது
கூவி யழுதானே கொற்றவனு மப்போது
நகுல னதுகேட்டு நலமுட னோடிவந்து
மடிந்தீரோ அண்ணுவென்று மண்ணில் புரண்டழுதான்
செத்து மடிந்தீரோ சிவலோகம் போனீரோ
மாண்டு மடிந்தீரோ வைகுந்தம் போனீரோ
உம்மையும் விட்டுநான் உலகி லிருப்பேனே
என்று-தரையிற் புரண்டழுதான் தாக்குடைய நகுலனவன்
சாஸ்திரக் கொடியுடைய சகாதேவன் தான்கேட்டு
அண்ணுவே யென்றுசொல்லி அலறி யழுதானே
குய்யோ முறையோவென்று குமுறிப் புலம்பலுற்றான்
குந்தியம்மாள் தான்கேட்டு குஞ்சரமே என்றழுதாள்
ஐயோ மகனேயென்று அழுது புலம்பலுற்றாள்
பாஞ்சாலன் தன்மகளும் பத்தினியாள் துரோபதையும்
மாரில் அடித்துகொண்டு மயிரை விரித்துகொண்டு
ஏங்கி யழுதாளே இடைதா வடம்புரள
அந்நகரி லுள்ளோர் அனைவோருந் தானழுதார்
வர்த்தகராம் வாணிகரும் வந்துதுக்கம் கொண்டார்கள்
திக்கெட்டுந் தான்தெரிய தேசமெங்குஞ் சீட்டெழுதி
மாரிழவு கொண்டார்கள் மகாசேனை யுள்ளவரும்
அங்கு மவர்கள்துக்கம் அழுதுவந்து கண்டார்கள்
எல்லாருங் கூடியே இரைந்தழுது கூச்சலிட்டார்
கட்டி அழுதார்கள் கடலிறையும் வெள்ளம்போல்

எல்லை யளந்த எம்பெருமாள் தான்பார்த்து
குஞ்சிரிப் புக்கொண்டு குலுங்க மிகநகைத்து
நீங்கள் நடவுங்கள் நேரமாச்சு தென்றாரே

## தருமர் முதலிய யாவரும் பவளக்காட்டிற்கு வருவது.

அப்போது தருமராஜர் அவசரமாய்த் தானெழுந்தார்
தம்பிமார் மூவரும் தானும் நடக்கலுற்றார்
குந்தியம் மாள்தானுங் கூட நடக்கலுற்றாள்
சங்க வதியம்மாள் தானும் நடக்கலுற்றாள்
மாதினியாள் துரோபதையும் மற்றுமுள்ள தேவியரும்
பல்லக்கின் மீதேறி பலர்சூழ நடந்தார்கள்
வேங்கை யடர்ந்தவனம் வெண்களாப் பூத்தவனம்
கொங்கு பெருத்தவனம் கொன்றைகளாப் பூத்தவனம்
சிங்க முலாவும்வனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
யாளிகள் வாழுமந்த அடவியைத் தான்கடந்தார்
மயிலோசை கேட்குமந்த மாந்தோப்பு தான்கடந்தார்
அண்ட ரறியாத தண்டக வனங்கடந்து
வேந்த ரறியாத வெளிக்காடு தான்கடந்து
சந்திர சூரியர்கள் தான்காணா வனங்கடந்து
அல்லியம்மாள் தானிருக்கும் அவ்வனத்தில் வந்தார்கள்

## தருமர் புலந்திரனை யழைப்பது.

தாரார் புகழுடைய தருமர் பெருமானும்
கண்டார் புலந்திரனை கட்டழகர் தருமராஜர்
அப்பா புலந்திரனே அழகுள்ள கண்மணியே
தேனே பசுங்கிளியே தெவிட்டாத தெள்ளமுதே
கண்ணே நவமணியே கற்கண்டே சர்க்கரையே
சொக்கநாதர் கோவிலுக்குத் தூங்கா மணிவிளக்கே
என்-தம்பி புலந்திரனே தனுவிசயன் புத்திரனே
வைகைக் கரையடைக்க மண்சுமந்த சொக்கரருள்
ஆறுயிரம் பாண்டியற்கு அரியபேர னாகவந்தோய்
வாராய் மகனேவென்று மன்ன னெடுத்துரைப்பார்
தம்பிநீ வாடாவென்று தரும ரெடுத்துரைத்தார்

போரஞ்சா மன்னன் புலந்திரனுந் தான்பார்த்து
பெரியண்ணா வென்று பிரியமுடன் தெண்டனிட்டான்
அண்ணாவே யென்று அடிபணிந்து தெண்டனிட்டான்
வந்து பணிந்தவனை வாரி யெடுத்தணைத்து
வாழ்த்தி யெடுத்து மகனை மடியில்வைத்து
கட்டி யணைத்துக் கனிவாயை முத்தமிட்டு
மைந்தர் புலந்திரனை மன்னவனுந் தான்பார்த்து
என்-தங்கக் களஞ்சியமே தார்வேந்தர் பூஷணமே
அரிய சிரோமணியே அர்ச்சுனனா ரெங்கேயென்றார்

## புலந்திரன் சொல்வது.

போரஞ்சா மன்னன் புலந்திரனுங் கூறுவான்
ஐயாவே நீர்கேளும் அதுவிபரஞ் சொல்லுகிறேன்
பாண்டிவள நாட்டாளைப் பவளத்தேர் கேட்டேனையா
பாண்டி வளநாட்டில் பவளங் கிடையாது
எனக்கு-தோஷித்த தென்று சுருளோலை யெழுதிவிட்டாள்
களைதாங்கிப் போச்சுதென்று கன்னி யெழுதிவிட்டாள்
அப்போது ஐயாவும் அவரிங்கே வந்தாரையா
பார்த்த வுடன்நானும் பவளத்தேர் கேட்டேனையா
எடுத்து மடியில்வைத்து என்கண்ணே நல்லதென்றார்
எப்போது வருவீரென்று யான்கேட்டே னையாவே
மூன்றுநா ளாறு பொழுதிலே வாரேனென்று
என்பேரி லாணையிட்டு எழுந்தருளிப் போனாரையா
சேராம்பூ கானகத்தில் சென்று மடிந்தாரையா
பவளத்தேர் கேட்டுநான் பழிகார னானேனையா
சும்மாவிருந் தேனானால் சுகமா யிருப்பாரே
ஐயாவே யென்று அலறினான் பாலகனும்
தாரார் புகழுடைய தரும ரவர்கேட்டு
பாலன் புலந்திரனைப் பார்த்துப் புலம்பலுற்றார்
அறிவுள்ள ஐயாவே ஐயாவே யென்றழுதார்
வெற்றி மதயானை வீமனும் பார்த்தழுதான்
நகுலசகா தேவரென்னும் ராசர் புலம்பலுற்றார்

அங்கவர்க ளெல்லாரும் அழுது புலம்பலுற்ருர்
தாரார் புகழுடைய தருமர் பெருமானும்
மதுரையை யாளுகின்ற மாது முகம்நோக்கி
மைந்தனும் நீருமாய் வந்ததென்ன சொல்லுமென்ருர்

## அல்லியரசாணி சொல்வது.

பிறவா முடிதரித்த பெண்ணரசி சொல்லலுற்ருள்
வந்தேன் மதிகுலேந்தேன் மதியின் விதிவசத்தால்
முன்னே நடந்த முறையெல்லாஞ் சொல்லலுற்ருள்
போரஞ்சா மன்னன் புலந்திர வீரியனும்
கேளாக் கருமத்தைக் கேட்டான் புலந்திரனும்
பவளத்தேர் வேணுமென்று பாலகனும் கேட்டானே
மதுரைப் படைத்தலேவர் மன்னவரைத் தானழைத்து
பவளத்தேர் வேணுமென்று பலபேரை நான்கேட்டேன்
சேராம்பூ கானகத்தில் செம்பவளம் உண்டென்ருர்
எங்களா லாகாது எடுத்து வருவதற்கு
அர்ச்சுன ராசாவால் ஆகுமென்ரு ரெல்லாரும்
மைந்தன் புலந்திரற்கு மாசுரம் வந்ததென்று
ஓலே யெழுதியே உத்தமரே யனுப்பிவைத்தேன்
அதனுலே யர்ச்சுனரும் அவரிங்கே வந்தாரையா
பாலன் புலந்திரனும் பவளத்தேர் கேட்டானங்கே
மூன்றுநா ளாறு பொழுதிலே வாரேனென்று
மைந்தன்மே லாணையிட்டு மன்னவரும் போனுர்காண்
பதினுறு நாளாயும் பார்த்தர்வர வில்லேயென்று
பார்த்தரோடு சண்டை பண்ணவேணு மென்றுசொல்லி
தண்டு தளமெடுத்து வந்தேன் தனஞ்சயரே
மதுரைப் படைத்தலேவர் மகாசேனே யத்தனேயும்
யானே குதிரைகளும் அண்டவொண்ணுச் சேனேகளும்
குளவி கதண்டுவந்து கொட்டி மடித்ததையா
மைந்தனும் நானும் மரம்போல நின்றுவிட்டோம்
என்று தருமரது இணையடியிற் ருன்விழுந்து
என்னசெய்வே னென்று ஏங்கி மிகவழுதாள்



கிருஷ்ணன் அர்ச்சுனன் இறந்ததைத் தருமர் முதலியவர்களுக்குக் காட்டுதல்.

(101-ஆம் பக்கம் பார்க்க.)

மன்னர் புலந்திரனை வைத்து வளர்த்திடுங்கள்
எடுத்து வளர்த்திடுங்கள் என்றந்த அல்லியம்மாள்
தீப்பாய்ந்து போவேனென்று செப்பிப் புலம்பலுற்ருள்
பாராளுந் தருமராஜர் பார்த்து மிகவழுதார்
மோதிரக் கையை முகத்தோ டணைந்துகொண்டு
மெத்தப் புலம்பலுற்ருர் வேந்தர் தருமராஜர்

## கிருஷ்ணர் அர்ச்சுனன் இறந்துவிட்டதைக் காட்டுதல்.

எல்லை யளந்ததொரு எம்பெருமாள் தான்பார்த்து
ஏன்கா ணழுகுகின்றீர் இப்பெரிய கானகத்தில்
மன்னவ ரர்ச்சுனனுர் மாண்டவிடங் காட்டுகிறேன்
என்றுசொல்லி மாயவரும் எல்லோரையு மழைத்துவந்து
வாள்விசயன் பிணத்தை வகையாகக் காட்டலுற்ருர்

## தருமர் முதலிய யாவரும் புலம்பல்.

தக்க புகழுடைய தருமர் பெருமானும்
விசயன் திருமுடியை வேந்த ரவரெடுத்து
காண்டீபன் தன்முடியைக் கண்மலரி லொற்றிகொண்டு
தம்பி யடாவென்று தருமர் மிகவழுதார்
வீம ரவர்பார்த்து மிகவும் புரண்டழுதார்
நகுல சகாதேவ ராசர் புலம்பலுற்ருர்
அண்ணுவே யென்று அழுது புலம்புகிருர்
மந்தாரக் குந்தியம்மாள் மாது புலம்பலுற்ருள்
சங்க வதியம்மாள் தானும் புலம்பலுற்ருள்
பாஞ்சாலன் பெற்றெடுத்த பத்தினியாள் துரோபதையும்
என்னை-மாலையிட்ட மன்னவரே மடிந்தீரோ கானகத்தில்
என்றே துரோபதையும் யேங்கி யழுகலுற்ருள்
மதுரைத் துரைச்சி மாதுநல்லா ளல்லியரும்
காண்டீப னர்ச்சுனரைக் கண்டு மனங்கொதித்து
பார்த்துமே மாரடித்துப் பைங்கிளியுந் தானழுதாள்
கூடமடி வேணையா கொற்றவனே யென்றுசொல்லி
மெத்தப் புலம்புகிருள் மெல்லிநல்லா ளல்லியரும்
அச்சுதன் தங்கை ஆரணங்கு சுபத்திரையும்

என்-கண்ணான மைத்துனரே காண்டீப அர்ச்சுனரே
உம்மைவிட்டு நான்பிரிந்து உலகி·லிருப்பேனோ
மாண்டு மிருக்கிறது மன்னவனே நீதியுண்டோ
இனியிந்த சீவனை இழக்கிறே னென்றழுதாள்
கோவென் றழுதாள் கோபாலன் தங்கையரும்
தேவிமா ரெல்லோரும் ஆவிவிடத் தாம்துணிந்தார்
போரஞ்சா மன்னன் புலந்திரனு மப்போது
அந்த-பாராளுந் தருமரைப் பார்த்தந்தப் பாலகனும்
ஐயருட னேகூட ஐயாவே நான்மடிவேன்
நான்-கூடமடி வேனென்று கோவென்று புலம்புகிறான்
பால னழுகிற பரிதாபந் தான்பார்த்து
மைந்தன் புலந்திரனை மன்னவருந் தான்பார்த்து
அறியாத பாலகனே அறிவுள்ள ஐயாவே
இந்தத் துயரம் வருவானே னுந்தனுக்கு
இது-மாயர் மகுத்துவமோ மன்னவனே நானறியேன்
என்று-மைந்தனைத் தானினைந்து மன்னவருந் தானழுதார்
மைந்தன் புலந்திரன் மன்ன னழுகிறதை
வெற்றி மதயானை வீமனவன் பார்த்தழுதான்
நகுல சகாதேவ ராசாக்கள் தானழுதார்
முத்து முடிதரித்த முருகுழலாள் புத்திரனை
கட்டி யழுதார்கள் கடலுடைந்த வெள்ளம்போல்
கூடி யழுதார்கள் கொம்பனைமா ரெல்லோரும்

## சேராம்பூ ராசாக்கள் பவளக்கொடியாளை அர்ச்சுன ராசன் எங்கேயென்று கேட்டல்.

சேராம்பூ ராசாக்கள் தெருவி னுலாவுகையில்
வடகோடி கானகத்தில் வருவானேன் கூச்சலென்று
ஐம்பது பேருமாய் அரண்மனைக் குள்ளேவந்து
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளை
மாப்பிள்ளை ராயர் மன்னவனு ரெங்கேயென்றார்
பூசைபண்ணி வாரேனென்று போனாரவர் கானகத்தில்
வடகோடி கானகத்தில் வருவானேன் கூச்சலென்றார்

அஞ்சலிலே தூதுவரை அனுப்பிவைத்தா ரப்போது
அப்போது தூதுவர்கள் அடுத்தார்க ளவ்வணம்
மாப்பிள்ளை ராயர் வைகுந்தம் போறரென்று
ஓடிவந்தார் தூதுவர்கள் ஒருநொடிக் குள்ளாக
தூதுவரும் வந்து தொழுதுதெண்ட னிட்டுநின்று
மாப்பிள்ளை ராயர் வைகுந்தஞ் சேர்ந்தார்காண்
அவர்களின் சேனைகளும் அனைவோரும் வந்திறங்கி
கட்டி யழுகிருர் கானகங் கொள்ளவில்லை

## சேராம்பூராசர் வருவது.

ஐம்பது ராசாக்கள் அபயம் சிவாயவென்று
முன்னறியோம் பின்னறியோம் மும்மூர்த்தி யானவரை
அநியாய மென்றுசொல்லி அடித்துப் புரண்டழுதார்
பதினாறு நாளையிலே பாவிசிறை யாவதென்ன
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
ஐம்பது ராசாக்கள் அவர்களின் தேவியரும்
எல்லாருங் கூடியே ஏகோபித்தார் கானகத்தில்
கானகத்தில் வந்து கதும்பி மிகவழுதார்

## பவளக்கோடியாள் புலம்புதல்.

கட்டி யழுதார்கள் கடலுடைந்த வெள்ளம்போல்
அப்போது-பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
பதினாறு தன்வருஷம் பாவி சிறையிருந்தேன்
இந்தப் பழிக்காக யீசுவரரே யிங்கேவந்து
என்னை-மாலை யிடச்சொல்லி மயக்கங்கள் பண்ணாரே
அப்படியே மாலையிட்டேன் அர்ச்சுனரை நானுமிப்போ
இந்த விதியெனக்கு ஏன்வைத்தீ ரீசுவரரே
அண்ட முலகளந்த ஆயர் பெருமாளே
நீர்-எத்தனைநாள் காத்திருந்தீர் என்னைச் சிறைவைக்க
மாலையிட எத்தனைபேர் வந்தார்கள் ராசாக்கள்
நான்-எவருக்கு மாலையிடே னென்றிருந்தே னப்போது
அர்ச்சுனரை மாலையிட்டு அருஞ்சிறை யானேனே
ஐயையோ தெய்வமென்று அலறி யழுதிடவே

அப்போது எம்பெருமாள் ஆய ரவர்பார்த்து
மதுரைதுரை யல்லியரின் மனதைக் கலக்கிவிட்டார்
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் நாயகியும்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளை
உற்றுற்றுப் பார்த்தாளே உளமும் மிகக்கலங்க
வாலைப் பிராயம் வயதுபதி னாறிருக்கும்
வேரிற் பவளமது மின்னுகிற காந்தியைப்போல்
கோடிசூர்யப் பிரகாசம் போலே யிருக்கின்றாள்
இவையெல்லாந் தானறிந்தா ளிளங்கொடியா ளல்லியரும்
வாள்விசயன் தோள்மேலே மாலையிட்டா ளுத்தமியும்
நாம்-காணாத காட்சியெல்லாங் கண்டோ மிதுநெடுநாள்
பதினாறு நாளையிலே பாவிசிறை வைத்தார்காண்
என்றுசொல்லி அல்லியரும் யேங்கி யழுதாளே
தோரா வடிவழகி துரோபதையுந் தான்கேட்டு
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளை
கட்டி யழுதார்கள் கமலப்பூ நாயகியை
அப்போது-சேராம்பூ ராசர்களுந் தேவிகளுந் தானழவே
ஆறா யிரவர்கள் அணிதிரளாம் பாண்டியர்கள்
எல்லோருங் கூடியே யிசைந்தழுது கூச்சலிட்டார்
அங்கவர் துக்கம் அடங்கின பிற்பாடு
தக்க புகழுடைய தருமரவ ரேதுசொல்வார்
இறந்ததோ ரர்ச்சுனனும் இனிதிரும்பப் போகிறானோ
மாண்டதோ ரர்ச்சுனனும் மறுபடியும் வாரதில்லை
தம்பியைத் தானெடுத்து தகனஞ்செய்ய வேணுமிப்போ
ஆராரைக் கூட்டி அனுப்புவது சொல்லுமென்றார்
அப்போது அல்லியரும் அரசர்க் கெடுத்துரைப்பாள்
ஆதீன கர்த்தாவே அம்மாவே நான்பாவி
ஐவருக்கும் பொதுவல்லோ ஆரணங்கு துரோபதையும்
மேகத்தில் வந்துதித்த மின்னொளி நாயகியாள்
பார்ப்பான் மகளான பரிவுடைய போகவதி
நாகம் பயின்றெடுத்த நாககன்னி நாயகியும்
அச்சுதன் தங்கை ஆரணங்கு சுபத்திரையும்

பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
அன்னநடை மாதர்களை அக்கினியில் தள்ளுமென்றார்
அப்போது-சேராம்பூ ராசாக்கள் தீரரனை வோரும்வந்து
தாரார் புகழுடைய தரும ரடிவணங்கி
ஐம்பது பேர்களுக்கும் ஆண்டிருக்கப் பிள்ளையில்லை
என்று-ஐம்பது பேர்களுமே அருந்தவசு பண்ணுகையில்
உங்கள்-யாருக்கும் பிள்ளையில்லை என்றந்த யீசுவரனார்
பவளக் கொடிமேலே பாலகியை உண்டுபண்ணார்
பிள்ளை கலியினால் பெண்ணென்றும் பாராமல்
பெண்ணென்றும் செப்பாமல் பிள்ளையென் றேவளர்த்தோம்
பிள்ளையில்லை என்றுசொல்லிப் பெண்மகுடஞ் சூட்டினோம்
வண்ணலட்சங் கோடியுண்டு மாலையிட வந்தவர்கள்
மற்றொருவர் கையில் மணமாலை தீண்டேனென்று
நித்யகன்னி யாகவே நீணிலத்தை யாண்டிருந்தாள்
பதினாறு நாளாச்சு பாவிவந்து மாலையிட்டு
அப்படிப் பட்ட அரசை யனுப்பிவிட்டு
திரும்பி யிருக்கறியேன் தேசமவைத் தானறியேன்
எங்களைக் கூட இளவரசே தள்ளுமென்று
ஐம்பது பேர்களுமே அடிபணிந்தா ரப்போது
தாரார் புகழுடைய தரும ரவர்பார்த்து
பாராளுந் தருமரிந்தப் பரிதாபம் பார்த்துமல்லோ
மோதிரக் கையை முகத்தோ டறைந்துகொண்டு
தருமர் வயிறெறிந்து தரையிற் புரண்டழுது
என்னசெய்வேன் வாள்விசயா என்று மிகவழுதார்
அந்நேர வேளையிலே அரிராம ரேதுசெய்தார்

## ஸ்ரீகிருஷ்ணர் வயித்தியனாய் வருவது.

பாராளுந் தருமரின் பரிதாபம் பார்த்துமல்லோ
எல்லை யளந்தவர் எம்பெருமா ளப்போது
எழுப்பிவிட வேணுமென்று எம்பெருமாள் தானெழுந்து
மாயன் பெருமாள் மனமகிழ்ந்து வாரார்காண்
மடிந்த மடிப்புகளும் மாணிக்கத் தொப்பைகளும்

பொன்னால் மிதியடியும் பொற்றைக்கோல் கைப்பிடித்து
வயித்தியன் போலாக மருந்துபையைத் தோளில்வைத்து
வயித்திய னாகவே வடிவுகொண்டு வந்துமல்லோ
ஆரடா மன்னவனே அரவங்கள் கானகத்தில்
எவர்காணு மிங்கே யிரைச்சலிந்தக் கானகத்தில்
அப்போ துதருமர் அரசாளும் ராசதுரை
நாங்கள்-குருநாடு சீமை கூச்சல்வந்த தென்றுசொன்னார்
தருமரென்று சொல்லுவார்கள் நீர்தானோ தார்வேந்தா
ஆமையா நான்தான் அவதிப் படுகின்றேன்
மாண்ட தொருமன்னன் மன்னவனு ரார்காணும்

## வயித்தியற்குச் சொல்வது.

என்னோடே தான்பிறந்த எழில்விசய னர்ச்சுனன்காண்
மாண்டதொரு மன்னற்கிந்த மாதரென்ன வரிசையென்றார்
தாயாருங் குந்தியம்மாள் தங்கையவள் சங்கவதி
இவ்விருவர் தான்தவிர இயலான ஐயாவே
மற்றுமுள்ள மாதரெல்லாம் மன்னன்தன் தேவியென்றார்
சிவசிவா வென்று திருச்செவியில் கையைவைத்து
கண்மூன்று மில்லையோ கயிலாச நாதருக்கு
என்று வுலகளந்த எம்பெருமாள் மனமுருகி
வானவர்கள் தேவருக்கும் வயித்திய னன்காணும்
கதண்டுகொட்டி மடிந்தவரைக் கடுகவெழுப் பித்தருவேன்
இறந்ததொரு மன்னவனை யெழுப்பிவிடு வோமாகில்
நமக்கு-என்ன கொடுப்பீர்காண் என்றார் பெருமாளும்

## தருமர் சொல்வது.

அப்போது தருமரவர் அதிக மனமகிழ்ந்து
எப்படியும் நீரே யெழுப்பிவிட்டீ ராமாகில்
அண்டங் குருநாடும் அடங்கலும் உம்மதென்றார்
அப்படிக்குச் சொன்னால் ஆகாது ஐயாவே
எழுதித் தரவேணும் என்றாரே எம்பெருமாள்
தரும முடியான் தரும ரெடுத்துரைப்பார்
அங்கரி நாடும் ஐந்துபங்காய்ப் பங்குமிட்டு

நாலுபே ருடையபங்கை நானெழுதித் தாரேனிப்போ
வில்லாளி பார்த்தன் விசயன் பிழைத்தாக்கால்
அவனைப்பித் தந்தாலே ஐயாநீர் வாங்கிக்கொள்ளும்
எல்லை யளந்தவர் எம்பெருமாள் தான்கேட்டு
சந்தோஷப் பட்டுத் தன்மனதில் தானடக்கி
மதுரை நகராளும் மாது முகம்நோக்கி
உன்-பத்தாவை நானெழுப்பிப் பைங்கிளியே தாரேனே
எனக்கென்ன நீர்தருவீர் என்றாரே யெம்பெருமாள்
அப்போது அல்லியரும் ஆரணங்கு மேதுசொல்வாள்
தன்பரிசை நாடும் தரணிபதி யாயிரமும்
மன்பரிசை நாடும் மதுரைபதி யாயிரமும்
அந்நகரி நாடும் அடங்கலு முன்னுதென்றாள்
அப்படிக்குச் சொன்னால் ஆகாது ஆரணங்கே
எழுதித் தரவேணும் என்றாரே யெம்பெருமாள்
எழுதிக் கொடுத்தாளே இளங்கொடியா ளல்லியரும்
அப்போது எம்பெருமாள் அதிகமனம் பூரித்து
ஆயரு மப்போது அர்ச்சுனரைச் சுற்றிவந்து
வளையத் திரைபோடும் என்றாரே மாயவரும்
வளைத்துத் திரைநடுவே மன்ன ரிருவரையும்
எடுத்து நிறுத்துமென்றார் எம்பெருமாள் மேகவண்ணர்
எடுத்தி நிறுத்தினார் இயல்பெரிய மன்னவரை
பாலுடன் தேனும் பசுவின்நெய் வேணுமென்றார்
அப்படியே கொண்டுவந்து கொடுத்தார்க ளப்போது

## வயித்தியர் சொல்வது.

ஒக்க வளர்த்தி உலகளந்த மாயவரும்
காயம்பட்ட மேனியெல்லாங் கையாலே தான்தழுவி
கால்வேறாய் கைவேறாய் கடுகக் கிடத்திவைத்து
எமலோகம் போனவுயிர் இட்டுவந்தே னிப்போது
வந்ததொரு சீவன் வைகுண்டம் போகுதுகாண்
தருவித்துப் பார்த்தேனே தக்கவில்லை யென்னசெய்வேன்
என்னால் முடியாது எடுத்தடக்கிக் கொள்ளுமையா

எடுத்தடக்கிக் கொள்ளுமையா என்றல்லோ எம்பெருமாள்
எழுந்து நடந்தாரே ஏமாற்றப் பார்த்தாரே
அப்போது தருமர்கண்டு அவர்பின்னே தானடந்தார்
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் பின்னடந்தாள்
ஓட்டம் நடையுமாக ஓடினர் மாயவரும்
மாயவர் முன்னோட மாதருமர் பின்னோட
பின்னோடி வந்தாளே பெண்பெருமா ளல்லியரும்
பின்னோடி வந்தவுடன் பெருமாளும் நின்றலவோ
மற்று மொருநினைவாய் மாயவரு மேதுசொல்வார்
பெண்டுகளைப் பார்த்தால் பொறுக்கமுடி கூடாது
கணவன்மேற் சண்டைக்குக் கானகத்தில் வந்தாளே
புருஷன்மேற் படையெடுத்துப் போர்புரிய வந்தாளே
ஆகையாற் சீவனது அவ்வுடலிற் றக்கவில்லை
அல்லியல்லி யென்றுசொல்லி ஆவி துடிக்கிறது
வாள்விசய னர்ச்சுனரை வகையொன்றும் பண்ணுமல்
என்றைக்கும் நேசமா யிருக்கிறே மென்றுசொல்லி
நிச்சயமாய்ச் சொன்னல் நிசமா யெழுப்பிடுவேன்
என்று வைத்தியரு மெடுத்துரைக்க அல்லியரும்
எங்கள்-ஆரு யிரவர் அவர்களின் தம்மாணை
அங்கயற் கண்ணம்மை அவளுடைய சீர்பாதம்
என்-சீவனுள்ள காலமெல்லாம் தீண்டே னர்ச்சுனரை
என்றுசொல்ல மாது எம்பெருமாள் சம்மதித்து
சோர வளநங்கை சுபத்திரையைத் தான்பார்த்து
நீசொல்வ தென்னவென்றூர் நேரிழையு மப்போது
எங்கள்-அண்ணன்மே லாணையது அவரைநான் தீண்டவில்லை
அண்ணனென்றல் யார்காணும் என்று ரரிராமர்
பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பச்சைமா லச்சுதர்காண்
நீஇட்ட தோராணை எனக்குமுக பாடமல்லோ
எழில்சுடர் மணிகடகத் திருக்கின்ற பூதமதை
விட்டுவிட்டீ ராமாகில் விசய னெழுந்திருப்பான்
மாட்டேனென்று சொல்லி மறுத்தாள் சுபத்திரையும்
ஆணை மறுத்தாளே ஆரணங்கு சுபத்திரையும்

பிறவா முடிதரித்த பெண்பெருமாள் தான்கேட்டு
கோபந் தணலாகிக் கொம்பனையா ளப்போது
விடுகிறயோ யில்லையோ வேல்பொருதுங் கண்ணாளே
உன்-ஒருத்திக்கு மன்னன் உயிரிழந்து போனக்கால்
நாங்கள்-அத்தனைப் பேரும் அருஞ்சிறையா யாவோமடி
என்றுசொல்லி யர்ச்சுன ராசனைத் தானெழுப்ப
பூதத்தை விட்டுவிட்டாள் பொற்கொடியாள் சுபத்திரையும்

## வயித்தியனாகிய கிருஷ்ணன் எழுப்புதல்.

அப்போது எம்பெருமாள் ஆக மிகக்குளிர்ந்து
அர்ச்சுன ராசன்றனை ஆண்டவருஞ் சுற்றிவந்து
தட்டி யெழுப்பினர் தனஞ்சயனா ரர்ச்சுனனை
வாழ்த்தி யெழுப்பினர் மாயவனா ரர்ச்சுனனை
அண்ணருடையபாதம் அடிவணங்கித் தெண்டனிட்டான்
வாரி யெடுத்து மார்போடே தானணைத்து
நீர்-வைகுண்டம் போனீரோ வாள்விசயா அர்ச்சுனரே
ஆகாயம் போனீரோ அன்பான போர்விசயா
என்று-கட்டி யணைத்துக் கனிவாயை முத்தமிட்டு
தம்பியென் னையாவெனத் தருமருஞ் சொல்லிக்கொண்டார்
அப்போது வாள்விசயன் அருகிருந்த மாதாவை
கண்டு எழுந்து காலை யர்ச்சுனனும்
குந்தியம்மாள் தன்பாதம் கொற்றவனுந் தெண்டனிட்டான்
குந்தியம் மாள்தானும் கொற்றவனைத் தானெடுத்து
வாழ்த்தி விடைகொடுத்து வாழ்ந்திருப்பா யென்றுசொல்லி
கட்டி யணைத்துக் கனிவாயை முத்தமிட்டாள்
வெற்றி மதயானை வீம னவன்பார்த்து
விசய னர்ச்சுனரை வேல்பொருதுங் கண்ணாளன்
அவன்-கட்டி யணைத்துக் கனிவாயை முத்தமிட்டு
வேல்பொருதுங் கண்ணா விசயாநீ ரெங்குபோனீர்
சீனிச் சர்க்கரையே செல்வமே யெங்குபோனீர்
என்றுசொல்லி வீமன் இருந்தான் மனமகிழ்ந்து
நகுல சகாதேவ ராசமுடி மன்னவர்கள்

அண்ணாவே யென்று அர்ச்சுனரைக் கட்டிக்கொண்டார்
பொங்கி மனங்குளிர்ந்து புகழ்வேந்தர் தாமிருந்தார்
மைந்தன் புலந்திரனும் மன்னவனு மப்போது
அர்ச்சுனனார் பாதம் அடிவணங்கித் தெண்டனிட்டான்
தெண்டனிட்ட மைந்தனை தேர்விசயன் தானெடுத்து

## அருச்சுனன் புலந்திரனைக் கேட்டது

வாழ்த்தி யெடுத்து மடியின்மேல் வைத்துகொண்டு
முகத்தோடே முகம்வைத்து முத்தமிட்டுப் பாலகனை
என்-தங்க முடிபெற்ற தனையா புலந்திரனே
ஏன்வந்தீ ரிங்கேயென்று எழில்விசயன் கேட்கலுற்றான்

## புலந்திரன் சொல்வது

அப்போது புலந்திரனார் அர்ச்சுனற் கேதுசொல்வான்
குருநாட்டில் தானிருந்து கொற்றவரே நீங்களுந்தான்
மதுரைக்கு நீங்களுந்தான் வந்தீர்கள் மன்னவரே
ஐயாவே பவளத்தே ரப்போது நான்கேட்டேன்
பவளத்தேர் கொண்டுவாரே னென்று பரிவாக
மூன்றுறு நாளைக்குள் முடித்துதாரே னென்றீரே
பதினாறு நாள்வரைக்கும் பார்த்தோம் வரவில்லை
எங்கள்-மாதுநல்லா ளல்லியரும் வந்தாள் படையெடுத்து
அந்த-தரும முடியாளும் தண்டு தளமெடுத்து
சேராம்பூ சீமைக்கு சென்று வரும்போது
எங்களையர் போனவழி இதுதானோ வென்றுகேட்டேன்
ஐயரென்று சொல்லவே அடித்தாளே வாய்மேலே
அப்படிக் கோபமதாய் அல்லியரும் வரும்போது
சேராம்பூ கானகத்தில் சென்றோம் தளத்தோடே
இப்படி யாகவே இருக்குமந்த வேளையிலே
சேராம்பூ கானகம் சேவிக்கும் வேடர்வந்தார்
அந்த-வேடுவரை யப்போது வேந்தர்கள் தான்பிடித்தார்
மாது இருக்கும் மயிலணையாள் கூடாரம்
கொண்டுவந்து விட்டார்கள் கொற்றவரும் வேடுவரை
மதுரைநக ராளுமெங்கள் மாதுநல்லா ளப்போது

நீங்கள்-ஆர்காணு மென்று அல்லியரும் கேட்கலுற்றாள்
சேராம்பூ கானகம் சேவிக்கும் வேடரென்றார்
யாருடைய சீமையென்று அருங்கிளியாள் கேட்டாளே
பவளக் கொடியாளும் பைங்கிளியாள் சீமையிது
என்றிந்த வேடுவரும் ஏந்திழைக்குச் சொன்னார்கள்
அப்போது மாதுநல்லாள் அல்லியருஞ் சொல்லலுற்றாள்
மாதுநல்ல கன்னியற்கு மணமாலை யாச்சுதடா
பதினாறு நாளாச்சு பைங்கிளியை மாலையிட்டு
ஒக்க வொருவன் உயிர்த்தோழ னாகவந்தான்
அவருக்கு மணமாலை யாச்சுது அம்மாவே
என்றது கேட்டாள் இளங்கொடியா ளல்லியரும்
கதும்பி யெழுந்திருந்தாள் காட்டானை போலாக
கோபந் தணலாகி கொம்பனையுந் தானிருக்க
கதண்டு குளவிகளும் கானகத்தை விட்டெழும்பி
யானை குதிரைகளை அடல்பெரிய சேனைகளை
கொட்டி மடித்ததுகள் கொற்றவர்கள் யாவரையும்
மதுரை துரைச்சி மைந்தனைத் தப்பவிட்டு
அத்தனைச் சேனைகளும் அறவே மடிந்தார்கள்
செத்து மடிந்தபே ரத்தனையுந் தான்பார்த்து
ஈசுவரரே பார்வதியே யென்றே புலம்பலுற்றாள்
மெத்த விசாரமாய் மெல்லியருந் தானிருந்தாள்
சேராம்பூ ராசாவின் தேசத்துத் தோட்டிவந்தான்
நீ-எந்தவூர்த் தோட்டி யென்றாளென் தாயாரும்
குருநாட்டுச் சீமைக்கு கொற்றவர்க்கு ஓலைகொண்டு
தருமருக்குத் தம்பியராம் தனஞ்சயராம் அவர்பேரும்
சேராம்பூ கானகத்தில் சென்றுமடிந் தாரங்கே
தருமருக்கு வோலைகொண்டு சாம்புவனும் போகிறேனென்
அப்போது மாதுநல்லாள் அலறி மிகவழுதாள்
அடித்துப் பிரண்டழுதாள் அன்ன நடையாளும்
என்செய் வேனென்று யேங்கி யழுதாளே
குருநாடு சீமையில் கொற்றவரு மங்கிருந்து
எல்லோரும் வந்தார்கள் இரைச்சலிட்டுத் தானெழுந்தார்

மாண்ட விடத்துக்கு மன்னர்க ளெல்லோரும்
அதினாலே யிங்குவந்தோம் ஐயாவே யென்றுசொன்னான்
பாலன்சொன்ன வார்த்தையது பார்த்தீபன் கேட்டானே
மெத்த வதிசயமாய் வேந்தருந் தாமிருந்தார்
பெண்களெல்லா மப்போது பெருக்க மனமகிழ்ந்து
அர்ச்சுனனார் தேவிமா ரனைவோருந் தானெழுந்து
தரும ரின்பாதஞ் சாஷ்டாங்க மாய்பணிந்தார்
தெண்டனிட்ட மாதர்களைச் சீர்பெறவே வாழ்த்தினார்
தம்பிமார் வந்து தாளிணையைப் போற்றிசெய்தார்
தெண்டனிட்ட தம்பியரைச் சீர்பெறவே வாழ்த்தினார்
அப்போது அல்லியரும் அர்ச்சுனரைத் தான்பார்த்து
பொங்கி மனங்குளிர்ந்து பொற்கொடியா ளேதுசொல்வாள்
மூன்றாறு நாளையிலே முடிமன்னா வாறேனென்றீர்
பதினாறு நாள்வரைக்கும் பார்த்தேன் வரவில்லை
யென்றுதண்டு தளமெடுத்து சண்டைக்கு வந்தோமிங்கே
வந்த யிடத்திலிங்கு மாண்டு கிடந்தீரே
அலைகடலிற் பள்ளிகொள்ளும் ஆயரின் மாயமிது
இந்தவிதம் பண்ணினால் இளங்கொடியு மேதுசெய்வேன்
இது-மாயவனார் செய்த மதிமயக்க மென்றுசொன்னாள்
இப்படிப் பேசிக்கொண்டே யிருக்குமந்த வேளையிலே

## தருமர்முதல் யாவரும் அரண்மனைக்குப் போகுதல்

அப்போது தருமதுரை அதிக மனமகிழ்ந்து
அந்த-பட்டணத்தை நோக்கிப் பரிவுடனே தானடந்தார்
எல்லோருங் கூடியே ஏகோபித்துத் தானடந்தார்
போகிறார்க ளெல்லோரும் பொங்கி மனங்குளிர்ந்து
போனார்கள் யாவருமாய் பொற்கொடியா ளரண்மனைக்கு
பாராளுந் தருமருக்கு பவளக் கொடியாளும்
மாணிக்கச் சிங்காதனம் மன்னருக்குச் சோடித்து
குருநாட்டை யாளுகிற கொற்றவரே யிருமென்றாள்
வெற்றி மதயானை வீமதுரை ராசருக்கு
நவரத்ன சிங்காதனம் நலமுடனே சோடித்து

இதுமே விருமென்று ளிளங்கொடியா ளப்போது
நாமக் கொடியுடைய நகுல னவன்றனக்கு
சிங்கா தனங்களிட்டு சிறப்பாக வீற்றிரென்றுள்
சாஸ்திரக் கொடியுடைய சகாதேவ ராசருக்கு
பொன்னு லிழைத்துவைத்த பொற்சிங்கா தனம்போட்டு
இதுமே விருமென்று ளிளங்கொடியா ளப்போது
புலந்திர ராசனுக்கு போட்டார்சிங் காதனங்கள்
எடுத்து மவள்வைத்து இருமையா தம்பியரே
என்று மவள்சொல்லி இளங்கொடியு மப்போது
விசயனுர் தேவியற்கும் விதம்விதமாய் வார்த்தைசொல்லி
அவரவர்க்குத் தக்கதொரு ஆசனங்கள் போட்டுவைத்தாள்
அப்போது-தேவிமா ரெல்லாருந் திறமுடன் தானிருந்தார்
பார்த்தீப னர்ச்சுனனும் பள்ளியறை யுட்புகுந்தான்
அப்போது-பாராளுந் தருமதுரை பார்த்து மனமகிழ்ந்து
இந்த-மாதுநல்ல கன்னிகையும் மரியாதை யுள்ளவள்காண்
இறப்புக்கும் பிறப்புக்கும் இனியொருபெண் வேணுமோ
என்றுசிங் காதனத்தி லிருந்தார் மனங்களித்து
மதுரை துரைச்சியவள் மனம்பொருந்தி யல்லியரும்
மாதின்றன் பட்டணம் மகாசேனே யுள்ளதெல்லாம்
அரண்மனே உப்பரிகை ஆஸ்தான மண்டபமும்
பள்ளி யறையழகும் பார்க்கமுடி போகவில்லே
பள்ளி யறையிலே பவளங்க ளிருக்கிறதும்
பவளப் புதுமைகளேப் பார்த்தாளே அல்லியரும்
இடம்பெரிய வாசலது எழுநூறு காதவழி
தூணுக்குத் தூணுமங்கே தொண்ணூறு காதவழி
ஆருயிரங் காதவழி அழகான வாசலது
பவளத்தால் செப்பனிட்டுப் பாங்கா யலங்கரித்து
பொற்றூணும் நற்றூணும் புட்பரா கத்தூணும்
குளிர்ந்தசந்த னத்தூணும் குங்கும நற்றூணும்
தூணுக்குத் தூணுமங்கே தூங்கா விளக்கெரிய
இட்டிருக்கு மாதனமும் யிலங்குசிங் காதனமும்
போட்டிருக்கு மாதனமும் பொன்னுலே யாதனமும்

வாடாத தாமரையும் வந்து நிழல்காட்ட
முத்து மரகதமும் முழுப்பவளத் தூணுமங்கே
தங்கத்தாற் பொம்மைகளும் தந்தநாற் காலிகளும்
செம்பொன்னாற் சிலைகளுமே செம்பவள மாலைகளும்
வாழைக் கமுகுகளும் வண்ணபலாச் சோலைகளும்
சேரவே நாட்டி செம்பவளத் தூணிறுத்தி
நின்ற விடந்தோறும் நீலநிறக் கண்ணாடி
கண்ட விடந்தோறும் கண்ணாடி மாலைகளும்
காடை விளக்குகளும் கைவிளக்குந் தேர்விளக்கும்
ஏணி விளக்குகளும் எண்ணாத தேர்விளக்கும்
பவளப் புதுமைகளைப் பார்க்க முடியாது
கண்ட விடந்தோறும் கனத்த பவளமாலை
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் நாயகியும்
எங்கும் பவளமா யிருக்கு தரண்மனைக்குள்
அல்லிப் பெருமாளும் ஆரணங்கு பார்க்கையிலே
எங்கும் பவளநிற மென்ன இலங்கிறது
சோதி யழகுமவள் துய்ய முகத்தழகும்
வடிவழகு மொப்பனையும் வையகத்திற் கண்டதில்லை
இந்த-மாதினுட வுபசரணை மரியாதை தான்பார்த்து
மதுரைதுரை யல்லியரும் மனங்குளிர்ந்து அப்போது
பவளக் கொடியாளை பைங்கிளியைத் தான்பார்த்து
வாருமிங்கே யம்மாவென்று வார்த்தை மிகப்பேசி
பாஞ்சாலன் பெற்றெடுத்த பைங்கிளியாள் துரோபதையும்
அலைகடலிற் பள்ளிகொள்ளும் அச்சுதனார் தங்கையரும்
கொம்பனைமா ரெல்லோரும் கூடிவிளை யாடினார்கள்
மாமியார் குந்தியம்மாள் மருமகளைத் தான்பார்த்து
என்-கண்ணான மங்கையரே கட்டழகி வாருமென்று
மார்போடே தானணைத்து மருமகளை முத்தமிட்டு
திஷ்டிக் கழித்தாளே தேன்மொழிக் கப்போது
எட்டு நாளங்கே இருந்தார்கள் யாவருமாய்
விருந்துகள் பண்ணியே வெகுமானந் தான்கொடுத்து
பவளத்தால் பல்லக்கு பாலித்தாள் யாவருக்கும்

—

## பவளக்கொடியாள் புலந்திரனுக்குச் சொல்லுதல்.

பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
மைந்தன் புலந்திரனை மடிமே லெடுத்துவைத்து
என்-கண்ணை கண்மணியே காண்டீபர் தன்மகனே
குருநாட்டை யாளுகிற கொற்றவர் தன்மகனே
தங்க முடிபெற்ற தனஞ்சயனார் புத்திரனே
நவரத்னப் பொன்முடி நாயகியாள் தன்மகனே
என்று-கன்னத்தோ டேயணைத்து கனிவாயை முத்தமிட்டு
வாரி யணைத்து மடிமீதில் வைத்துக்கொண்டு
மதுரைநா டாளுகிற மாது துரைமகனே
என்-தங்கக் களஞ்சியமே தார்வேந்தே தம்பியரே
உந்தனைத் தொட்டு உண்மைபெற வாச்சுதையா
நீ-பவளத்தேர் வேண்டியே பத்தாவைக் கேட்டதினால்
பத்தாவு மிங்குவந்து பாவித்தார் கானகத்தில்
கானவேட்டை யாடிவரக் கண்டுவிட்டார் கானகத்தில்
கதண்டுகொட்டிச் செத்தவர்போற் காவலர் மடிந்துவிட்டார்
அங்கே யிருந்ததோழன் அழுகிறதை நான்கேட்டு
தோழியைப்போய் வாருமென்று சொன்னேனே ஐயாவே
பாங்கியர்க ளோடிப்போய்ப் பார்த்துவந்து சொன்னார்கள்
ஆரோ தெரியாது அரசர்படை வென்றார்போல்
காண்கிறது தாயே கடுகெனவே போகவேணும்
என்றவள் சொல்ல ஏறினேன் தண்டிகைமேல்
அப்போது போயிறங்கி அவரைநான் பார்த்தேனப்பா
மார்பின் சரப்பளியை வாங்கியே நான்போட்டேன்
தாதியரைக் கட்டுமென்று தண்டிகைமேல் வந்துவிட்டேன்
கட்டியே தாதியருங் கடுகியே வோடிவந்தார்
மார்பின் சரப்பளியை வாங்கிவரச் சொன்னேனையா
தாதியவ ளோடிப்போய் சரப்பளியைக் கேட்டாக்கால்
தருகிற தில்லையென்றார் தனஞ்சயனு ரப்போது
தாதியவள் ஓடிவந்து தருவதில்லை யென்றாரென
மாதரோ டரண்மனைக்கு வந்துவிட்டேன் தம்பியரோ
கொலுமுகச் சாவடியில் கொம்பனையும் நானிருந்தேன்

அன்ன வடிவெடுத்து அங்குவந்தார் கொலுமுகத்தில்
அவர்-ஆடலும் பாடலும் அதிசயத்தை நான்பார்த்து
கூவுகிற வோசைகளும் கூவுகிற நேர்த்திகளும்
கண்டு மகிழ்ந்துநான் கையிற் பிடித்தேனே
அன்னமென்று சொல்லி அணைத்துப் பிடித்தேனையா
தாதியரை நானழைத்து தையலவள் கைகொடுத்து
கூண்டி லடையுமென்று கொற்றவனே சொன்னேனையா
அப்போது-அன்ன வுருமாறி அர்ச்சுன ராணுரையா
மன்னவனு ரர்ச்சுனரும் மதியைக் குலைத்தாரே
மணமாலை சூட்டினுர் மன்னவரே தம்பியென்ருள்
என்-அன்னக் களஞ்சியமே அழகுமணிப் பொக்கிஷமே
என்-பத்தாவின் புத்திரனே பார்வேந்தர் தன்மகனே
குருநாட்டை யாளுகிற் கொற்றவனுர் தருமதுரை
வெற்றி மதயானை வீமமக ராசரையும்
நாமக் கொடியுடைய நகுல னவன்றனையும்
சாஸ்திரக் கொடியுடைய சகாதேவ ராசனையும்
ஐவரைப் பெற்றெடுத்த அம்மாமி குந்தியம்மாள்
மதுரைநா டாளுகிற மன்னர் துரைச்சியரும்
பாஞ்சால நாயகியாள் பத்தினியாள் தேவியரும்
மாயவ னுர்தங்கை மங்கை சுபத்திரையும்
விசயனுர் தேவிகள் மெல்லியர்கள் யாவரையும்
என்-கண்குளி ரப்பார்க்க வந்ததே கண்மணியே
இல்லாதே போனுல் இவர்களை யறியேனையா
என்றவள் சொல்ல எல்லோருந் தான்கேட்டு
சந்தோஷ மாகவே தையலருங் கேட்டார்கள்
பொங்கி மனங்குளிர்ந்து பூவையரும் வீற்றிருந்தார்

## பவளக்கொடியாள் புலந்திரனுக்குப் பவளத்தேர் கொடுத்தது.

பங்கயஞ் சீர்கண்ணுள் பவளக் கொடியாளும்
பவளத்தே ரொன்று பாலனுக்குச் செப்பனிட்டு
மெத்தவி னேதமாய் வெகுவா யலங்கரித்து

வேந்தன் புலந்திரற்கு வேண்டியது தான்கொடுத்து
பவளத்தேர் மேலே பாலகனை யேற்றிவைத்தாள்
திஷ்டி கழித்தாளே செல்வன் மனமகிழ
மாமியார் குந்தியம்மாள் மயிலணைக் கப்போது
பாதஞ் சரணமென்று பணிந்தாளே தேன்மொழியும்
மந்தாரக் குந்தியம்மாள் மருமகளைத் தானெடுத்து
கட்டி யணைத்துக் கனிவாயை முத்தமிட்டு
என்றுஞ் சிரஞ்சீவியா யெந்நாளும் வாழ்ந்திருப்பாய்
என்று-வாழ்த்தி விடைகொடுத்து வலப்புற மாயிருக்க
அப்போது-பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
பாராளுந் தருமருக்குப் பாதஞ் சரணமென்றாள்
சாஷ்டாங்க மாகவே தையலருந் தான்பணிந்தாள்
வாழ்த்தி விடைகொடுத்தார் மகராச ரப்போது
வெற்றி மதயானை வீமதுரை ராசருக்கு
மாதுநல்ல மங்கையரும் வணங்கியே தெண்டனிட்டாள்
வாழ்த்தி விடைகொடுத்தார் மதவீம ராசாவும்
நகுல சகாதேவ ராசமுடி மன்னருக்கும்
மைத்துனர்க ளிருவருக்கும் மாது சரணமென்றாள்
என்பத்தா வின்தேவி எல்லோர்க்கும் சரணமென்றாள்
தருமா புரியாளுந் தனஞ்சயனா ரப்போது
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாட்கு
வேண்டிய வுடுப்புகளும் வேணதுயி லாடைகளும்
பொன்னா லலங்கரித்தப் பொற்பவளத் தண்டிகையும்
சந்தோஷ மாகத் தையலற்குத் தான்கொடுத்தார்
எந்நாளுஞ் சுகமா யிருந்தரசு ஆளுமென்றார்
அப்போது விடைகொடுத்தார் ஐவரு மங்கெழுந்தார்
விசயரந்த அர்ச்சுனரை மெல்லியருந் தான்பார்த்து
குருநாட்டுச் சீமைக்கு கொற்றவரே போகிறீரோ
பதினாறு தன்வருடம் பாவி சிறையிருந்தேன்
ஒன்று மறியாமல் உத்தமியும் நானிருந்தேன்
கோடானு கோடியுண்டு கொம்பனையைக் கேட்டவர்கள்
மாலையிட வந்தவர்கள் மட்டுமித மில்லையையா

ஆரையுந் தீண்டேனென் றருஞ்சிறையில் நானிருந்தேன்
ஏரெடுத்துப் பார்த்தவர்கள் ஏனென்றுங் கேட்டதில்லை
ஆருமில்லை வையகத்தில் அர்ச்சுனரே யென்றுசொல்லி
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
மணமாலை யிட்டீரே மாயவனார் தன்னருளால்
பதினாறு நாளையிலே பத்தாவே யெந்தனையும்
செய்யாத கோலமெல்லாஞ் செய்துவிட்டீ ரர்ச்சுனரே
குருநாட்டுச் சீமைக்குக் கொற்றவரே போகிறீரோ
என்றுசொல்லி கன்னியரும் ஏங்கி முகம்வாடி
பொங்கி யழுகிறதும் பொற்கொடியா ளப்போது
மயங்கி யழுகிறதும் மண்மேல் விழுகிறதும்
பார்த்தா ரர்ச்சுனரும் பார முடியாளை
மயங்கி யழுகிறதை மன்னவருந் தான்பார்த்து
கட்டி யணைத்துக் கனிவாயை முத்தமிட்டு
மாணிக்கச் சல்லாவால் மாதர்தன் கண்துடைத்து
அழவேண்டிய காரியமேன் அன்னப் பசுங்கிளியே
குருநாட்டுச் சீமைக்குக் கொற்றவனார் தன்னுடனே
கூடி யுறவாடி கொம்பனையே நானேகி
எல்லாரும் பட்டணஞ்சேர்ந் திருக்குமந்த வேளையிலே
நானும் வருவேன் நாயகமே அஞ்சாதே
தங்குவனோ பூமியிலே தரிப்பேனோ அங்கோநான்
என்-சோதி மணிவிளக்கே துய்ய விளம்பிறையே
தேனே மணிவிளக்கே தெள்ளு மணியாளே
உன்னைப் பிரிந்துநான் உலகி லிருப்பேனோ
கடுகவரு வேண்டிஎன் கட்டழகி கண்மணியே
நான்-ஓடி வருவேண்டி ஒருநொடிக் குள்ளாக
காலால் நடவாமல் காற்றாய் வருகிறண்டி
அஞ்சாதே யென்றுமே அர்ச்சுனனுஞ் சொன்னானே
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
அப்போது ஏதுசொல்வாள் அன்னப் பசுங்கிளியாள்
நான் தங்கி யிருப்பேனோ தரிப்பேனோ உன்னை விட்டு
என்செய்வேன் வாள்விசயா என்றழுதுக் கொண்டிருந்தாள்

இந்தக் கருமத்துக்கோ என்னைவந்து மாலையிட்டீர்
இப்படி யென்றறிந்தால் இணங்கேனே மன்னவனே
எனக்கென்ன கதியாச்சு யென்றே யழுதுகொண்டு
ஈசுவரரே, பார்வதியே எனக்கென்ன விதிவிதித்தீர்
அண்ட முலகளந்த ஆயர் பெருமாளே
எல்லாருங் கூடியே யிருந்தீரோ யெந்தனுக்கு
இந்தக் கருமத்துக்கு இனியென்ன செய்வேனையா
என்றுசொல் லிமாது யிளங்கொடியாள் தானழுவே
காண்டீப னர்ச்சுனனுங் காளையவ னப்போது
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளே
தங்க முடிதரித்த தனஞ்சய நாகமே
நான்-இங்கே யிருப்பேண்டி இளங்கொடி நாயகமே
எனக்குப் பெரியவர் இயலான வீமராசர்
அவருக்கு மூத்தவர் அழகான தருமராஜர்
புறப்படாமல் நானிருந்தால் பொல்லாப்புக் கிடமலவோ
பொறுக்கமுடி கூடாது புத்தியுள்ள நாயகமே
அதனாலே பெண்ணரசே அவரோ டுறவாக
போய்வாரேன் கண்ணேயென்று புகன்ற னிளவிசயன்
அப்போது மாது அருங்கிளியு மேதுசொல்வாள்
கடுகவரு வேனென்று கட்டழக ரெந்தனுக்கு
தேவரீர் நிச்சயங்கள் செய்து கொடுமென்றாள்
இல்லாமற் போனால் இனிநம்பே னென்றுசொன்னாள்
காண்டீப னர்ச்சுனனுங் காளையவ னேதுசொல்வான்
தருமர்மே லாணையிட்டுத் தையலர்க்குத் தான்கொடுத்தான்
இனியானால் நம்புவையோ என்ற னிளவிசயன்
பங்கயஞ் சீர்கண்ணாள் பவளக் கொடியாளும்
மனது குளிர்ந்தாளே மாதுநல்லாள் கன்னியரும்
அர்ச்சுனனு மப்போது அதிகமனம் பூரித்து
மாதுகையில் விடைவாங்கி மன்னன் நடக்கலுற்றான்
அங்கே விடைபெற்று ஐவருந் தானடந்தார்
மதுரை திசைநோக்கி வாரார் துரைகளெல்லாம்

## ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியினுடைய பாளையத்தை யெழுப்பி விடுதல்.

அண்ட முலகளந்த ஆயர் பெருமாளும்
மதுரை துரைச்சியின் மகாசேனை யுள்ளதெல்லாம்
குளவி கதண்டுகள் கொட்டி மடிந்தவரை
சேனை பரிவாரம் சேனைக ளுள்ளதெல்லாம்
யானை குதிரைகளை யளவற்ற சேனைகளை
மன்னர் துரைமக்கள் மகாசேனை யுள்ளதெல்லாம்
தட்டி யெழுப்பிவிட்டார் தயாநிதி எம்பெருமாள்
தூங்கி விழித்தாற்போல் துரைமக்கள் தானெழுந்தார்

## தருமர் முதலிய யாவரும் அவரவரிடஞ் செல்லுதல்.

எழுப்பிவிட்டு மாயவனு ரேகினு ரப்போது
தருமா புரியாளும் தருமதுரை யானவரும்
குந்தியம்மாள் தன்னுடனே கொற்றவனுர் தேவிகளும்
எல்லோருங் கூடியே ஏகி வழிநடந்தார்
அல்லிநல்லாள் பாளையத்தில் வந்தார்க ளப்போது
செத்து மடிந்ததொரு சேனைக ளெல்லோரும்
எப்போதும் போலவே யிருக்கவே கண்டார்கள்
மதுரை துரைச்சியும் மனங்குளிர்ந்தா ளப்போது
பாளையங்க ளுள்ளதெல்லாம் பயணங்க ளாச்சுதப்போ
யானை குதிரைகளும் ஆள்பெரிய சேனைகளும்
கொடிகள் கொடிச்சீலை குடைகளுஞ் சூழந்துவர
யானை குதிரையின்மேல் அடிபடுதே டங்காவும்
ஒட்டையின்மேல் நகபத்து ஓசை கிளம்புது
எக்காளஞ் சின்னம் எழில்பெறவே ஊதுது
பேரிகை டம்மாரம் பூமி யதிருதங்கே
அல்லிப் பெருமாளும் அழகு புலந்திரனும்
பாஞ்சாலி நாயகியாள் பத்தினியாள் துரோபதையும்
மந்தாரக் குந்தியம்மாள் மாமியுந் தான்கூட
யானையம் பாரியின்மேல் அனைவோரும் வீற்றிருந்தார்
பார்க்கமுடி போகவில்லை பைங்கிளியாள் ராணுவங்கள்

காடு செடிகளெல்லாம் கடுந்தண லாகுதங்கே
கல்லுகளும் முள்ளுகளும் கடுகுபொடி யாகுதங்கே
கருந்தூளுஞ் செந்தூளுங் கதிரோனைக் கப்புதங்கே
பாலையம் போகும்அந்த பயணத்தைத் தான்பார்த்து
காண்டீப னர்ச்சுனனும் காளையவர் தானினைந்தார்
இப்படிக்கு அதிசயமாய் இவள்வரக் காரியமேன்
இது-நமக்காக வந்தது நம்முயிரைக் கொல்லவல்லோ
மாயன் பெருமாள் மகாதேவர் கிருபையினால்
ஆயன் பெருமாள் அருளாளர் கிருபையினால்
நாம்-தப்பிப் பிழைத்தோமே தார்வேந்தர் தருமத்தினால்
பாராளுந் தருமதுரை பாக்கியத்தால் தப்பிவந்தோம்
இளங்கொடியாள் மாதருக்கு எதிரி யொருவரில்லை
தப்பாமல் தலையறுப்பாள் தாம முடியாளும்
பொல்லாத அல்லியவள் போருக்கு வல்லவள்காண்
மைந்தன்மே லாணைதனை மறந்தபாவி யென்றுசொல்லி
சத்தியந் தப்பிவிட்டார் தார்வேந்த ரென்றுசொல்லி
கழுமரத்தி லேற்றியென்னைக் கடுஞ்சிறையில் வைப்பாளே
என்று மனதினுள்ளே யெண்ணினா னர்ச்சுனனும்
அப்போது-எல்லோருங் கூடிக்கொண்டு ஏகி வழிநடந்தார்
அந்த-மதுரா புரியல்லி வாழ்வரசி பட்டணத்தில்
போனார்க ளைவருமாய்ப் பொற்கொடியா ளரண்மனைக்கு
அர்ச்சுனனார் தேவியர்கள் அல்லோரும் போய்நுழைந்தார்
மைத்துனர் தருமருக்கும் மற்றுமுள்ள மன்னருக்கும்
சிங்கா தனங்களைத்தான் சிறப்பாகச் சோடித்தாள்
குருநாட்டை யாள்தருமர் கூடவே தானிருந்தார்
ஐவரையும் பெற்றெடுத்த ஆரணங்கு குந்தியம்மாள்
பாஞ்சாலி நாயகியாள் பத்தினியாள் துரோபதையும்
மற்றுமுள்ள தேவியெல்லாம் வாருமென்று தானழைத்தாள்
அவரவர்கட் காசனங்கள் அல்லியரும் போட்டாளே
அப்போது-மூன்றுநா ளவ்விடத்தில் முடிமன்னர் தாமிருந்தார்
விருந்தமுது செய்துவைத்து மெத்த வுபசரித்தாள்
எல்லார்க்கும் வெவ்வேறா யீந்தாள் வெகுமானம்

வெகுமானம் பெற்றபின்பு விடைபெற்றுத் தாம்நடந்தார்
அப்போது-பாராளுந் தருமதுரை பாலகனைத் தானழைத்தார்
கட்டி யணைத்தாரே கனிவாயை முத்தமிட்டார்
என்-தங்கக் களஞ்சியமே தம்பி புலந்திரனே
நான்-போய்வாரேன் கண்ணே பொன்னின் புலந்திரனே
என்றுசொல்லி தருமரவர் இருவென்று ரப்போது
வெற்றி மதயானை வீமதுரை யேதுசொல்வார்
என்-அப்பா புலந்திரனே அல்லி மகனாரே
கட்டிக் கரும்பே காளை புலந்திரனே
போய்வாரேன் கண்ணே புலந்திர ராசாவே
என்றார் மதவீமர் இருமென்று ரப்போது
நாமக் கொடியுடைய நகுல ரவர்பார்த்து
கண்ணே புலந்திரனே காதலின் நாயகமே
குருநாடு சீமைக்குக் கொற்றவனே போய்வாரேன்
என்றவர் சொல்லி யிருமென்று ரப்போது
சாஸ்திரக் கொடியுடைய சகாதேவன் தான்பார்த்து
பொன்னு மணியே புலந்திர ராசாவே
தங்க மணியே தார்வேந்தர் புத்திரனே
குருநாடு சீமைக்குக் கொற்றவனே போய்வாரேன்
என்றவர் சொல்லி யிருமென்று ரப்போது
மந்தாரக் குந்தியம்மாள் மயிலனையா ளப்போது
புலந்திரனைத் தானெடுத்துப் பூரிக்க மனமகிழ்ந்து
ஐவர்கலி தீர்க்கவந்த அரும்பொன்னே கண்மணியே
குருநாட்டை யாளுகிற கொற்றவர்கள் தன்னுடனே
நான்-போய்வாரே னென்று புலந்திரனை முத்தமிட்டு
இருங்காணும் மன்னவனே யென்றுசொன்னாள் குந்தியரும்
அர்ச்சுனனார் தேவிமார் அனைவோரு மப்போது
நாங்கள்-யாவரும் போய்வாரோம் அதிரூப சித்திரமே
என்றுசொன்ன ரப்போது இயலான தேவிமார்கள்
காண்டீப னர்ச்சுனனுங் காளையவ னப்போது
மைந்தன் புலந்திரனை மன்னவனுந் தான்பார்த்து
அப்பா புலந்திரனே அருமையுள்ள கண்மணியே

போய்வாரே னென்றான் போர்விசய ராசாவும்
போரஞ்சா மன்னன் புலந்திரனுங் கூறுவான்
அண்ணாவே நீர்போனால் வாரதில்லை ஐயாவே
போனால் வருவதில்லை போய்வாரீ ரோவென்றான்
ஆணா லழகுமன்னன் அர்ச்சுனனுங் கூறுவான்
இந்நாளும் போலே இனியிருக்க மாட்டேனப்பா
கடுகி வருவேனப்பா காளை புலந்திரனே
நம்புவே னேயென்று நவின்றான் புலந்திரனும்
நம்பியிரு மென்று நல்விசயன் சொல்லினனே
அல்லியரைப் பார்த்து அர்ச்சுனனு மேதுசொல்வான்
பிறவா முடிதரித்த பெண்பெருமாள் நாயகமே
குருநாடு சீமைக்குக் கொம்பனையே போய்வாரேன்
அப்போது அல்லியரும் ஆரணங்கு தான்மயங்கி
கண்ணீர் சொரியவிட்டாள் கட்டழகி யப்போது
வேண்டாங்காண் மாதே விசாரப் படவேண்டாம்
மெய்யா வருகிறேன் மெல்லியரே நம்புமென்றான்
இந்நாளும் போலவே இராதேநீ யங்கேயென்று
போய்வாரு மென்று பொற்கொடியுந் தெண்டனிட்டாள்
மாது விடைகொடுக்க வாள்விசயன் தானெழுந்தான்
தருமரும் வீமரும் தானடந்தார் பொட்டெனவே
காடு செடிதாண்டி கரியமலை தான்கடந்து
பொல்லா வனங்கடந்து போய்ச்சேர்ந்தார் தருமாபுரம்
அவரவர்க ளாதினத்தில் அமர்ந்தார்கள் பஞ்சவர்கள்
இந்தக் கதைதன்னை இவ்வுலகிற் கேட்டவர்கள்
கேட்டோர் கிளைதழைத்துக் கீர்த்தியுடன் றாம்வாழ்க
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்.

வஞ்சி விருத்தம்

வாழிவாழி வானவர்-வாழிவாழி மாமறை
வாழிவாழி மாதவர்-வாழிவாழி வையமே.

பவளக்கொடிமாலை

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 26 | முன்னூறு | மூந்நூறு |
| 5,64 | 15,1 | வெண்ணை | வெண்ணெய் |
| 5 | 27 | அரவடம் | அரைவடம் |
| 7 | 24 | வணுந்திர | வணுந்தர |
| 9,49,50 | 6,30 & 32,16 | பொருத்தேன் | பொறுத்தேன் |
| 9 | 25 | குறையும் | குறைவும் |
| 11,54,93 | 7,10,7 | குந்தியற்கும் | குந்தியர்க்கும் |
| 14 | 32 | பதரி | பதறி |
| 15 | 4 | பிரந்தவளை | பிறந்தவளை |
| 15 | 26 | அண்ணணை | அண்ணலை |
| 20 | 18 | உரங்கேனே | உறங்கேனே |
| 23 | 23,24,25 & 26 | கரி | கறி |
| ,, | 24 | வருத்த | வறுத்த |
| 23,88,93 | 30,25,10 | அல்லியற்கு | அல்லியர்க்கு |
| 24,53 | 12,4 | சிறிப்பு | சிரிப்பு |
| 24 | 17 | பன்னிறு | பன்னிரு |
| ,, | 23 | விரித்துதரி | விரித்துதறி |
| 25 | 21 | வைத்திருந்தாள் | வைத்திருந்தான் |
| ,, | 24 | தாரவேந்தமார்பாட்டர் | தார்வேந்தர் பாட்டன் [மார் |
| 27 | 31 | அறிதந்த | அறிந்தந்த |
| 30 | 25 | தேய்பிரை | தேய்பிறை |
| 31 | 13 | விட்டார்போல் | விட்டாற்போல் |
| 38 | 8 | நந்நகரம் | நன்னகரம் |
| 39 | 19 | முருக்கழகும் | முறுக்கழகும் |
| 40 | 24 | இலட்சிமி | இலக்ஷ்மி |
| 52 | 25 | மகாகுத்தி | மிகக்குத்தி |
| 53 | 14 | சுருக்காய் | சுறுக்காய் |
| 55 | 4 | அன்னேரம் | அந்நேரம் |
| ,, | 10 | புகழ்பெறற | புகழ்பெற்ற |
| 59,61,93 | 6,29,12 | மங்கையற்கு | மங்கையர்க்கு |
| 62 | 20 | வீரமுறசு | வீரமுரசு |
| 65 | 3 & 4 | கிருத்தி | நிறுத்தி |
| ,, | 24 | பாய்பேட்டார் | பாய்போட்டார் |
| 67 | 14 | பொய் | போய் |
| 68 | 5 | மஞ்சனீர் | மஞ்சனனீர் |
| 70 | 31 | பார்ந்திருந்தார் | பார்த்திருந்தார் |
| 77 | 24 | பறிமாறி | பரிமாறி |
| 80 | 22 | இருபுரம் | இருபுறம் |
| 81 | 16 | சோன்னீரே | சொன்னீரே |